Koviloor Digital Library

ஸ்ரீ:

திருமலை நித்யாநுஸந்தானம்

Acc.No. 30786
4 - 2

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-2

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருமலை நித்யாநுஸந்தாநம்

வெளியிட்டவர்

ஸ்ரீ. உ. வே. புரிசை குமாண்டூர் இளையவில்லி பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமி, திருப்பதி

விரோதி வருடம் திருவாடிப்பூரம்

2009

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. No. 30786

Koviloor Digital Library

எம்பெருமானாரான இராமானுசரின் விருப்பத்திற்கு இணங்க திருமலையில் தோட்டம் அமைத்து ஒழிவில் காலமெல்லாம் தூயமாமலர் கொண்டு அடிமைசெய்து அன்னாரால் ஆண்பிள்ளை என்று பெயரிடப்பட்டு, அன்னாரையே தேவு மற்றில்லாமல் இறையாகக்கொண்ட

அநந்தாழ்வான் வாழி திருநாமம்.

மலையில் வேங்கடவர்க்கு மாமனார் வாழியே
மணிச்சுடர்கொள் அநந்தனென இங்குதித்தோன் வாழியே
உலகுக்கோர்தஞ்சமென உதித்தருள்வோன் வாழியே
உலகுண்டமாலடிமை உகந்தருள்வோன் வாழியே
இலகு சித்திரையில் சித்திரையோன் வாழியே
எந்தை எதிராசர் இணையடியோன் வாழியே
அலர்மேல்மங்கை திருவுக்கு அப்பனார் வாழியே
அநந்தாழ்வாள் திருவடிகள் அநவரதம் வாழியே

எதிராசனான இராமாநுசருக்கு வாழ்நாளில் திருவேங்கடவன் அளித்த அருளிச்செயல்கோஷ்டித்தலைமை, அறங்காக்கும் பொருப்பு, சுமந்து மாமலர், நீர், சுடர், தூபம் கொண்டு செய்யும் அத்தாணிச்சேவகம், வேங்கடக்கோன்தான் உமிழும் பொன்வட்டிலிருந்து முதன்மையாக தீர்த்தம், அவன் பாதம் இறையும் அகலகில்லா ஸ்ரீசடகோபன், அவன் கண்டருளிய பிரஸாதங்களில் பங்கு முதலியவற்றை அநுபவித்து வந்து பின்வந்த ஜீயர் ஸ்வாமிகளும் பெற வகைசெய்த (ஸ்ரீ உ.வே.குமாண்டூர் இளையவில்லி புரிசை பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமியின் ஆசாரியரான)

திருமலை – திருப்பதி பெரியகேள்வியப்பன் பரமஹம்ஸ திருவேங்கட ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியின் தனியன்

கோவிந்த லக்ஷ்மண முநீந்த்ர க்ருபாப்ரதத்த
ஸ்ரீவேங்கடேச வரகிங்கரவ்ருத்தி நிஷ்டம்|
ஸ்ரீமந் நதார்த்திஹர பாதஸரோஜப்ருங்கம்
ஸ்ரீவேங்கடேச முநிவர்யமஹம் ப்ரபத்யே||

வாழி திருநாமம்

கன்னித் திருவோணத்தில் வந்துதித்தான் வாழியே
கனமாமலை வேங்கடவற்கு அடிமை செய்வோன் வாழியே
எதிராசர் பாடியத்தை எடுத்துரைப்போன் வாழியே
ஈடுமுப்பத்தாறாயிரம் இயம்புமவன் வாழியே
மணவாள மாமுனிவன் மலரடியோன் வாழியே
மாதர்கள் கலவிதனை மறுத்த செல்வன் வாழியே
திருமலையின் செல்வத்துக்கு அதிபதியோன் வாழியே
திருவேங்கட மாமுனிவன் திருவடிகள் வாழியே

ஆழ்வார்கள் வாழ அருளிச்செயல்வாழ, தாழ்விலா முன்னோர்கள்தாம் வாழ
வாழ்வாக திருமலையில் மன்னும், திருவேங்கட இராமாநுசமுனியே
இன்னுமொருநூற்றாண்டிரும்.

மங்களம்

ஸ்ரீமதே பூர்ணகாமாய ஸ்ரீசைலகவாஸிநே|
ஸ்ரீவேங்கட யதீந்த்ராய நித்யஸ்ரீர் நித்யமங்களம்||

Koviloor Digital Library



திருமலை-திருப்பதி பெரியகேள்வியப்பன்

பரமஹம்ஸ திருவேங்கடராமாநுஜ ஜீயர் ஸ்வாமி

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ:

4-2

திருமலை – திருப்பதியில் முதலில் ஏகாங்கியாக இருந்து 1942லிருந்து 1983 வரை அத்தாணிச் சேவகம் செய்து தற்காலம் திருவேங்கடமுடையான் திருவடிவாரத்தில் நித்தியவாஸம் செய்யும்

ஸ்ரீ உ.வே. புரிசை குமாண்டூர் இளையவல்லி

பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமியும், தேவிகளும்

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-2

ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பொருளடக்கம்

வரிசை எண்	பொருள்	தொடக்கப்பக்க எண்
	காலைத்தோமாலைஸேவை	
1.	பொதுத்தனியன்கள்	1
2.	திருப்பல்லாண்டு	3
3.	திருப்பள்ளியெழுச்சி	5
4.	திருப்பாவை	9
	திருமஞ்சனம்	
5.	நீராட்டம், வெண்ணெயளைந்த (பெரியாழ்வார் திருமொழி 2–4)	18
6.	நீராட்டம், பின்னைமணாளனை (பெரியாழ்வார் திருமொழி 2–5)	21
	வெள்ளிக்கிழமை திருமஞ்சனத்தையொட்டி அநுஸந்தானம்	
7.	நாச்சியார் திருமொழி[1]	23
8.	சிறியதிருமடல்	51
	மாலைத்தோமாலைஸேவை	
9.	பூச்சூட்டல்[2] (ஆநிரைமேய்க்க, பெரியாழ்வார் திருமொழி 2–7)	59
10.	காப்பிடல் (இந்திரனோடு,பெரியாழ்வார் திருமொழி 2–8)	61
11.	சென்னியோங்கு (பெரியாழ்வார் திருமொழி 5–4)	63
	[விண்ணீலமேலாப்பு, நாச்சியார் திருமொழி – 8[1]]	37
12.	ஊனேறு செல்வத்து[3] (பெருமாள் திருமொழி 4)	65
13.	தாயே தந்தையென்னும்[4] (பெரிய திருமொழி 1–9)	67

Koviloor Digital Library

14. ஊன்வாடவுண்ணாது (பெரிய திருமொழி 3–2)	69
15. வாடமருதிடைபோகி (பெரிய திருமொழி 3–3)	72
16. ஏழையேதலன் (பெரிய திருமொழி 5–8)	74
[ஒழிவில்காலம் (திருவாய்மொழி 3–3)	88
உலகமுண்ட (திருவாய்மொழி 6–10)	94
கங்குலும்பகலும் (திருவாய்மொழி 7–2)	96
ஆழியெழ (திருவாய்மொழி 7–4)][5]	99
17 அமலனாதிபிரான்	77
18 கண்ணிநுண்சிறுத்தாம்பு	79
19 கோயில் திருவாய்மொழி	82
20 இராமனுசநூற்றந்தாதி	109
21 நாலாயிரத்தனியன்கள்	127
22 உபதேசரத்தினமாலை	134
23 திருவாய்மொழி நூற்றந்தாதி	146
24 இயல்சாத்து	162
25 சாத்துமுறை	164
26 ஞானசாரம்	166
27 பிரமேயசாரம்	172
28 ஸப்தகாதை	174
29 ஆழ்வார்கள் வாழி திருநாமம்	175
30 ஒராண்வழி ஆசாரியர்கள் வாழி திருநாமம்	181
31 மங்களச்லோகங்கள்	189

Koviloor Digital Library

குறிப்பு

1. இந்த திவ்ய ப்ரபந்தத்திற்கான தனியன் நாலாயிரத் தனியன்களின் பாசுர எண் 12, பக்க எண் 128 முன்பு ஸேவிக்கப்படுகிறது.

2. வரிசை எண் 9,10,11, அநுஸந்திப்பதற்கு முன் ஸேவிக்கப்படும் தனியன்கள் நாலாயிரத் தனியன்களின் பாசுர எண் 6,7,8, பக்க எண் 127, 128.

3. இந்தப்பதிகம் ஸேவிப்பதற்கு முன்பு நாலாயிரத் தனியன்களின் பாசுர எண் 13, 14, பக்க எண் 128 அநுஸந்திக்கப்படுகின்றன.

4. வரிசை எண் 13–16 ஸேவிப்பதற்கு முன்பு நாலாயிரத் தனியன்களில் பாசுர எண் 22, 23, 24, 25, பக்க எண் 130, அநுஸந்திக்கப்படுகின்றன.

5. இந்தப்பகுதி ஸேவிக்கப்படுவதன் முன் அநுஸந்திக்கப்படும் தனியன்கள் நாலாயிரத் தனியன்களில் பாசுர எண் 38,39,40,41,42, பக்க எண் 132,133.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ :



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

பொதுத் தனியன்கள்

மணவாளமாமுனிகள் தனியன்

நம்பெருமாள் அருளிச்செய்தது

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்|
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம் முநிம் ||

குருபரம்பரைத் தனியன்

கூரத்தாழ்வான் அருளிச்செய்தது

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுந மத்யமாம் |
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்||

எம்பெருமானார் தனியன்

கூரத்தாழ்வான் அருளிச்செய்தது

யோநித்யமச்யுத பதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாயமேநே|
அஸ்மத் குரோர் பகவதோSஸ்ய தயைக ஸிந்தோ :
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே||

நம்மாழ்வார் தனியன்

ஆளவந்தார் அருளிச்செய்தது

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்|
ஆத்யஸ்யந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ||

Koviloor Digital Library

ஆழ்வார்கள், உடையவர் தனியன்
ஸ்ரீ பராசரபட்டர் அருளிச்செய்தது

பூதம் ஸரஸ்ய மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந் |
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோSஸ்மி நித்யம் ||

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழிகளின்
தனியன்கள்
நாதமுனிகள் அருளிச்செய்தது

குருமுகம் அநதீத்ய ப்ராஹ வேதாந் அசேஷாந்
நரபதி பரிக்லுப்தம் சுல்கம் ஆதாது காம: |
ச்வசுரம் அமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜ குல திலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ||

பாண்டியபட்டர் அருளிச்செய்தவை
இருவிகற்பநேரிசை வெண்பா

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்று* ஒருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்* முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம் * கீழ்மையினிற்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டியசங்கம் எடுத்தூத* வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

Koviloor Digital Library 4-2

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

பெரியாழ்வார் அருளிச் செய்த

திருப்பல்லாண்டு*

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!
உன் சேவடி செவ்வி திருக்காப்பு 1

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு*
வடிவாய் நின் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு*
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு*
படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே. 2

வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் கொண்மின்*
கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்*
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள் இராக்கதர் வாழ்* இலங்கை
பாழாளாகப் படை பொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 3

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து எங்கள் குழாம் புகுந்து*
கூடுமனமுடையீர்கள் வரம்பொழிவந்து ஒல்லைக் கூடுமினோ*
நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணாயவென்று*
பாடு மனமுடைப் பத்தருள்ளீர் வந்து பல்லாண்டு கூறுமினே. 4

அண்டக் குலத்துக்கதிபதியாகி அசுரர் இராக்கதரை*
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த இருடீகேசன் தனக்கு*
தொண்டக் குலத்திலுள்ளீர் வந்தடிதொழுது ஆயிரநாமம் சொல்லி*
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே.
5

---

* திருமலையில் காலைத் தோமாலை (ஸ்தோத்திரமாலை, தோள்மாலை) ஸேவையில் அநுஸந்திப்பதில்லை.

Koviloor Digital Library

எந்தை தந்தை தந்தை தந்தைதம் மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி*
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் * திருவோணத் திருவிழவில்
அந்தியம்போதில் அரி உருவாகி அரியை அழித்தவனை *
பந்தனை தீரப்பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே* 6

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச்சக்கரத்தின்*
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று குடிகுடி ஆட்செய்கின்றோம்*
மாயப் பொருபடை வாணனை ஆயிரம் தோளும் பொழிகுருதி
பாய * சுழற்றிய ஆழி வல்லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 7

நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச் சேவகமும்*
கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும்*
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து என்னை வெள்ளுயிர் ஆக்கவல்ல*
பையுடைநாகப்பகைக் கொடியானுக்குப் பல்லாண்டு கூறுவனே. 8

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் கலத்தது உண்டு*
தொடுத்த துழாய்மலர் சூடிக்களைந்தன சூடும் இத்தொண்டர்களோம்*
விடுத்த திசைக்கருமம் திருத்தித் திருவோணத் திருவிழவில்*
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் பல்லாண்டு கூறுதுமே
9

எந்நாள் எம்பெருமான் உன்தனக்கு அடியோம் என்று எழுத்துப்பட்ட
அந்நாளே* அடியோங்கள் அடிக்குடில் வீடு பெற்று உய்ந்ததுகாண்*
செந்நாள் தோற்றித் திருமதுரையுள் சிலை குனித்து* ஐந்தலைய
பைந்நாகத் தலைப் பாய்ந்தவனே! உன்னைப் பல்லாண்டு கூறுதுமே 10

**அல்வழக்கு ஒன்றுமில்லா அணி கோட்டியர்கோன்* அபிமானதுங்கன்
செல்வனைப் போலத் திருமாலே! நானும் உனக்குப் பழவடியேன்*
நல்வகையால் நமோ நாராயணா என்று நாமம் பல பரவி*
பல்வகையாலும் பவித்திரனே! உன்னைப் பல்லாண்டு கூறுவனே 11

**பல்லாண்டென்று பவித்திரனைப் பரமேட்டியை சார்ங்கம் என்னும்
வில் ஆண்டான் தன்னை வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல்*
நல்லாண்டென்று நவின்று உரைப்பார் நமோ நாராயணாய என்று*
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்து இருந்து ஏத்துவர் பல்லாண்டே 12

Koviloor Digital Library

அடிவரவு : பல் அடி வாழ் ஏடு அண்டம் எந்தை தீ நெய் உடுத்து எந்நாள் அல்வழக்கு பல்லாண்டு வண்ணம்.

ஆதிகூறுதும், அனந்தரம் கூறுமின், அண்டம் என்மின், எந்தைபாடுதும், தீ உடுத்து எந்நாள் கூறுதும், நெய்யும் அல்லும் கூறுவனே.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

திருப்பள்ளியெழுச்சி

தனியன்கள்

திருமாலையாண்டான் அருளிச்செய்தது

தமேவ மத்வா பரவாஸுதேவம்
ரங்கேசயம் ராஜவத ர்ஹணீயம்|
ப்ராபோதிகீம் யோடக்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரிரேணும் பகவந்தம் ஈடே||

மண்டங்குடி என்பர் மாமறையோர்* மன்னிய சீர்த்
தொண்டரடிப்பொடி தொன்னகரம்* வண்டு
திணர்த்த வயல் தென் அரங்கத்தம்மானைப்* பள்ளி
உணர்த்தும் பிரான் உதித்தஊர்.

**கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
கனையிருள் அகன்றது காலையம்பொழுதாய்*
மது விரிந்து ஒழுகின மாமலரெல்லாம்
வானவர் அரசர்கள் வந்து வந்தீண்டி*
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்*
அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்து அருளாயே. 1

Koviloor Digital Library

கொழுங்கொடி முல்லையின் கொழுமலர் அணவிக்
கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ*
எழுந்தன மலரணைப் பள்ளிக்கொள் அன்னம்
ஈன்பனி நனைந்த தம் இருஞ்சிறகு உதறி*
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள் எயிறு உற அதன் விடத்தினுக்கு அனுங்கி*
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்து அருளாயே. 2

சுடரொளி பரந்தன சூழ்திசை எல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி*
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ
பாயிருள் அகன்றது, பைம்பொழில் கமுகின்*
மடலிடைக் கீறி வண்பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ*
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்து அருளாயே 3

மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்
வேய்ங்குழல் ஓசையும் விடைமணிக் குரலும்*
ஈட்டிய இசை திசை பரந்தன, வயலுள்
இரிந்தன சுரும்பினம், இலங்கையர் குலத்தை*
வாட்டிய வரிசிலை வானவர் ஏறே!
மாமுனி வேள்வியைக் காத்து* அவபிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தி எம்மரசே!
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்து அருளாயே. 4

புலம்பின புட்களும் பூம்பொழில்களின் வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி*
கலந்தது குணதிசைக் கனை கடல் அரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த*

Koviloor Digital Library

அலங்கல் அந்தொடையல் கொண்டு அடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா!*
இலங்கையர்கோன் வழிபாடு செய் கோயில்
எம்பெருமான்! பள்ளியெழுந்து அருளாயே. 5

இரவியர் மணிநெடும்தேரொடும் இவரோ!
இறையவர் பதினொரு விடையரும் இவரோ*
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ
மருதரம் வசுக்களும் வந்து வந்தீண்டி*
புரவியோடு ஆடலும் பாடலும் தேரும்
குமரதண்டம் புகுந்தீண்டிய வெள்ளம்*
அருவரை அனைய நின்கோயில் முன் இவரோ
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்து அருளாயே. 6

அந்தரத்து அமரர்கள் கூட்டங்கள் இவையோ
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ*
இந்திரன் ஆனையும் தானும் வந்து இவனோ
எம்பெருமான் உன கோயிலின் வாசல்*
சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடித் தொழுவான்*
அந்தரம் பாரிடம் இல்லை மற்றிதுவோ
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்து அருளாயே. 7

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலை ஒண் கண்ணாடி முதலா*
எம்பெருமான் படிமைக்கலம் காண்டற்கு
ஏற்பனவாயின கொண்டு நன்முனிவர்*
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ
தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி*
அம்பரதலத்தில் நின்று அகல்கின்றது இருள்போய்
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்து அருளாயே. 8

Koviloor Digital Library

**ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி
யாழ் குழல் முழவமோடு இசை திசைகெழுமி*
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
கந்தருவரவர் கங்குலுள் எல்லாம்*
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடித் தொழுவான்*
ஆதலில் அவர்க்கு நாள் ஒலக்கம் அருள
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்து அருளாயே. 9

**கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ*
துடியிடையார் சுரிகுழல் பிழிந்து உதறித்
துகிலுடுத்து ஏறினர் சூழ்புனல் அரங்கா!*
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி என்னும்
அடியனை* அளியன் என்று அருளி உன்னடியார்க்கு
ஆட்படுத்தாய்! பள்ளியெழுந்து அருளாயே 10

அடிவரவு : கதிர், கொழு, சுடர், மேட்டு, புலம், இரவியர், அந்தரம், வம்பு, ஏதம், கடி, அமலன்

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

தனியன்கள்

ஸ்ரீ பராசரபட்டர் அருளிச்செய்தது

நீளா துங்க ஸ்தநகிரிதடீஸுப்தம் உத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிசத சிரஸ்ஸித்தம் அத்யாபயந்தீ|
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய :||

உய்யக்கொண்டார் அருளிச்செய்தவை

அன்னவயல் புதுவை ஆண்டாள்* அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம் * இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை * பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே!* தொல்பாவை
பாடி அருளவல்ல பல்வளையாய்! நாடி நீ
வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம்*
நாம் கடவாவண்ணமே நல்கு.

**மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்*
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்*
சீர்மல்கும்ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்*
கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்*
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம்போல் முகத்தான்*
நாராயணனே நமக்கே பறைதருவான்*
பாரோர் புகழப் படிந்து ஏல் ஓர் எம்பாவாய்.

வையத்து வாழ்வீர்கள்! நாமும் நம் பாவைக்குச்*
செய்யும் கிரிசைகள் கேளீரோ* பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி*
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி*

Koviloor Digital Library

மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்*
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்*
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி*
உய்யுமாறு எண்ணி உகந்து ஏல் ஓர் எம்பாவாய். 2

**ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி*
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்*
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து*
ஓங்கு பெருஞ்செந்நெலூடு கயலுகள*
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப*
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக்* குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்*
நீங்காத செல்வம் நிறைந்து ஏல் ஓர் எம்பாவாய். 3

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்*
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி*
ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து*
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்*
ஆழிபோல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து*
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்*
வாழ உலகினிற் பெய்திடாய்* நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்து ஏல் ஓர் எம்பாவாய். 4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை*
தூயபெருநீர் யமுனைத் துறைவனை*
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை*
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை*
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது*
வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்க*
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்*
தீயினில் தூசாகும் செப்பு ஏல் ஓர் எம்பாவாய். 5

புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயில்*
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ ?*

Koviloor Digital Library

பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு*
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி*
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை*
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்*
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்*
உள்ளம் புகுந்து குளிர்ந்து ஏல் ஓர் எம்பாவாய். 6

கீசுகீசு என்றெங்கும் ஆனைச் சாத்தன்* கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப் பெண்ணே*
காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து*
வாச நறுங்குழல் ஆய்ச்சியர்* மத்தினால்
ஓசை படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ?*
நாயகப் பெண் பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி*
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?*
தேசமுடையாய்! திற ஏல் ஓர் எம்பாவாய். 7

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு*
மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும்*
போவான் போகின்றாரைப் போகாமற் காத்து* உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம்* கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு*
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய*
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்*
ஆவாவென்று ஆராய்ந்து அருள் ஏல் ஓர் எம்பாவாய். 8

தூமணிமாடத்துச் சுற்றும் விளக்கெரிய*
தூபம் கமழத் துயிலணை மேல் கண்வளரும்*
மாமான் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்*
மாமீர்! அவளை எழுப்பீரோ?* உன் மகள் தான்
ஊமையோ? அன்றிச்செவிடோ? அனந்தலோ?*
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?*
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று*
நாமம் பலவும் நவின்று ஏல் ஓர் எம்பாவாய். 9

Koviloor Digital Library

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!*
மாற்றமும் தாராரோ ? வாசல் திறவாதார்*
நாற்றத் துழாய்முடி நாராயணன்* நம்மால்
போற்றப் பறை தரும் புண்ணியனால் * பண்டொருநாள்
கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகருணனும்*
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ ?*
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!*
தேற்றமாய் வந்து திற ஏல் ஓர் எம்பாவாய். 10

கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து*
செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்*
குற்றம் ஒன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே*
புற்று அரவு அல்குல் புனமயிலே போதராய்*
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்து* நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர் பாட*
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி* நீ
எற்றுக்கு உறங்கும் பொருள் ஏல் ஓர் எம்பாவாய். 11

கனைத்து இளங்கற்றெருமை கன்றுக் கிரங்கி*
நினைத்து முலை வழியே நின்று பால் சோர*
நனைத்து இல்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்*
பனித்தலை வீழ நின் வாசற் கடைபற்றி*
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற*
மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய் திறவாய்*
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம் ?*
அனைத்து இல்லத்தாரும் அறிந்து ஏல் ஓர் எம்பாவாய். 12

புள்ளின் வாய் கீண்டானைப்* பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்*
பிள்ளைகள் எல்லாரும் பாவைக்களம் புக்கார்*
வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று*

Koviloor Digital Library

புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்*
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே*
பள்ளிக் கிடத்தியோ? பாவாய் நீ நன்னாளால்*
கள்ளம் தவிர்ந்து கலந்து ஏல் ஓர் எம்பாவாய். 13

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்*
செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்*
செங்கற் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர்*
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்*
எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும்*
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்!*
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்*
பங்கயக் கண்ணானைப் பாடு ஏல் ஓர் எம்பாவாய். 14

எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?*
சில்லென்று அழையேன்மின் நங்கைமீர்! போதர்கின்றேன்*
வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன் வாயறிதும்*
வல்லீர்கள் நீங்களே நானேதானாயிடுக*
ஒல்லை நீபோதாய் உனக்கு என்ன வேறுடையை*
எல்லாரும்போந்தாரோ? போந்தார், போந்து எண்ணிக்கொள்*
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை* மாயனைப் பாடு ஏல் ஓர் எம்பாவாய். 15

**நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில் காப்பானே!* கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே!* மணிக் கதவம் தாள் திறவாய்*
ஆயர் சிறுமியரோமுக்கு * அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்*
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்*
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா!* நீ
நேய நிலைக் கதவம் நீக்கு ஏல் ஓர் எம்பாவாய். 16

Koviloor Digital Library

அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும்*
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய்*
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!*
எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய்*
அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த*
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்*
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா*
உம்பியும் நீயும் உறங்கேல் ஓர் எம்பாவாய். 17

**உந்து மதகளிற்றன் ஓடாத தோள் வலியன்*
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னாய்*
கந்தம் கமழும் குழலி கடை திறவாய்*
வந்து எங்கும் கோழி அழைத்தன காண்* மாதவிப்
பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள் கூவின காண்*
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர் பாட*
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப*
வந்து திறவாய் மகிழ்ந்து ஏல் ஓர் எம்பாவாய். 18

குத்துவிளக்கு எரியக் கோட்டுக்கால் கட்டில் மேல்*
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி*
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்*
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய் திறவாய்*
மைத்தடங்கண்ணினாய்! நீ உன் மணாளனை*
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய் காண்*
எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால்*
தத்துவம் அன்று தகவு ஏல் ஓர் எம்பாவாய். 19

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று*
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்*
செப்பம் உடையாய் திறல் உடையாய்* செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயில் எழாய்*
செப்பன்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்*
நப்பின்னை நங்காய்! திருவே! துயில் எழாய்*
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை*
இப்போதே எம்மை நீராட்டு ஏல் ஓர் எம்பாவாய். 20

Koviloor Digital Library

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப*
மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்*
ஆற்றப்படைத்தான் மகனே அறிவுறாய்*
ஊற்றம் உடையாய் பெரியாய்* உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே துயில் எழாய்*
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன் வாசற் கண்*
ஆற்றாது வந்து உன் அடி பணியுமா போலே*
போற்றி யாம் வந்தோம் புகழ்ந்து ஏல் ஓர் எம்பாவாய். 21

அங்கண் மாஞாலத்து அரசர்* அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிக் கட்டில் கீழே*
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்*
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே*
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ ?*
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்*
அங்கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்*
எங்கள்மேல் சாபம் இழிந்து ஏல் ஓர் எம்பாவாய். 22

**மாரி மலை முழைஞ்சில் மன்னிக்கிடந்து உறங்கும்*
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து*
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி*
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு*
போதருமா போலே நீ பூவைப் பூவண்ணா!* உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளி* கோப்புடைய
சீரிய சிங்காசனத்து இருந்து* யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருள் ஏல் ஓர் எம்பாவாய். 23

**அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி*
சென்று அங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல் போற்றி*
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ் போற்றி*
கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி*

Koviloor Digital Library

குன்று குடையா எடுத்தாய்! குணம் போற்றி*
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி*
என்றென்று உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்*
இன்று யாம் வந்தோம் இரங்கு ஏல் ஓர் எம்பாவாய். 24

ஒருத்தி மகனாய்ப் பிறந்து * ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்*
தரிக்கிலானாகித் தான் தீங்கு நினைந்த*
கருத்தைப் பிழைப்பித்துக்* கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே* உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்*
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி*
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து ஏல் ஓர் எம்பாவாய். 25

மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்*
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்*
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன*
பாலன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே*
போல்வன சங்கங்கள் போய்ப்பாடு உடையனவே*
சாலப் பெரும் பறையே பல்லாண்டு இசைப்பாரே*
கோல விளக்கே கொடியே விதானமே*
ஆலின் இலையாய் அருள் ஏல் ஓர் எம்பாவாய். 26

**கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா!* உன்தன்னைப்
பாடிப் பறை கொண்டு யாம் பெறு சம்மானம்*
நாடு புகழும் பரிசினால் நன்றாக*
சூடகமே தோள் வளையே தோடே செவிப் பூவே*
பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்*
ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற்சோறு*
மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்*
கூடி இருந்து குளிர்ந்து ஏல் ஓர் எம்பாவாய். 27

Koviloor Digital Library

கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம்*
அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து* உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாம் உடையோம்*
குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தா* உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது*
அறியாதபிள்ளைகளோம் அன்பினால்* உன் தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே*
இறைவா! நீ தாராய் பறை ஏல் ஓர் எம்பாவாய். 28

**சிற்றம் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து* உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்*
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து * நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது*
இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா!*
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்* உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்*
மற்றை நம் காமங்கள் மாற்று ஏல் ஓர் எம்பாவாய். 29

**வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை*
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி*
அங்கப்பறை கொண்டவாற்றை* அணி புதுவைப்
பைங்கமலத் தண்தெரியற் பட்டர்பிரான் கோதை சொன்ன*
சங்கத் தமிழ்மாலை முப்பதும், தப்பாமே*
இங்கு இப் பரிசுரைப்பார், ஈரிரண்டு மால்வரைத் தோள்*
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்*
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய் 30

அடிவரவு : மார்கழி, வையம், ஓங்கி, ஆழி, மாயன், புள்ளும், கீசு, கீழ் வானம், தூமணி, நோற்று, கற்று, கனைத்து, புள், உங்கள், எல்லே, நாயகன், அம்பரம், உந்து, குத்து, முப்பத்து, ஏற்ற, அங்கண், மாரி, அன்று, ஒருத்தி, மாலே, கூடாரை, கறவை, சிற்றம், வங்கம், தை

Koviloor Digital Library

வேதப்பிரான் பட்டர் அருளியவை ✶

கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழும் ஊர்
சோதி மணிமாடம் தோன்றும் ஊர்
நீதியால் நல்ல பத்தர் வாழும் ஊர் நான்மறைகள் ஓதும் ஊர்
வில்லிபுத்தூர் வேதக்கோன் ஊர்.

பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும்; கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.

நீராட்டம்

பெரியாழ்வார் திருமொழி 2 – 4

**வெண்ணெய் அளைந்த குணுங்கும் விளையாடு புழுதியும் கொண்டு*
திண்ணென இவ்விரா உன்னைத் தேய்த்துக்கிடக்க நான் ஒட்டேன்*
எண்ணெய் புளிப்பழங் கொண்டு இங்கு எத்தனை போதும் இருந்தேன்*
நண்ணலரிய பிரானே! நாரணா! நீராடவாராய் 1

கன்றுகள் ஓடச் செவியில் கட்டெறும்பு பிடித்து இட்டால்*
தென்றிக் கெடுமாகில் வெண்ணெய் திரட்டி விழுங்குமா காண்பன்*
நின்ற மராமரம் சாய்த்தாய்! நீ பிறந்த திருவோணம்*
இன்று நீ நீராட வேண்டும் எம்பிரான்! ஓடாதே வாராய். 2

பேய்ச்சி முலை உண்ணக் கண்டு பின்னையும் நில்லாது என்னெஞ்சம்*
ஆய்ச்சியர் எல்லாரும் கூடி அழைக்கவும் நான் முலை தந்தேன்*
காய்ச்சின நீரொடு நெல்லி கடாரத்தில் பூரித்து வைத்தேன்*
வாய்த்த புகழ் மணிவண்ணா! மஞ்சனமாட நீவாராய் 3

✶ மார்கழி மாதத்தில் மட்டும் அநுஸந்திக்கப்படுமவை.

Koviloor Digital Library

கஞ்சன் புணர்ப்பினில் வந்த கடிய சகடம் உதைத்து*
வஞ்சகப் பேய்மகள் துஞ்ச வாய் முலை வைத்த பிரானே!*
மஞ்சளும் செங்கழுநீரின் வாசிகையும் நாறு சாந்தும்*
அஞ்சனமும் கொண்டு வைத்தேன் அழகனே! நீராட வாராய் 4

அப்பம் கலந்த சிற்றுண்டி அக்காரம் பாலில் கலந்து*
சொப்பட நான் சுட்டுவைத்தேன் தின்னலுறுதியேல் நம்பீ!*
செப்பிள மென்முலையார்கள் சிறுபுறம் பேசிச் சிரிப்பர்*
சொப்பட நீராட வேண்டும் சோத்தம் பிரான்! இங்கே வாராய் 5

எண்ணெய்க் குடத்தை உருட்டி இளம்பிள்ளை கிள்ளி எழுப்பி*
கண்ணைப் புரட்டி விழித்துக் கழைகண்டு செய்யும் பிரானே!*
உண்ணக் கனிகள் தருவன் ஒலிகடலோத நீர்போலே*
வண்ணம் அழகிய நம்பீ! மஞ்சனமாட நீவாராய். 6

கறந்த நற்பாலும் தயிரும் கடைந்து உறிமேல் வைத்த வெண்ணெய்*
பிறந்ததுவே முதலாகப் பெற்றறியேன் எம்பிரானே!*
சிறந்த நல்தாய் அலர் தூற்றும் என்பதனால் பிறர் முன்னே*
மறந்தும் உரையாட மாட்டேன் மஞ்சனமாட நீவாராய் 7

கன்றினை வாலோலை கட்டிக் கனிகள் உதிர எறிந்து*
பின்தொடர்ந்தோடி ஓர் பாம்பைப் பிடித்துக்கொண்டு ஆட்டினாய் போலும்*
நின் திறத்தேன் அல்லேன் நம்பீ! நீ பிறந்த திருநன்னாள்*
நன்று நீ நீராட வேண்டும் நாரணா! ஓடாதே வாராய். 8

பூணித் தொழுவினில் புக்குப் புழுதி அளைந்த பொன்மேனி*
காணப் பெரிதும் உகப்பன் ஆகிலும் கண்டார் பழிப்பார்*
நாண் எத்தனையும் இலாதாய் நப்பின்னை காணில் சிரிக்கும்*
மாணிக்கமே! என் மணியே! மஞ்சனமாட நீ வாராய். 9

**கார்மலி மேனி நிறத்துக் கண்ணபிரானை உகந்து*
வார்மலி கொங்கை யசோதை மஞ்சனம் ஆட்டியவாற்றை*

Koviloor Digital Library
பார்மலி தொல் புதுவைக்கோன் பட்டர்பிரான் சொன்ன பாடல்*
சீர்மலி செந்தமிழ் வல்லார் தீவினை யாதுமிலரே 10

அடிவரவு: வெண்ணெய் கன்று பேய்ச்சி கஞ்சன் அப்பம் எண்ணெய் கறந்த கன்றினை பூணி கார் பின்னை.

திருமஞ்சன காலத்தில்

கீழ்க்கண்ட ஐந்து பாசுரங்களையும் சேர்த்து சேவிப்பது வழக்கம்

முன் பொலா இராவணன்தன் முதுமதிள் இலங்கை வேவித்து*
அன்பினால் அனுமன் வந்து ஆங்கு அடியிணை பணிய நின்றார்க்கு*
என்பெலாம் உருகியுக்கிட்டு என்னுடைய நெஞ்சம் என்னும்*
அன்பினால் ஞானநீர் கொண்டு ஆட்டுவன் அடியனேனே.

(திருக்குறுந்தாண்டகம் – 15)

மாயமான் மாயச் செற்று மருதிற நடந்து* வையம்
தாய மாபரவை பொங்கத் தடவரை திரித்து* வானோர்க்கு
ஈயும்மால் எம்பிரானார்க்கு என்னுடைச் சொற்களென்னும்*
தூய மாமாலை கொண்டு சூட்டுவன் தொண்டனேனே.

(திருக்குறுந்தாண்டகம் – 16)

சூட்டு நன்மாலைகள் தூயன ஏந்தி* விண்ணோர்கள் நன்னீர்
ஆட்டி அந்தூபம் தராநிற்கவே அங்கு* ஓர் மாயையினால்
ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்து இமிலேற்று வன்கூன்
கோட்டிடை ஆடினை கூத்து* அடலாயர் தம் கொம்பினுக்கே

(திருவிருத்தம் – 21)

காடுகளூடுபோய்க் கன்றுகள் மேய்ந்து மறியோடி* கார்க்கோடற்பூச்
சூடி வருகின்ற தாமோதரா கற்றுத்தூளி காண் உன் உடம்பு*
பேடை மயில் சாயல் பின்னை மணாளா! நீராட்டமைத்து வைத்தேன்
ஆடி அமுது செய் அப்பனும் உண்டிலன் உன்னோடு உடனே உண்பான்.

(பெரியாழ்வார் திருமொழி 3–3–3)

திண்ணார் வெண் சங்குடையாய்! திருநாள் திருவோணம் இன்று ஏழுநாள்* முன்
பண்ணோர் மொழி யாரைக் கூவி முளையட்டிப் பல்லாண்டு கூறுவித்தேன்*
கண்ணாலம் செய்யக் கறியும் கலத்தது அரிசியும் ஆக்கி வைத்தேன்*
கண்ணா! நீ நாளைத்தொட்டுக் கன்றின்பின் போகேல் கோலஞ்
செய்து இங்கே இரு

(பெரியாழ்வார் திருமொழி 3–3–9)

Koviloor Digital Library

பெரியாழ்வார் திருமொழி இரண்டாம் பத்து ✶
ஐந்தாம் திருமொழி - பின்னைமணாளனை

கண்ணன்குழல் வாரக் காக்கையை வாவெனல்
கலித்தாழிசை

**பின்னைமணாளனைப் பேரில்கிடந்தானை*
முன்னையமரர் முதல்தனிவித்தினை*
என்னையும் எங்கள் குடிமுழுது ஆட்கொண்ட*
மன்னனைவந்து குழல்வாராய் அக்காக்காய்
மாதவன்தன் குழல்வாராய் அக்காக்காய். 1

பேயின்முலையுண்ட பிள்ளை இவன், முன்னம்*
மாயச்சகடும் மருதும் இறுத்தவன்*
காயாமலர்வண்ணன் கண்ணன்கருங்குழல்*
தூய்தாக வந்து குழல்வாராய் அக்காக்காய்
தூமணிவண்ணன் குழல்வாராய் அக்காக்காய். 2

திண்ணக்கலத்தில் திரையுறி மேல்வைத்த*
வெண்ணெய்விழுங்கி விரையஉறங்கிடும்*
அண்ணல் அமரர்பெருமானை* ஆயர்தம்
கண்ணனை வந்து குழல்வாராய் அக்காக்காய்
கார்முகில்வண்ணன் குழல்வாராய் அக்காக்காய். 3

பள்ளத்தில்மேயும் பறவையுருக்கொண்டு*
கள்ளவசுரன்வருவானைத் தான்கண்டு*
புள்ளிதுவென்று பொதுக்கோ வாய்கீண்டிட்ட*
பிள்ளையை வந்து குழல்வாராய் அக்காக்காய்
பேய்முலையுண்டான் குழல்வாராய் அக்காக்காய். 4

கற்றினம்மேய்த்துக் கனிக்கு ஒருகன்றினை*
பற்றியெறிந்த பரமன்திருமுடி*
உற்றன பேசி நீ ஒடித்திரியாதே*

✶ திருமலையில் திருமஞ்சனகாலத்தில் சிறப்பாக அநுஸந்திக்கப்படுபவை.

Koviloor Digital Library

அற்றைக்கும் வந்து குழல்வாராய் அக்காக்காய்
ஆழியான்தன் குழல்வாராய் அக்காக்காய். 5

கிழக்கில் குடிமன்னர் கேடிலாதாரை*
அழிப்பான் நினைந்திட்டு அவ்வாழியதனால்*
விழிக்குமளவிலே வேரறுத்தானை
குழற்கு அணியாகக் குழல்வாராய் அக்காக்காய்.
கோவிந்தன்தன் குழல்வாராய் அக்காக்காய். 6

பிண்டத்திரளையும் பேய்க்கு இட்ட நீர்ச்சோறும்*
உண்டற்குவேண்டி நீ ஓடித்திரியாதே*
அண்டத்து அமரர்பெருமான் அழகமர்*
வண்டொத்திருண்டகுழல்வாராய் அக்காக்காய்
மாயவன்தன்குழல்வாராய் அக்காக்காய். 7

உந்தியெழுந்த உருவமலர்தன்னில்*
சந்தச்சதுமுகன்தன்னைப் படைத்தவன்*
கொந்தக்குழலைக் குறந்து புளியட்டி*
தந்தத்தின்சீப்பால் குழல்வாராய் அக்காக்காய்
தாமோதரன் தன்குழல்வாராய் அக்காக்காய். 8

மன்னன்தன் தேவிமார் கண்டு மகிழ்வெய்த*
முன்இவ்வுலகினை முற்றும் அளந்தவன்*
பொன்னின் முடியினைப் பூவணைமேல்வைத்து*
பின்னேயிருந்து குழல்வாராய் அக்காக்காய்
பேராயிரத்தான் குழல்வாராய் அக்காக்காய் 9

தரவு கொச்சகக்கலிப்பா

**கண்டார் பழியாமே அக்காக்காய்* கார்வண்ணன்
வண்டார்குழல்வார வாவென்ற ஆய்ச்சிசொல்*
விண்தோய்மதிள் வில்லிபுத்தூர்க்கோன் பட்டன்சொல்*
கொண்டாடிப்பாடக் குறுகா வினைதாமே 10

அடிவரவு : பின்னை பேயின் திண்ணம் பள்ளத்தில் கற்றினம் கிழக்கில் பிண்டம் உந்தி மன்னன் கண்டார்வேலி.

Koviloor Digital Library

ஸ்ரீ கோவிந்தராஜர் - ஆண்டாள், திருப்பதி

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஆண்டாள் அருளிச்செய்த நாச்சியார் திருமொழி*

முதல் திருமொழி – தையொருதிங்களும்

கண்ணனோடு கூட்டும்படி காமனைத் தொழுதல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

**தையொருதிங்களும் தரைவிளக்கித் தண்மண்டலமிட்டுமாசி முன்னாள்*
ஐயநுண்மணற்கொண்டு தெருவணிந்து அழகினுக்கலங்கரித்து அனங்கதேவா!*
உய்யவுமாங்கொலோவென்று சொல்லி உன்னையும் உம்பியையும் தொழுதேன்*
வெய்யதோர் தழலுமிழ்சக்கரக்கை வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே. 1

வெள்ளைநுண்மணற்கொண்டு தெருவணிந்து வெள்வரைப்பதன்முன்னம் துறைபடிந்து*
முள்ளுமில்லாச்சுள்ளியெரிமடுத்து முயன்று உன்னை நோற்கின்றேன் காமதேவா*
கள்ளவிழ்பூங்கணைதொடுத்துக்கொண்டு கடல்வண்ணனென்பதோர்பேரெழுதி!*
புள்ளினைவாய்பிளந்தானென்பது ஓர் இலக்கினில் புக என்னை எய்கிற்றியே. 2.

மத்தநன்னறுமலர் முருக்கமலர் கொண்டு முப்போதும் உன்னடி வணங்கி*
தத்துவமிலியென்று நெஞ்செரிந்து வாசகத்தழித்து உன்னைவைதிடாமே*
கொத்தலர்பூங்கணை தொடுத்துக்கொண்டு கோவிந்தனென்பதோர்பேரெழுதி*
வித்தகன்வேங்கடவாணனென்னும் விளக்கினில்புக என்னை விதிக்கிற்றியே. 3

சுவரில்புராண நின்பேரெழுதிச் சுறவநற்கொடிக்களும் துரங்கங்களும்*
கவரிப்பிணாக்களும் கருப்புவில்லும் காட்டித்தந்தேன் கண்டாய்காமதேவா!*
அவரைப்பிராயம் தொடங்கி என்றும் ஆதரித்தெழுந்த என் தடமுலைகள்*
துவரைப்பிரானுக்கேசங்கற்பித்துத் தொழுதுவைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே. 4

வானிடைவாழும் அவ்வானவர்க்கு மறையவர்வேள்வியில்வகுத்த அவி*
கானிடைத்திரிவதோர் நரிபுகுந்து கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப*
ஊனிடையாழிசங்கு உத்தமர்க்கென்று உன்னித்தெழுந்த என் தடமுலைகள்*
மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே!. 5

---

* வெள்ளிக்கிழமை திருவேங்கடமுடையான் திருமஞ்சனத்திற்குப்பின் அநுஸந்தானம்.

Koviloor Digital Library

உருவுடையார் இளையார்கள் நல்லார் ஒத்துவல்லார்களைக்கொண்டு* வைகல்
தெருவிடை எதிர்கொண்டு பங்குனிநாள் திருந்தவே நோற்கின்றேன் காமதேவா*
கருவுடைமுகில்வண்ணன்காயாவண்ணன் கருவிளைபோல் வண்ணன்* கமலவண்ணத்
திருவுடைமுகத்தினில் திருக்கண்களால் திருந்தவேநோக்கெனக் கருள்கண்டாய். 6

காயுடைநெல்லோடு கரும்பமைத்துக் கட்டி அரிசிஅவலமைத்து*
வாயுடைமறையவர்மந்திரத்தால் மன்மதனே, உன்னை வணங்குகின்றேன்*
தேசமுன்னளந்தவன் திரிவிக்கிரமன் திருக்கைகளால் என்னைத் தீண்டும்வண்ணம்*
சாயுடைவயிறும் என்தடமுலையும் தரணியில் தலைப்புகழ்தரக்கிற்றியே 7

மாசுடையுடம்பொடுதலையுலறி வாய்ப்புறம்வெளுத்து ஒருபோது முண்டு*
தேசுடைத்திறலுடைக்காமதேவா! நோற்கின்றநோன்பினைக் குறிக்கொள்கண்டாய்*
பேசுவதொன்றுண்டு இங்குஎம்பெருமான் பெண்மையைத்தலையுடைத்தாக்கும் வண்ணம்*
கேசவநம்பியைக்கால்பிடிப்பா ளென்னும் இப்பேறு எனக்கு அருள்கண்டாய் 8

தொழுது முப்போதும் உன்னடிவணங்கித் தூமலர்தூய்த்தொழுதேத்துகின்றேன்*
பழுதின்றிப்பார்க்கடல்வண்ணனுக்கே பணிசெய்துவாழப்பெறாவிடில்* நான்
அழுது அழுது அலமந்து அம்மாவழங்க ஆற்றவும் அது உனக்கு உறைக்கும்கண்டாய்*
உழுவதோரெருத்தினை. நுகங்கொடுபாய்ந்து ஊட்டமின்றித்துரந்தாலொக்குமே. 9

**கருப்புவில்மலர்க்கணைக்காமவேளைக் கழலிணை பணிந்து அங்கு ஓர் கரியலற*
மருப்பினையொசித்துப்புள்வாய்பிளந்த மணிவண்ணற்கு என்னைவகுத்திடென்று*
பொருப்பன்னமாடம் பொலிந்துதோன்றும் புதுவையர்கோன் விட்டுசித்தன் கோதை*
விருப்புடையின்தமிழ்மாலைவல்லார் விண்ணவர்கோனடிநண்ணுவரே. 10

அடிவரவு : தை வெள்ளை மத்தம் சுவரில் வானிடை உரு காயுடை மாசுடை தொழுது கருப்பு நாமம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

இரண்டாம் திருமொழி - நாமமாயிரம்

இடைப்பெண்கள் சிற்றில்சிதைக்கவேண்டாவென்று கண்ணனை வேண்டுதல்

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

**நாமமாயிரம் ஏத்தநின்ற நாராயணா நரனே* உன்னை
மாமிதன் மகனாகப்பெற்றால் எமக்கு வாதை தவிருமே*
காமன் போதருகாலமென்று பங்குனிநாள் கடைபாரித்தோம்*
தீமைசெய்யும் சிரீதரா! எங்கள் சிற்றில் வந்துசிதையேலே. 1

இன்றுமுற்றும் முதுகுநோவ இருந்திழைத்த இச்சிற்றிலை*
நன்றும் கண்ணுறநோக்கி நாங்கொளும் ஆர்வந்தன்னைத்தணிகிடாய்*
அன்று பாலகனாகி ஆலிலைமேல்துயின்ற எம்மாதியாய்!*
என்றும் உன்தனக்கு எங்கள்மேல் இரக்கமெழாதது எம்பாவமே. 2

குன்றுநீருறைகோளரீ! மதயானைகோள்விடுத்தாய்* உன்னைக்
கண்டுமாலுறுவோங்களைக் கடைக்கண்களாலிட்டு வாதியேல்*
வண்டல்நுண்மணல் தெள்ளி யாம் வளைக்கைகளால்சிரமப்பட்டோம்*
தெண்திரைக்கடற்பள்ளியாய் எங்கள் சிற்றில் வந்துசிதையேலே. 3

பெய்யுமாமுகில்போல்வண்ணா உன்தன் பேச்சும்செய்கையும்* எங்களை
மையலேற்றிமயக்க உன்முகம் மாயமந்திரந்தான்கொலோ?
நொய்யர்பிள்ளைகளென்பதற்கு உன்னைநோவ நாங்கள் உரைக்கிலோம்*
செய்யதாமரைக்கண்ணினாய் எங்கள் சிற்றில் வந்துசிதையேலே. 4

வெள்ளைநுண்மணற்கொண்டு சிற்றில் விசித்திரப்பட* வீதிவாய்த்
தெள்ளிநாங்களிழைத்தகோலம் அழித்தியாகிலும், உன்தன்மேல்*
உள்ளமோடியுருகலல்லால் உரோடமொன்றுமிலோம்கண்டாய்*
கள்ளமாதவா! கேசவா! உன்முகத்தனகண்களல்லவே. 5

Koviloor Digital Library

முற்றிலாத பிள்ளைகளோம் முலைபோந்திலாதோமை* நாள்தொறும்
சிற்றில்மேலிட்டுக்கெண்டு நீ சிறிதுண்டு திண்ணெனநாம் அது
கற்றிலோம்* கடலையடைத்து அரக்கர்குலங்களை முற்றவும்
செற்று* இலங்கையைப்பூசலாக்கியசேவகா! எம்மைவாதியேல். 6

பேதம் நன்கறிவார்களோடு இவைபேசினால் பெரிதுஇன்சுவை*
யாதுமொன்றறியாதபிள்ளைகளோமை நீ நலிந்து என்பயன்*
ஓதமாகடல்வண்ணா! உன்மணவாட்டிமாரொடு சூழறும்
சேதுபந்தம் திருத்தினாய் எங்கள் சிற்றில் வந்துசிதையேலே. 7

வட்டவாய்ச்சிறுதூதையோடு சிறுசுளகும் மணலும்கொண்டு*
இட்டமா விளையாடுவோங்களைச் சிற்றிலிடழித்து என்பயன் ?*
தொட்டுதைத்து நலியேல் கண்டாய் சுடர்ச்சக்கரம்கையிலேந்தினாய்*
கட்டியும்கைத்தால் இன்னாமையறிதியே கடல்வண்ணனே!. 8

முற்றத்தூடுபுகுந்து நின்முகம் காட்டிப் புன்முறுவல்செய்து*
சிற்றிலோடு எங்கள் சிந்தையும் சிதைக்கக்கடவையோ ? கோவிந்தா*
முற்றமண்ணிடம்தாவி விண்ணுற நீண்டளந்துகொண்டாய்* எம்மைப்
பற்றிமெய்ப்பிணக்கிட்டக்கால் இந்தப்பக்கம் நின்றவர் என் சொல்லார் ?.9

**சீதைவாயமுதமுண்டாய் எங்கள் சிற்றில் நீ சிதையேலென்று*
வீதிவாய் விளையாடும் ஆயர்சிறுமியர் மழலைச்சொல்லை*
வேதவாய்த் தொழிலார்கள் வாழ் வில்லிபுத்தூர் மன் விட்டுசித்தன்தன்*
கோதைவாய்த்தமிழ்வல்லவர் குறைவின்றி வைகுந்தம் சேருவரே. 10

அடிவரவு: நாமம் இன்று குண்டு பெய்யும் வெள்ளை முற்றிலாத பேதம் வட்டம் முற்றத்தூடு சீதை கோழி

ஆண்டாள் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

மூன்றாம் திருமொழி - கோழியழைப்பதன் முன்னம்

(கண்ணன் கவர்ந்த கூறைகளைக் கன்னியர் இரத்தல்)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

**கோழியழைப்பதன் முன்னம் குடைந்து நீராடுவான் போந்தோம்*
ஆழியஞ்செல்வன் எழுந்தான் அரவணைமேல்பள்ளிகொண்டாய்!*
ஏழைமையாற்றவும் பட்டோம் இனியென்றும் பொய்கைக்கு வாரோம்*
தோழியும் நானும் தொழுதோம் துகிலைப்பணித்தருளாயே. 1

இது என் புகுந்தது இங்கு அந்தோ இப்பொய்கைக்கு எவ்வாறு வந்தாய்*
மதுவின்துழாய்முடிமாலே மாயனே எங்களமுதே!*
விதியின்மையால் அதுமாட்டோம் வித்தகப்பிள்ளாய்! விரையேல்*
குதிகொண்டு அரவில் நடித்தாய்! குருந்திடைக்கூறைபணியாய். 2

எல்லே ஈது என்ன இளமை? எம்மனைமார் காணிலொட்டார்*
பொல்லாங்கு ஈதென்று கருதாய் பூங்குருந்தேறியிருத்தி*
வில்லால் இலங்கையழித்தாய், நீவேண்டியதெல்லாம் தருவோம்*
பல்லாரும்காணமே போவோம் பட்டைப்பணித்தருளாயே. 3

பரக்கவிழித்து எங்கும் நோக்கிப் பலர்குடைந்தாடும்சுனையில்*
அரக்கநில்லாகண்ணநீர்கள் அலமருகின்றவா பாராய்*
இரக்கமேலொன்றுமிலாதாய் இலங்கையழித்தபிரானே!*
குரக்கரசு ஆவது அறிந்தோம் குருந்திடைக்கூறைபணியாய். 4

காலைக்கதுவிடுகின்ற கயலொடுவாளைவிரவி*
வேலைப்பிடித்தென்னைமார்களோட்டில் என்னவிளையாட்டோ*
கோலச்சிற்றாடைபலவும்கொண்டு நீயேறியிராதே*
கோலம்கரியபிரானே! குருந்திடைக்கூறைபணியாய். 5

தடத்தவிழ்தாமரைப்பொய்கைத் தாள்கள் எம் காலைக்கதுவ*
விடத்தேளெறிந்தாலேபோல வேதனை ஆற்றவும் பட்டோம்*
குடத்தையெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்ல எங்கோவே!*
படிற்றையெல்லாம் தவிர்ந்து எங்கள் பட்டைப் பணித்தருளாயே. 6

Koviloor Digital Library

நீரிலேநின்று அயர்க்கின்றோம் நீதியல்லாதனசெய்தா*
ஊரகம்சாலவும் சேய்த்தால் ஊழியெல்லாம் உணர்வானே*
ஆர்வம் உனக்கேயுடையோம் அம்மனைமார்காணில் ஒட்டார்*
போரவிடாய் எங்கள் பட்டைப் பூங்குருந்தேறியிராதே. 7

மாமிமார்மக்களேயல்லோம் மற்றும் இங்கு எல்லாரும்போந்தார்*
தூமலர்க்கண்கள்வளரத் தொல்லையிராத்துயில்வானே!*
சேமமேலன்றிது சாலச்சிக்கெனநாம் இதுசொன்னோம்*
கோமள ஆயர்கொழுந்தே! குருந்திடைக்கூறைபணியாய். 8

கஞ்சன்வலைவைத்த அன்று காரிருளெல்லில்பிழைத்து*
நெஞ்சு துக்கம் செய்யப்போந்தாய் நின்ற இக்கன்னியரோமை*
அஞ்ச உரப்பாள் அசோதை ஆணாட விட்டிட்டிருக்கும்*
வஞ்சகப்பேய்ச்சிபாலுண்ட மசிமையிலீ! கூறை தாராய். 9

**கன்னியரோடு எங்கள் நம்பி கரியபிரான் விளையாட்டை*
பொன்னியல்மாடங்கள் சூழ்ந்த புதுவையர்கோன்பட்டன்கோதை*
இன்னிசையால் சொன்ன மாலை ஈரைந்தும்வல்லவர்தாம்போய்*
மன்னியமாதவனோடு வைகுந்தம்புக்கிருப்பாரே. 10

அடிவரவு : கோழி இது எல்லே பரக்க காலை தடத்து நீரில் மாமிமார் கஞ்சன் கன்னியரோடு தெள்ளியார்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

நான்காம் திருமொழி - தெள்ளியார்பலர்

(கூடலிழைத்தல்)

கலிவிருத்தம்

**தெள்ளியார்பலர் கைதொழும் தேவனார்*
வள்ளல் மாலிருஞ்சோலைமணாளனார்*
பள்ளிகொள்ளுமிடத்து அடிகொட்டிட*
கொள்ளுமாகில் நீ கூடிடு கூடலே. 1

**காட்டில்வேங்கடம் கண்ணபுரநகர்*
வாட்டமின்றி மகிழ்ந்துறைவாமனன்*
ஓட்டராவந்து என்கைப்பற்றி* தன்னொடும்
கூட்டுமாகில் நீ கூடிடு கூடலே. 2

பூமகன் புகழ்வானவர் போற்றுதற்
காம் மகன்* அணிவாணுதல் தேவகி
மாமகன்* மிகுசீர்வசுதேவர்தம்*
கோமகன் வரில் கூடிடு கூடலே. 3

ஆய்ச்சிமார்களும் ஆயரும் அஞ்சிட*
பூத்தநீள்கடம்பேறிப் புகப்பாய்ந்து*
வாய்த்தகாளியன்மேல் நடமாடிய*
கூத்தனார் வரில் கூடிடு கூடலே. 4

மாடமாளிகைசூழ் மதுரைப்பதி
நாடி* நந்தெருவின் நடுவே வந்திட்டு*
ஓடைமாமதயானை உதைத்தவன்*
கூடுமாகில் நீ கூடிடு கூடலே 5

அற்றவன் மருதம் முறிய நடை
கற்றவன்* கஞ்சனை வஞ்சனையின்
செற்றவன்* திகழும் மதுரைப்பதிக்*
கொற்றவன்வரில் கூடிடு கூடலே. 6

Koviloor Digital Library

அன்று இன்னாதனசெய் சிசுபாலனும்*
நின்ற நீள்மருதும் எருதும் புள்ளும்*
வென்றிவேல்விறல் கஞ்சனும்விழ* முன்
கொன்றவன்வரில் கூடிடு கூடலே 7

ஆவலன்புடையார்தம் மனத்தன்றி
மேவலன்* விரைசூழ் துவராபதிக்
காவலன்* கன்றுமேய்த்து விளையாடும்*
கோவலன் வரில் கூடிடு கூடலே. 8

கொண்டகோலக் குறளுருவாய்ச்சென்று*
பண்டு மாவலிதன் பெருவேள்வியில்*
அண்டமும்நிலனும் அடியொன்றினால்*
கொண்டவன் வரில் கூடிடு கூடலே. 9

பழகுநான்மறையின் பொருளாய்* மத
மொழுகுவாரணம் உய்யஅளித்த* எம்
அழகனார் அணியாய்ச்சியர்சிந்தையுள்*
குழகனார் வரில் கூடிடு கூடலே. 10

**ஊடல் கூடல் உணர்தல் புணர்தலை*
நீடுநின்ற நிறைபுகழாய்ச்சியர்*
கூடலைக் குழற்கோதைமுன்கூறிய*
பாடல் பத்தும் வல்லார்க்கு இல்லை பாவமே. 11.

அடிவரவு: தெள்ளியார் காட்டில் பூமக ஆய்ச்சிமார்கள் மாடம் அற்றவன் அன்று ஆவல் கொண்ட பழகு ஊடல் மன்னு.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

Koviloor Digital Library

ஐந்தாம்திருமொழி - மன்னுபெரும்புகழ்
(எம்பெருமானைக்கூவியழைக்கும்படி குயிலை வேண்டுதல்)
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

**மன்னுபெரும்புகழ்மாதவன் மாமணிவண்ணன் மணி முடிமைந்தன்
தன்னை* உகந்ததுகாரணமாக என் சங்கிழக்கும் வழக்குண்டே ?*
புன்னைகுருக்கத்திஞாழல்செருந்திப் பொதும்பினில் வாழும்குயிலே!*
பன்னிஎப்போதும் இருந்து விரைந்து என் பவளவாயன் வரக்கூவாய். 1

வெள்ளைவிளிசங்கு இடங்கையில் கொண்ட விமலன் எனக்கு உருக்காட்டான்*
உள்ளம் புகுந்து என்னை நைவித்து நாளும் உயிர்பெய்துகூத்தாட்டுக்காணும்*
கள்ளவிழ்செண்பகப்பூமலர்கோதிக் களித்திசைபாடும்குயிலே!*
மெள்ளவிருந்துமிழற்றிமிழற்றாது என்வேங்கடவன் வரக்கூவாய். 2

மாதலி தேர்முன்பு கோல்கொள்ள மாயன் இராவணன்மேல்* சரமாரி
தாய்தலை அற்றற்றுவீழத் தொடுத்த தலைவன்வரவெங்கும் காணேன்*
போதலர்காவில் புதுமணம்நாறப் பொறிவண்டின்காமரம்கேட்டு* உன்
காதலியோடு உடன்வாழ் குயிலே என்கருமாணிக்கம் வரக்கூவாய். 3

என்புருகி இனவேல் நெடுங்கண்கள் இமைபொருந்தாபலநாளும்*
துன்பக்கடல்புக்கு வைகுந்தனென்பது ஒர்தோணிபெறாது உழல்கின்றேன்*
அன்புடையாரைப்பிரிவுறுநோயது நீயும் அறிதிகுயிலே*
பொன்புரைமேனிக்கருளக்கொடியுடைப் புண்ணியனை வரக்கூவாய். 4

**மென்னடையன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூருறைவான்தன்*
பொன்னடிகாண்பதோராசையினால் என்பொருகயற்கண்ணிணை துஞ்சா*
இன்னடிசிலொடுபாலமுதூட்டி எடுத்த என் கோலக்கிளியை*
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே உலகளந்தான் வரக்கூவாய். 5

எத்திசையும் அமரர் பணிந்தேத்தும் இருடீகேசன்வலிசெய்ய*
முத்தன்னவெண்முறுவல் செய்யவாயும் முலையும் அழகழிந்தேன்நான்*
கொத்தலர்காவில்மணித்தடம் கணபடைகொள்ளும் இளங்குயிலே* என்
தத்துவனை வரக்கூகிற்றியாகில் தலையல்லால் கைம்மாறிலேனே. 6

Koviloor Digital Library

பொங்கிய பாற்கடல் பள்ளிகொள்வானைப் புணர்வதோராசையினால் * என்
கொங்கை கிளர்ந்துகுமைத்துக்குதுகலித்து ஆவியை ஆகுலம் செய்யும்*
அங்குயிலே! உனக்கென்னமறைந்துறைவு ? ஆழியும் சங்கும் ஒண்தண்டும்*
தங்கியகையவனைவரக்கூவில் நீ சாலத்தருமம் பெறுதி. 7

சார்ங்கம் வளையவலிக்கும் தடக்கைச்சதுரன் பொருத்தமுடையன்*
நாங்கள் எம்மிலிருந்தொட்டிய கச்சங்கம் நானும் அவனும் அறிதும்*
தேங்கனிமாம்பொழில் செந்தளிர்கோதும் சிறுகுயிலே! * திருமாலை
ஆங்கு விரைந்தொல்லைக்கூகிற்றியாகில் அவனைநான் செய்வனகாணே. 8

பைங்கிளிவண்ணன் சிரீதரனென்பது ஓர் பாசத்து அகப்பட்டிருந்தேன்*
பொங்கொளிவண்டிரைக்கும்பொழில்வாழ்குயிலே! குறிக்கொண்டு இது நீ கேள்*
சங்கொடுசக்கரத்தான்வரக்கூவுதல் பொன்வளைகொண்டுதருதல்*
இங்குள்ள காவினில் வாழக்கருதில் இரண்டத்தொன்றேல் திண்ணம்வேண்டும்.
9

அன்றுலகமளந்தானையுகந்து அடிமைக்கண் அவன்வலிசெய்ய*
தென்றலும் திங்களும் ஊடறுத்து என்னை நலியும் முறைமை அறியேன்*
என்றும் இக்காவில் இருந்திருந்து என்னைத் ததைத்தாதேநீயும் குயிலே!*
இன்று நாராயணனைவரக்கூவாயேல் இங்குத்தைநின்றும் துரப்பன். 10

**விண்ணுறநீண்டு அடிதாவியமைந்தனை வேற்கண்மடந்தைவிரும்பி*
கண்ணுற என்கடல்வண்ணனைக்கூவு கருங்குயிலே! என்றமாற்றம்*
பண்ணுறுநான்மறையோர்புதுவைமன்னன் பட்டர்பிரான்கோதைசொன்ன*
நண்ணுறுவாசகமாலைவல்லார் நமோநாராயணாயவென்பாரே. 11

அடிவரவு : மன்னு வெள்ளை மாதலி என்பு மென்னடை எத்திசை பொங்கிய சார்ங்கம் பைங்கிளி அன்று விண் வாரணம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

ஆறாம் திருமொழி - வாரணமாயிரம்*

(ஆயனை மணஞ்செய்து கொள்வதாகத் தான்கண்ட கனாவைத் தலைவி தோழிக்குச் கூறுதல்)

கலிவிருத்தம்

**வாரணமாயிரம் சூழ வலஞ்செய்து*
நாரணநம்பி நடக்கின்றானென்று, எதிர்*
பூரணபொற்குடம் வைத்துப் புரமெங்கும்*
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். 1

நாளை வதுவை மணமென்றுநாளிட்டு*
பாளைகமுகு பரிசுடைப்பந்தற்கீழ்*
கோளரிமாதவன் கோவிந்தனென்பான்* ஓர்
காளைபுகுதக் கனாக்கண்டேன்தோழீ நான். 2

இந்திரனுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம்*
வந்திருந்து என்னை மகட்பேசிமந்திரித்து*
மந்திரக்கோடியுடுத்தி மணமாலை*
அந்தரிசூட்டக் கனாக்கண்டேன்தோழீ! நான் 3

நால்திசைத்தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி*
பார்ப்பனச்சிட்டர்கள் பல்லாரெடுத்தேத்தி*
பூப்புனைகண்ணிப் புனிதனோடு, என்தன்னை*
காப்புநாண்கட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். 4

கதிரொளிதீபம் கலசமுடனேந்தி*
சதிரிளமங்கையர்தாம் வந்துஎதிர்கொள்ள*
மதுரையார்மன்னன் அடிநிலைதொட்டு* எங்கும்
அதிரப்புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான் 5

மத்தளம்கொட்ட வரிசங்கம் நின்றூத*
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்தபந்தற்கீழ்*

---

* தினந்தோறும் திருவேங்கடவன் திருக்கல்யாண உற்சவத்தில் அநுஸத்திக்கப்படுகிறது.

Koviloor Digital Library

மைத்துனன்நம்பி மதுசூதன்வந்து* என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான் 6

வாய்நல்லார் நல்லமறையோதிமந்திரத்தால்*
பாசிலைநாணல்படுத்துப் பரிதிவைத்து*
காய்சினமாகளிறன்னான் என்கைப்பற்றி*
தீவலஞ்செய்யக் கனாக்கண்டேன்தோழீ! நான் 7

இம்மைக்கும் ஏழேழ்பிறவிக்கும் பற்றாவான்*
நம்மையுடையவன் நாராயணன்நம்பி*
செம்மையுடையதிருக்கையால் தாள்பற்றி*
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ! நான். 8

வரிசிலைவாள்முகத்து என்னைமார்தாம் வந்திட்டு*
எரிமுகம்பாரித்து என்னைமுன்னே நிறுத்தி*
அரிமுகன் அச்சுதன் கைம்மேல் என் கைவைத்து*
பொரிமுகந்து அட்டக் கனாக்கண்டேன்தோழீ! நான். 9

குங்குமமப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து*
மங்கலவீதி வலஞ்செய்துமணநீர்*
அங்குஅவனோடும் உடன்சென்று அங்குஆனைமேல்*
மஞ்சனமாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். 10

**ஆயனுக்காகத்தான்கண்டகனாவினை*
வேயர்புகழ் வில்லிபுத்தூர்க்கோன் கோதைசொல்*
தூயதமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்*
வாயும் நன்மக்களைப்பெற்று மகிழ்வரே. 11

அடிவரவு : வாரணம் நாளை இந்திரன் நால்திசை கதிர் மத்தளம் வாய் இம்மைக்கும் வரிசிலை குங்குமம் ஆயனுக்காக கருப்பூரம்

ஆண்டாள் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

ஏழாம் திருமொழி - கருப்பூரம் நாறுமோ
(பாஞ்சசன்னியத்தைப் பத்மநாபனோடுஞ் சுற்றமாக்குதல்)
தரவுகொச்சகக்கலிப்பா

** கருப்பூரம் நாறுமோ ? கமலப்பூ நாறுமோ ?
திருப்பவளச்செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ ?*
மருப்பொசித்தமாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்*
விருப்புற்றுக்கேட்கின்றேன் சொல் ஆழிவெண்சங்கே! 1

கடலில்பிறந்து கருதாது* பஞ்சசனன்
உடலில் வளர்ந்துபோய் ஊழியான்கைத்தலத்
திடரில்* குடியேறித் தீயவசுரர்*
நடலைப்படமுழங்கும் தோற்றத்தாய் நற்சங்கே! 2

தடவரையின்மீதே சரற்காலசந்திரன்*
இடையுவாவில்வந்து எழுந்தாலேபோல* நீயும்
வடமதுரையார்மன்னன் வாசுதேவன்கையில்*
குடியேறி வீற்றிருந்தாய் கோலப்பெருஞ்சங்கே!. 3

சந்திரமண்டலம்போல் தாமோதரன் கையில்*
அந்தரமொன்றின்றி ஏறிஅவன்செவியில்*
மந்திரம்கொள்வாயேபோலும் வலம்புரியே!*
இந்திரனும் உன்னோடு செல்வத்துக்கேலானே. 4

உன்னோடுஉடனே ஒருகடலில்வாழ்வாரை*
இன்னார் இனையாரென்று எண்ணுவாரில்லைகாண்*
மன்னாகிநின்ற மதுசூதன் வாயமுதம்*
பன்னாளும் உண்கின்றாய் பாஞ்சசன்னியமே!. 5

போய்த்தீர்த்தமாடாதே நின்றபுணர்மருதம்*
சாய்த்தீர்த்தான்கைத்தலத்தே ஏறிக்குடிகொண்டு*

Koviloor Digital Library

சேய்த்தீர்த்தமாய்நின்ற செங்கண்மால்தன்னுடைய*
வாய்த்தீர்த்தம்பாய்ந்தாடவல்லாய் வலம்புரியே!. 6

செங்கமலநாண்மலர்மேல் தேனுகரும் அன்னம்போல்*
செங்கண்கருமேனி வாசுதேவனுடைய*
அங்கைத்தலமேறி அன்னவசஞ்செய்யும்*
சங்கரையா! உன்செல்வம் சால அழகியதே. 7

உண்பதுசொல்லில் உலகளந்தான்வாயமுதம்*
கண்படைகொள்ளல் கடல்வண்ணன்கைத்தலத்தே*
பெண்படையார் உன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார்*
பண்பல செய்கின்றாய் பாஞ்சசன்னியமே!. 8

பதினாறாமாயிரவர் தேவிமார்பார்த்திருப்ப*
மதுவாயில்கொண்டாற்போல் மாதவன்தன்வாயமுதம்*
பொதுவாகஉண்பதனைப் புக்குநீயுண்டக்கால்*
சிதையாரோஉன்னோடு? செல்வப்பெருஞ்சங்கே. 9

**பாஞ்சசன்னியத்தைப் பற்பநாபனோடும்*
வாய்ந்த பெருஞ்சுற்றமாக்கிய வண்புதுவை*
ஏய்ந்தபுகழ்ப்பட்டர்பிரான்கோதை தமிழ் ஈரைந்தும்*
ஆய்ந்தேத்தவல்லாரவரும் அணுக்கரே. 10

அடிவரவு : கருப்பூரம் கடலில் தடவரை சந்திர உன்னோடு போய் செங்கமலம் உண்பது பதினாறு பாஞ்சசன்னியத்தை விண்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

Koviloor Digital Library

எட்டாம் திருமொழி - விண்ணீலமேலாப்பு

(மேகவிடுதூது)

தரவுகொச்சகக்கலிப்பா

**விண்ணீலமேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்!*
தெண்ணீர்பாய்வேங்கடத்து என்திருமாலும்போந்தானே*
கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளிசோரச்சோர்வேனை*
பெண்ணீர்மையீடழிக்கும் இது தமக்கு ஓர் பெருமையே. 1

மா்முத்தநிதி சொரியும் மாமுகில்காள்!* வேங்கடத்துச்
சாமத்தினிறங்கொண்ட தாடாளன்வார்த்தையென்னே*
காமத்தீயுள்புகுந்து கதுவப்பட்டு, இடைக்கங்குல்*
ஏமத்தோர்தென்றலுக்கு இங்கிலக்காய்நானிருப்பேனே. 2

ஒளிவண்ணம்வளைசிந்தை உறக்கத்தோடு இவையெல்லாம்*
எளிமையால் இட்டு என்னை ஈடழியப்போயினவால்*
குளிரருவிவேங்கடத்து என்கோவிந்தன்குணம்பாடி*
அளியத்தமேகங்காள் ஆவிகாத்திருப்பேனே. 3

மின்னாகத்தெழுகின்ற மேகங்காள்!* வேங்கடத்துத்
தன்னாகத்திருமங்கை தங்கிய சீர்மார்வர்க்கு*
என்னாகத்திளங்கொங்கை விரும்பித் தாம்நாள்தோறும்*
பொன்னாகம்புல்குதற்கு என்புரிவுடைமை செப்புமினே. 4

வான்கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள்* வேங்கடத்துத்
தேன்கொண்டமலர்சிதறத் திரண்டேறிப்பொழிவீர்காள்*
ஊன்கொண்டவள்ளுகிரால் இரணியனை உடலிடந்தான்*
தான்கொண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே. 5

சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில்காள்!* மாவலியை
நிலங்கொண்டான்வேங்கடத்தே நிரந்தேறிப்பொழிவீர்காள்*
உலங்குண்டவிளங்கனிபோல் உள்மெலியப்புகுந்து* என்னை
நலங்கொண்ட நாரணற்கு என் நடலைநோய்செப்புமினே. 6

Koviloor Digital Library

**சங்கமாகடல்கடைந்தான் தண்முகில்காள்* வேங்கடத்துச்
செங்கண்மால்சேவடிக்கீழ் அடிவீழ்ச்சிவிண்ணப்பம்*
கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப்புகுந்து* ஒருநாள்
தங்குமேல் என்னாவிதங்குமென்று உரையீரே. 7

கார்காலத்தெழுகின்ற கார்முகில்காள்!* வேங்கடத்துப்
போர்காலத்தெழுந்தருளிப் பொருதவனார்பேர்சொல்லி*
நீர்காலத்து எருக்கினம்பழவிலைபோல் வீழ்வேனை*
வார்காலத்து ஒருநாள் தம்வாசகம் தந்தருளாரே. 8

**மதயானைபோலெழுந்த மாமுகில்காள்!* வேங்கடத்தைப்
பதியாகவாழ்வீர்காள் பாம்பணையான்வார்த்தைஎன்னே*
கதியென்றும் தானாவான் கருதாது* ஓர்பெண்கொடியை
வதைசெய்தானென்னும்சொல் வையகத்தார்மதியாரே. 9

**நாகத்தினணையானை நன்னுதலாள்நயந்துஉரைசெய்*
மேகத்தைவேங்கடக்கோன் விடுதூதில்விண்ணப்பம்*
போகத்தில்வழுவாத புதுவையர்கோன்கோதை தமிழ்*
ஆகத்துவைத்துரைப்பாரவர் அடியாராகுவரே. 10

அடிவரவு : விண் மா ஒளி மின் வான் சலம் சங்கம் கார் மதம் நாகம் சிந்தூரம்.

ஆண்டாள்திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

ஒன்பதாம் திருமொழி - சிந்துரச்செம்பொடி

(திருமாலிருஞ்சோலை அழ்கரை வழிபடுதல்)

கலிநிலைத்துறை

**சிந்துரச்செம்பொடிப்போல் திருமாலிருஞ்சோலையெங்கும்*
இந்திரகோபங்களே எழுந்தும் பரந்திட்டனவால்*
மந்தரம் நாட்டி அன்று மதுரக்கொழுஞ்சாறுகொண்ட*
சுந்தரத்தோளுடையான் சுழலையில் நின்று உய்துங்கொலோ ? 1

போர்க்களிறு பொரும் மாலிருஞ்சோலையம்பூம்புறவில்*
தார்க்கொடிமுல்லைகளும் தவளநகைகாட்டுகின்ற*
கார்க்கொள் படாக்கள் நின்று கழறிச்சிரிக்கத்தரியேன்*
ஆர்க்கு இடுகோ ? தோழீ ? அவன்தார்செய்தபூசலையே. 2

கருவிளையொண்மலர்காள், காயாமலர்காள்!* திருமால்
உருவொளி காட்டுகின்றீர் எனக்குஉய்வழக்கொன்று உரையீர்*
திருவிளையாடுதிண்தோள் திருமாலிருஞ்சோலைநம்பி*
வரிவளையில்புகுந்து வந்திபற்றும்வழக்குளதே. 3

பைம்பொழில்வாழ்குயில்காள்! மயில்காள்! ஒண்கருவிளைகாள்!*
வம்பக்களங்கனிகாள்! வண்ணப்பூவைநறுமலர்காள்!*
ஐம்பெரும்பாதகர்காள்!, அணிமாலிருஞ்சோலைநின்ற*
எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கு என் செய்வதே ? 4

துங்கமலர்ப்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற*
செங்கண்கருமுகிலின் திருவுருப்போல்* மலர்மேல்
தொங்கியவண்டினங்காள் தொகுபூஞ்சுனைகாள்* சுனையில்
தங்குசெந்தாமரைகாள்! எனக்கு ஓர் சரண்சாற்றுமினே. 5

**நாறுநறும்பொழில் மாலிருஞ்சோலைநம்பிக்கு* நான்
நூறுதடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவிவைத்தேன்*
நூறுதடாநிறைந்த அக்காரவடிசில்சொன்னேன்*
ஏறுதிருவுடையான் இன்று வந்து இவை கொள்ளுங்கொலோ ? 6

Koviloor Digital Library

இன்று வந்து இத்தனையும் அமுதுசெய்திடப்பெறில்* நான்
ஒன்றுநூறாயிரமாக்கொடுத்துப் பின்னும் ஆளும்செய்வன்*
தென்றல் மணங்கமழும் திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான்* அடியேன் மனத்தே வந்து நேர்படிலே. 7

காலையெழுந்திருந்து கரியகுருவிக்கணங்கள்*
மாலின்வரவுசொல்லி மருள்பாடுதல் மெய்ம்மைகொலோ ?*
சோலைமலைப்பெருமான் துவராபதியெம்பெருமான்*
ஆலினிலைப்பெருமானவன்வார்த்தையுரைக்கின்றதே. 8

கோங்கலரும்பொழில் மாலிருஞ்சோலையில் கொன்றைகள்மேல்*
தூங்குபொன்மாலைகளோடு உடனாய்நின்று தூங்குகின்றேன்*
பூங்கொள்திருமுகத்து மடுத்தூதியசங்கொலியும்*
சார்ங்கவில் நாணொலியும் தலைப்பெய்வது எஞ்ஞான்றுகொலோ. 9

**சந்தொடுகாரகிலும்சுமந்து தடங்கள்பொருது*
வந்திழியும்சிலம்பாறுடை மாலிருஞ்சோலைநின்ற
சுந்தரனை* சுரும்பார்குழல்கோதை தொகுத்துரைத்த*
செந்தமிழ்பத்தும்வல்லார் திருமாலடிசேர்வர்களே. 10

அடிவரவு : சிந்துரம் போர் கருவிளை பைம்பொழில் துங்கம் நாறு இன்று காலை கோங்கு சந்தொடு கார்க்கோடல்

ஆண்டாள் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

பத்தாம் திருமொழி- கார்க்கோடற்பூக்காள்

தலைவி பிரிந்த நிலையில் பிரிவாற்றாது வருந்திக் கூறுதல்

கலிநிலைத்துறை

**கார்க்கோடல்பூக்காள்! கார்க்கடல்வண்ணன் என் மேல்* உம்மைப்
போர்க்கோலம்செய்து போரவிடுத்து அவன் எங்குற்றான் ?*
ஆர்க்கோ இனி நாம் பூசலிடுவது ?* அணிதுழாய்த்
தார்க்கோடும் நெஞ்சந்தன்னைப் படைக்கவல்லேன் அந்தோ* 1

மேல்தோன்றிப்பூக்காள்! மேலுலகங்களின்மீதுபோய்*
மேல்தோன்றும்சோதி வேதமுதல்வர் வலங்கையில்*
மேல்தோன்றும் ஆழியின் வெஞ்சுடர்போலச்சுடாது* எம்மை
மாற்றோலைப்பட்டவர் கூட்டத்துவைத்துக்கொள்கிற்றிரே. 2

கோவைமணாட்டி! நீ உன் கொழுங்கனிகொண்டு* எம்மை
ஆவிதொலைவியேல் வாயழகர்தம்மையஞ்சுதும்*
பாவியேன்தோன்றிப் பாம்பணையார்க்கும் தம்பாம்புபோல்*
நாவுமிரண்டுள வாய்த்து நாணிலியேனுக்கே. 3

முல்லைப்பிராட்டி! நீஉன் முறுவல்கள்கொண்டு* எம்மை
அல்லல்விளைவியேல் ஆழிநங்காய் உன்னடைக்கலம்*
கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார்
சொல்லும்பொய்யனால்* நானும் பிறந்தமைபொய்யன்றே. 4

பாடும்குயில்காள்! ஈது என்னபாடல் ? * நல்வேங்கட
நாடர்நமக்கு ஒரு வாழ்வுதந்தால் வந்துபாடுமின்*
ஆடும்கருளக்கொடியுடையார் வந்துஅருள்செய்து*
கூடுவராயிடில் கூவி நும்பாட்டுக்கள் கேட்டுமே. 5

கணமாமயில்காள்! கண்ணபிரான்திருக்கோலம்போன்று*
அணிமாநடம்பயின்றாடுகின்றீர்க்கு அடிவீழ்கின்றேன்*
பணவாடரவணைப் பற்பலகாலமும்பள்ளிகொள்*
மணவாளர் நம்மை வைத்த பரிசிதுகாண்மினே. 6

Koviloor Digital Library

நடமாடித்தோகைவிரிக்கின்ற மாமயில்காள்* உம்மை
நடமாட்டம் காணப் பாவியேன் நான் ஓர் முதலிலேன்*
குடமாடுகூத்தன்கோவிந்தன் கோமிறைசெய்து* எம்மை
உடைமாடுகொண்டான் உங்களுக்கு இனியொன்று போதுமே? 7

மழையே மழையே! மண்புறம்பூசி உள்ளாய்நின்று*
மெழுகூற்றினாற்போல் ஊற்று நல்வேங்கடத்துள்நின்ற*
அழகப்பிரானார்தம்மை என்னெஞ்சத்தகப்படத்
தழுவிநின்று* என்னைத் ததைத்துக்கொண்டு ஊற்றவும் வல்லையே ?8

கடலே! கடலே! உன்னைக்கடைந்து கலக்குறுத்து*
உடலுள்புகுந்துநின்று ஊறலறுத்தவற்கு* என்னையும்
உடலுள்புகுந்துநின்று ஊறலறுக்கின்றமாயற்கு* என்
நடலைகளெல்லாம் நாகணைக்கே சென்றுரைத்தியே. 9

**நல்ல என் தோழி! நாகணைமிசைநம்பரர்*
செல்வர்பெரியர் சிறுமானிடவர்நாம்செய்வதென்*
வில்லிபுதுவைவிட்டுசித்தர் தங்கள்தேவரை*
வல்லபரிசுவருவிப்பரேல் அதுகாண்டுமே. 10.

அடிவரவு : கார் மேல் கோவை முல்லை பாடும் கணம் நடமாடும் மழையே கடலே நல்ல தாம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

பதினொன்றாம் திருமொழி - தாமுகக்கும்

(தலைவி திருவரங்கன்செய்கைக்கு மனம்பொறாது தாய்மார் முதலியோரை நோக்கி வருந்திக்கூறுதல்)

தரவுகொச்சகக்கலிப்பா

**தாமுகக்கும் தம்கையில் சங்கமேபோலாவோ ?*
யாமுகக்கும்எங்கையில் சங்கமும் ஏந்திழையீர்!*
தீமுகத்துநாகணைமேல் சேரும்திருவரங்கர்*
ஆ! முகத்தைநோக்காரால் அம்மனே! அம்மனே! 1

எழிலுடைய அம்மனைமீர்! என்னரங்கத்தின்னமுதர்*
குழலழகர் வாயழகர் கண்ணழகர்* கொப்பூழில்
எழுகமலப்பூவழகர் எம்மானார்* என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையேயாக்கினரே. 2

**பொங்கோதம்சூழ்ந்த புவனியும்விண்ணுலகும்*
அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான்*
செங்கோலுடைய திருவரங்கச்செல்வனார்*
எங்கோல்வளையால் இடர்தீர்வராகாதே ? 3

மச்சணிமாட மதிளரங்கர் வாமனனார்*
பச்சைப்பசுந்தேவர் தாம் பண்டுநீரேற்ற*
பிச்சைக்குறையாகி என்னுடைய பெய்வளைமேல்*
இச்சையுடையரேல் இத்தெருவேபோதாரே ? 4

பொல்லாக்குறளுருவாய்ப் பொற்கையில்நீரேற்று*
எல்லாவுலகும் அளந்துகொண்ட எம்பெருமான்*
நல்லார்கள் வாழும் நளிரரங்கநாகணையான்*
இல்லாதோம் கைப்பொருளும் எய்துவானொத்துளனே. 5

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார்* காவிரிநீர்
செய்ப்புரளவோடும் திருவரங்கச்செல்வனார்*

Koviloor Digital Library

எப்பொருட்கும்நின்று ஆர்க்கும்எய்தாது* நான்மறையின்
சொற்பொருளாய்நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே. 6

உண்ணாதுஉறங்காது ஒலிகடலையூடறுத்து*
பெண்ணாக்கையாப்புண்டு தாமுற்றபேதெல்லாம்*
திண்ணார்மதிள்சூழ் திருவரங்கச்செல்வனார்*
எண்ணாதே தம்முடைய நன்மைகளே எண்ணுவரே. 7

**பாசிதூர்த்துக்கிடந்த பார்மகட்கு* பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப்பன்றியாம்*
தேசுடையதேவர் திருவரங்கச்செல்வனார்*
பேசியிருப்பனகள் பேர்க்கவும்பேராவே. 8

கண்ணாலம் கோடித்துக் கன்னிதன்னைக்கைப்பிடிப்பான்*
திண்ணார்ந்திருந்த சிசுபாலன்தேசழிந்து*
அண்ணாந்திருக்கவே ஆங்கவளைக்கைப்பிடித்த*
பெண்ணாளன்பேணும் ஊர்பேரும் அரங்கமே. 9

**செம்மையுடைய திருவரங்கர்தாம் பணித்த*
மெய்ம்மைப்பெருவார்த்தை விட்டுசித்தர்கேட்டிருப்பர்*
தம்மையுகப்பாரைத் தாமுகப்பரென்னும்சொல்*
தம்மிடையே பொய்யானால் சாதிப்பார் ஆர் இனியே? 10

அடிவரவு: தாம் எழில் பொங்கு மச்சு பொல்லா கை உண்ணாது பாசி கண்ணாலம் செம்மை மற்று.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

பன்னிரண்டாம் திருமொழி - மற்றிருந்தீர்கட்கு

(தலைவி கண்ணனுள்ளவிடத்தில் தன்னைக்கொண்டு விடும்படி உற்றாரை வேண்டுதல்)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

**மற்றிருந்தீர்கட்கு அறியலாகா மாதவனென்பதோரன்புதன்னை*
உற்றிருந்தேனுக்கு உரைப்பதெல்லாம் ஊமையரோடு செவிடர்வார்த்தை*
பெற்றிருந்தாளையொழியவேபோய்ப் பேர்த்தொருதாயில்வளர்ந்தநம்பி*
மற்பொருந்தா மற்களமடைந்த மதுரைப்புறத்து என்னை உய்த்திடுமின். 1

நாணி இனியோர்கருமமில்லை நாலயலாரும் அறிந்தொழிந்தார்*
பாணியாது என்னை மருந்துசெய்து பண்டுபண்டாக்க உறுதிராகில்*
மாணியுருவாய் உலகளந்த மாயனைக்காணில்தலைமறியும்*
ஆணையால் நீர் என்னைக்காக்க வேண்டில் ஆய்ப்பாடிக்கே என்னை உய்த்திடுமின். 2

தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத் தனிவழிபோயினாளென்னும் சொல்லு*
வந்தபின்னைப்பழிகாப்பரிது மாயவன்வந்து உருக்காட்டுகின்றான்*
கொந்தளமாக்கிப்பரக்கழித்துக் குறும்புசெய்வானோர்மகனைப்பெற்ற*
நந்தகோபாலன் கடைத்தலைக்கே நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின். 3

அங்கைத்தலத்திடை ஆழிகொண்டானவன்முகத்தன்றிவிழியேனென்று*
செங்கச்சுக்கொண்டு கண்ணாடையார்த்துச் சிறுமானிடவரைக்காணில்நாணும்*
கொங்கைத்தலமிவைநோக்கிக்காணீர் கோவிந்தனுக்கல்லால்வாயில்போகா*
இங்குத்தைவாழ்வையொழியவேபோய் யமுனைக்கரைக்குஎன்னை உய்த்திடுமின். 4

ஆர்க்கும் என்னோயிது அறியலாகாது அம்மனைமீர்! துழதிப்படாதே*
கார்க்கடல்வண்ணனென்பானொருவன் கைண்டயோகம்தடவத்தீரும்*
நீர்க்கரைநின்றகடம்பையேறிக் காளியனுச்சியில் நட்டம்பாய்ந்து*
போர்க்களமாக நிருத்தம்செய்த பொய்கைக்கரைக்கு என்னை உய்த்திடுமின்.5

Koviloor Digital Library

கார்த்தண்முகிலும் கருவிளையும் காயாமலரும்கமலப்பூவும்*
ஈர்த்திடுகின்றன என்னை வந்திட்டு இருடீகேசன் பக்கல்போகேயென்று*
வேர்த்துப்பசித்துவயிறசைந்து வேண்டடிசிலுண்ணும்போது* ஈதென்று
பார்த்திருந்து நெடுநோக்குக்கொள்ளும் பத்தவிலோசனத்து உய்த்திடுமின். 6

வண்ணந்திரிவும் மனங்குழைவும் மானமிலாமையும் வாய் வெளுப்பும்*
உண்ணலுறாமையும் உள்மெலிவும் ஓதநீர்வண்ணனென்பானொருவன்*
தண்ணந்துழாயென்னும்மாலைகொண்டு சூட்டத்தணியும்* பிலம்பன்தன்னைப்
பண்ணழியப்பலதேவன்வென்ற பாண்டிவடத்து என்னை உய்த்திடுமின். 7

கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப்பெற்றான் காடுவாழ்சாதியுமாகப்பெற்றான்*
பற்றியுரலிடையாப்புமுண்டான் பாவிகாள்! உங்களுக்குஏச்சுக்கொலோ ?*
கற்றனபேசி வசையுணாதே காலிகளுய்ய மழைதடுத்து*
கொற்றக்குடையாக ஏந்திநின்ற கோவர்த்தனத்து என்னை உய்த்திடுமின். 8

கூட்டிலிருந்து கிளி எப்போதும் கோவிந்தா! கோவிந்தா! என்று அழைக்கும்*
ஊட்டக்கொடாதுசெறுப்பனாகில் உலகளந்தானென்று உயரக்கூவும்*
நாட்டில்தலைப்பழியெய்தி உங்கள் நன்மையிழந்து தலையிடாதே*
சூட்டுயர்மாடங்கள் சூழ்ந்து தோன்றும் துவராபதிக்கு என்னை உய்த்திடுமின்.9

**மன்னுமதுரைதொடக்கமாக வண்துவராபதிதன்னளவும்*
தன்னைத்தமருய்த்துப்பெய்யவேண்டித் தாழ்குழலாள்துணிந்ததுணிவை*
பொன்னியல்மாடம்பொலிந்துதோன்றும் புதுவையர்கோன்விட்டுசித்தன்கோதை*
இன்னிசையால் சொன்ன செஞ்சொல்மாலை ஏத்தவல்லார்க்கு இடம் வைகுந்தமே.
10

அடிவரவு : மற்று நாணி தந்தை அங்கை ஆர்க்கும் கார்த்தண் வண்ணம் கற்றினம் கூட்டில் மன்னு கண்ணன்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

பதின்மூன்றாம் திருமொழி - கண்ணனென்னும்

(தலைவி கண்ணன் அணிந்த ஆடை முதலியவற்றால் தன் வாட்டத்தைத் தணிக்க வேண்டுதல்)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

**கண்ணனென்னும் கருந்தெய்வம் காட்சிப்பழகிக்கிடப்பேனை*
புண்ணில்புளிப்பெய்தாற்போலப் புறம் நின்று அழகுபேசாதே*
பெண்ணின்வருத்தமறியாத பெருமானரையில்பீதக
வண்ணவாடை கொண்டு* என்னை வாட்டம்தணியவீசீரே. 1

பாலாலிலையில் துயில்கொண்ட பரமன்வலைப்பட்டிருந்தேனை*
வேலால் துன்னம்பெய்தாற்போல் வேண்டிற்றெல்லாம்பேசாதே*
கோலால் நிரைமேய்த்து ஆயனாய்க் குடந்தைக்கிடந்தகுடமாடி*
நீலார்தண்ணந்துழாய்கொண்டு என் நெறிமென்குழல்மேல் சூட்டீரே. 2.

கஞ்சைக்காய்ந்தகருவில்லி கடைக்கணென்னும்சிறைக்கோலால்*
நெஞ்சூடுருவஏவுண்டு நிலையும்தளர்ந்துநைவேனை*
அஞ்சேலென்றானவன் ஒருவனவன் மார்பணிந்தவனமாலை*
வஞ்சியாதே தருமாகில் மார்பில்கொணர்ந்து புரட்டீரே. 3

ஆரே உலகத்து ஆற்றவார்? ஆயர்பாடி கவர்ந்துண்ணும்*
காரேறுழக்க உழக்குண்டு தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை*
ஆராவமுதமனையான்தன் அமுதவாயிலூறிய*
நீர்தான்கொணர்ந்து புலராமே பருக்கி இளைப்பை நீக்கிரே. 4

அழிலும்தொழிலும் உருக்காட்டான் அஞ்சேலென்றான்னவனொருவன்*
தழுவி முழுசிப்புகுந்தென்னைச் சுற்றிச்சுழன்றுபோகானால்*
தழையின்பொழில்வாய் நிரைப்பின்னே நெடுமாலூதிவருகின்ற*
குழலின் தொளைவாய் நீர்கொண்டு குளிரமுகத்துத்தடவீரே. 5

Koviloor Digital Library

நடையொன்றில்லாஉலகத்து நந்தகோபன் மகனென்னும்*
கொடிய கடியதிருமாலால் குளப்புக்கூறுகொளப்பட்டு*
புடையும்பெயரகில்லேன்நான் போட்கன்மிதித்த அடிப்பாட்டில்*
பொடித்தான் கொணர்ந்து பூசீர்கள் போகாவுயிரென்னுடம்பையே. 6

வெற்றிக்கருளக்கொடியான்தன் மீமிதாடாஉலகத்து*
வெற்றவெறிதே பெற்றதாய் வேம்பேயாகவளர்த்தாளே*
குற்றமற்றமுலைதன்னைக் குமரன் கோலப்பணைத்தோளோடு*
அற்றகுற்றமவைதீர அணையஅமுக்கிக்கட்டீரே. 7

உள்ளேயுருகிநைவேனை உளளோ இலளோவென்னாத*
கொள்ளைகொள்ளிக்குறும்பனைக் கோவர்த்தனனைக்கண்டக்கால்*
கொள்ளும்பயனொன்றில்லாத கொங்கைதன்னைக்கிழங்கோடும்*
அள்ளிப்பறித்திட்டு அவன்மார்விலெறிந்து என்னழலைத்தீர்வேனே. 8

கொம்மைமுலைகள் இடர்தீரக் கோவிந்தற்கு ஓர்குற்றேவல்*
இம்மைப்பிறவிசெய்யாதே இனிப்போய்ச்செய்யும் தவந்தானென் ?*
செம்மையுடைய திருமார்வில் சேர்த்தானேலும் ஒருஞான்று*
மெய்ம்மைசொல்லி முகம்நோக்கி விடைதான் தருமேல்மிகநன்றே. 9

**அல்லல்விளைத்தபெருமானை ஆயர்பாடிக்குஅணிவிளக்கை*
வில்லிபுதுவைநகர்நம்பி விட்டுசித்தன் வியன்கோதை*
வில்லைத்தொலைத்த புருவத்தாள் வேட்கையுற்றுமிகவிரும்பும்*
சொல்லைத்துதிக்கவல்லார்கள் துன்பக்கடலுள் துவளாரே. 10

அடிவரவு : கண்ணன் பால் கஞ்சை ஆரே அழில் நடை வெற்றி உள்ளே கொம்மை அல்லல் பட்டி.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

பதினான்காம் திருமொழி - பட்டிமேய்ந்து

(விருந்தாவனத்தே பரமனைக் கண்டமை கூறுதல்)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

**பட்டிமேய்ந்தோர்காரேறு பலதேவற்குஓர்கீழ்க்கன்றாய்*
இட்டீறிட்டுவிளையாடி இங்கேபோதக்கண்டீரே ?*
இட்டமானபசுக்களை இனிதுமறித்து நீருட்டி*
விட்டுக்கொண்டு விளையாட விருந்தாவனத்தே கண்டோமே. 1

அனுங்கஎன்னைப்பிரிவுசெய்து ஆயர்பாடி கவர்ந்துண்ணும்*
குணுங்குநாறிக்குட்டேற்றைக் கோவர்த்தனனைக்கண்டீரே ?*
கணங்களோடு மின்மேகம் கலந்தாற்போல* வனமாலை
மினுங்க நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே. 2

மாலாய்ப்பிறந்தநம்பியை மாலேசெய்யும் மணாளனை*
ஏலாப்பொய்களுரைப்பானை இங்கேபோதக்கண்டீரே*
மேலால் பரந்த வெயில்காப்பான் வினதைசிறுவன்சிறகென்னும்*
மேலாப்பின்கீழ் வருவானை விருந்தாவனத்தேகண்டோமே. 3

கார்த்தண்கமலக்கண்ணென்னும் நெடுங்கயிறு படுத்தி * என்னை
ஈர்த்துக்கொண்டுவிளையாடும் ஈசன்தன்னைக்கண்டீரே ?*
போர்த்தமுத்தின்குப்பாயப் புகர்மால்யானைக்கன்றேபோல்*
வேர்த்துநின்றுவிளையாட விருந்தாவனத்தே கண்டோமே. 4

**மாதவன் என்மணியினை வலையில்பிழைத்தபன்றிபோல்*
ஏதுமொன்றும்கொளத்தாரா ஈசன்தன்னைக்கண்டீரே*
பீதகவாடையுடைதாழப் பெருங்கார்மேகக்கன்றேபோல்*
வீதியாரவருவானை விருந்தாவனத்தே கண்டோமே. 5

தருமமறியாக்குறும்பனைத் தன்கைச்சார்ங்கமதுவேபோல்*
புருவவட்டமழகிய பொருத்தமிலியைக்கண்டீரே*
உருவுகரிதாய் முகம்செய்தாய் உதயப்பருப்பதத்தின்மேல்*
விரியும் கதிரேபோல்வானை விருந்தாவனத்தே கண்டோமே. 6

Koviloor Digital Library

பொருத்தமுடையநம்பியைப் புறம்போல் உள்ளும்கரியானை*
கருத்தைப்பிழைத்துநின்ற அக்கருமாமுகிலைக்கண்டீரே ?*
அருத்தித்தாராகணங்களால் ஆரப் பெருகுவானம்போல்
விருத்தம்பெரிதாய் வருவானை விருந்தாவனத்தே கண்டோமே. 7

வெளியசங்கொன்றுடையானைப் பீதகவாடையுடையானை*
அளிநன்குடையதிருமாலை ஆழியானைக்கண்டீரே ?*
களிவண்டு எங்கும் கலந்தாற்போல் கமழ்பூங்குழல்கள் தடந்தோள்மேல்*
மிளிரநின்று விளையாட விருந்தாவனத்தேகண்டோமே. 8

**நாட்டைப்படையென்று அயன்முதலாத்தந்த நளிர்மாமலருந்தி*
வீட்டைப்பண்ணிவிளையாடும் விமலன்தன்னைக்கண்டீரே ?*
காட்டைநாடித்தேனுகனும் களிறும் புள்ளும் உடன்மடிய*
வேட்டையாடிவருவானை விருந்தாவனத்தேகண்டோமே. 9

**பருந்தாட்களிற்றுக்கருள்செய்த பரமன்தன்னை* பாரின்மேல்
விருந்தாவனத்தேகண்டமை விட்டுசித்தன்கோதைசொல்*
மருந்தாமென்றுதம்மனத்தே வைத்துக்கொண்டுவாழ்வார்கள்*
பெருந்தாளுடையபிரானடிக்கீழ்ப் பிரியாது என்றும் இருப்பாரே. 10

அடிவரவு : பட்டி அனுங்க மால் கார்த்தண் மாதவன் தருமன் பொருத்தம் வெளிய நாட்டை பருந்தாள் இருள்.

நாச்சியார் திருமொழி முற்றும்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

ஸ்ரீ திருமங்கையாழ்வார் - திருப்பதி

Koviloor Digital Library

Koviloor Digital Library

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த சிறியதிருமடல் *

தனியன்

பிள்ளை திருநறையூரறையர் அருளிச்செய்தது

நேரிசை வெண்பா

முள்ளிச்செழுமலரோதாரான், முளைமதியம்*
கொள்ளிக்கு என்னுள்ளம் கொதியாமே* வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியைவெட்டி*
மருவாளன் தந்தான் மடல்.

கலிவெண்பா

**காரார்வரைக்கொங்கை கண்ணார்கடலுடுக்கை*
சீரார்சுடர்ச்சுட்டி செங்கலுழிப்பேராற்று* 1

பேராரமார்பின் பெருமாமழைக்கூந்தல்*
நீராரவேலி நிலமங்கையென்னும்* இப் 2

பாரோர்சொலப்பட்ட மூன்றன்றே * – அம்மூன்றும்
ஆராயில்தானே அறம்பொருளின்பமென்று* 3

ஆரார் இவற்றினிடையதனை எய்துவார்*
சீரா ரிருகலையும்எய்துவர்* – சிக்கெனமற்று 4

ஆரானுமுண்டெடன்பார் என்பதுதானதுவும்*
ஓராமையன்றே ? உலகத்தார்சொல்லும்சொல்* 5

ஓராமையாமாறு அதுவுரைக்கேன், கேளாமே*
காரார்புரவியேழ் பூண்டதனியாழி* 6

---

* திருமார்பு நாச்சியார் திருமஞ்சனத்திற்குப்பிறகு வெள்ளிக்கிழமைகளில் அநுஸந்தானம்.

Koviloor Digital Library

தேரார்நிறைகதிரோன் மண்டலத்தைக்கீண்டுபுக்கு*
ஆராவமுதமங்கெய்தி* அதினின்றும் 7

வாராதொழிவதொன்றுண்டே ? அதுநிற்க
ஏரார்முயல்விட்டுக் காக்கைப்பின்போவதே ?* 8

ஏராரிளமுலையீர் என்தனக்கு உற்றதுதான்*
காரார்குழலெடுத்துக்கட்டி* கதிர்முலையை 9

வாரார வீக்கி மணிமேகலை திருத்தி*
ஆராரயில்வேற்கண் அஞ்சனத்தின் நீறணிந்து* 10

சீரார்செழும்பந்து கொண்டடியாநின்றேன் நான்*
நீரார்கமலம்போல் செங்கண்மாலென்றொருவன்*! 11

பாரோர்களெல்லாம் மகிழப் பறைகறங்க*
சீரார்குடமிரண்டேந்தி* செழுந்தெருவே 12

ஆராரெனச்சொல்லி ஆடுமதுகண்டு*
ஏராரிளமுலையார் என்னையரும் எல்லாரும்* 13

வாராயோவென்றார்க்குச் சென்றேன் என் வல்வினையால்
காரார்மணிநிறமும் கைவளையும்காணேன் நான்* 14

ஆரானும் சொல்லிற்றும் கொள்ளேன்* அறிவழிந்து
தீராவுடம்பொடு பேதுறுவேன்கண்டிரங்கி 15

ஏரார்கிளிக்கிளவி எம்மனைதான் வந்து என்னை*
சீரார்செழும்புழுதிக்காப்பிட்டு* செங்குறிஞ்சித் 16

தாரார்நறுமாலைச் சாத்தற்கு* தான்பின்னும்
நேராதனவொன்று நேர்ந்தாள்* அதனாலும் 17

Koviloor Digital Library

தீராது என் சிந்தை நோய் தீராது என் பேதுறவு*
வாராது மாமை அது கண்டு மற்றாங்கே* 18

ஆரானும் மூதறியும் அம்மனைமார் சொல்லுவார்*
பாரோர் சொலப்படும் கட்டுப்படுத்திரேல்* 19

ஆரானும்மெய்ப்படுவனென்றார்* அதுகேட்டுக்
காரார்குழற்கொண்டைக் கட்டுவிச்சி கட்டேறி* 20

சீரார்சுளகில் சிலநெல் பிடித்தெறியா*
வேரா விதிர்விதிரா மெய்சிலிராக்கைமோவா* 21

பேராயிரமுடையான் என்றாள்* பேர்த்தேயும்
காரார்திருமேனிகாட்டினாள்* கையதுவும் 22

சீரார்வலம்புரியே என்றாள்* – திருத்துழாய்த்
தாரார்நறுமாலை கட்டுரைத்தாள் கட்டுரையா* 23

நீரேதும் அஞ்சேன்மின் நும்மகளைநோய்செய்தான்*
ஆரானுமல்லன் அறிந்தேன் அவனை நான்* 24

கூரார்வேற்கண்ணீர் உமக்கு அறியக்கூறுகேனோ?
ஆரால் இவ்வையம் அடியளப்புண்டதுதான்* 25

ஆரால் இலங்கை பொடிபொடியா வீழ்ந்தது* மற்று
ஆராலே கன்மாரி காத்ததுதான்?* – ஆழிநீர் 26

ஆரால் கடைந்திடப்பட்டது? * அவன் காண்மின்
ஊராநிரை மேய்த்து உலகெல்லாம் உண்டுமிழ்ந்தும் 27

ஆராத தன்மையனாய் ஆங்கொருநாள் ஆய்ப்பாடி*
சீரார்கலையல்குல் சீரடிச் செந்துவர்வாய்* 28

Koviloor Digital Library

வாரார்வனமுலையாள் மத்தாரப்பற்றிக்கொண்டு*
ஏராரிடைநோவ எத்தனையோர் போதுமாய்* 29

சீரார்தயிர்கடைந்து வெண்ணெய்திரண்டதனை*
வேரார்நுதல் மடவாள் வேறோர்கலத்திட்டு* 30

நாராருறியேற்றி நன்கமையவைத்ததனை*
போரார்வேற்கண் மடவாள் போந்தனையும் பொய்யுறக்கம்* 31

ஒராதவன்போல் உறங்கியறிவுற்று*
தாரார்தடந்தோள்கள் உள்ளளவும் கைநீட்டி* 32

ஆராதவெண்ணெய் விழுங்கி* அருகிருந்த
மோரார்குடமுருட்டி முன்கிடந்த தானத்தே* 33

ஒராதவன்போல் கிடந்தானைக் கண்டவளும்*
வாராத்தான்வைத்தது காணாள்* வயிறடித்து இங்கு 34

ஆரார் புகுதுவார் ? ஐயரிவரல்லால்*
நீராம் இதுசெய்தீர் என்று ஓர்நெடுங்கயிற்றால் 35

ஊரார்களெல்லாரும் காண உரலோடே*
தீராவெகுளியளாய்ச் சிக்கெனவார்த்தடிப்ப* 36

ஆராவயிற்றினோடு ஆற்றாதான்* – அன்றியும்
நீரார்நெடுங்கயத்தைச் சென்றலைக்கநின்றுரப்பி 37

ஒராயிரம்பண வெங்கோவியல்நாகத்தை*
வாராயெனக்கென்று மற்றதன் மத்தகத்து* 38

சீரார்திருவடியால் பாய்ந்தான்* தன்சீதைக்கு
நேராவனென்று ஓர் நிசாசரிதான் வந்தாளை* 39

Koviloor Digital Library

கூரார்ந்த வாளால் கொடிமூக்கும் காதிரண்டும்*
ஈராவிடுத்து அவட்குமூத்தோனை* வெந்நரகம் 40

சேராவகையே சிலை குனித்தான்* செந்துவர்வாய்
வாரார்வனமுலையாள் வைதேவி காரணமா* 41

ஏரார்தடந்தோளிராவணனை* ஈரைந்து
சீரார்சிரமறுத்துச் செற்றுகந்த செங்கண்மால்* 42

போரார்நெடுவேலோன் பொன்பெயரோனாகத்தை*
கூரார்ந்தவள்ளுகிரால்கீண்டு* குடல்மாலை 43

சீரார்திருமார்பின்மேல்கட்டி* செங்குருதி
சோராக்கிடந்தானைக் குங்குமத்தோள் கொட்டி* 44

ஆராவெழுந்தான் அரியுருவாய்* அன்றியும்
பேர்வாமனனாகிய காலத்து* மூவடி மண் 45

தாராய் எனக்கென்று வேண்டிச்சலத்தினால்
நீரேற்று உலகெல்லாம் நின்றளந்தான் மாவலியை* 46

ஆராத போரில் அசுரர்களும் தானுமாய்*
காரார்வரைநட்டு நாகம் கயிறாக* 47

பேராமல் தாங்கிக்கடைந்தான்* திருத்துழாய்த்
தாரார்ந்த மார்வன் தடமால்வரைபோலும்* 48

போரானை பொய்கைவாய்க் கோட்பட்டுநின்றலறி*
நீரார்மலர்க்கமலம்கொண்டு ஓர் நெடுங்கையால்* 49

நாராயணா! ஓ மணிவண்ணா! நாகணையாய்!*
வாராய் என்னாரிடரை நீக்காய்* என வெகுண்டு 50

தீராத சீற்றத்தால் சென்று இரண்டு கூறாக*
ஈரா அதனை யிடர்கடிந்தான் எம்பெருமான்* 51

பேராயிரமுடையான் பேய்ப்பெண்டீர் நும்மகளை*
தீராநோய் செய்தான் என உரைத்தாள்* சிக்கென, மற்று 52

ஆரானுமல்லாமை கேட்டு எங்களம்மனையும்*
போரார்வேற்கண்ணீர்! அவனாகில் பூந்துழாய்* 53

தாராதொழியுமே ? தன்னடிச்சியல்லளே ? மற்று
ஆரானுமல்லனேயென்றொழிந்தாள்* நான் அவனைக் 54

காரார்திருமேனி கண்டதுவே காரணமா*
பேராப்பிதற்றாத் திரிதருவன்* பின்னையும் 55

ஈராப்புகுதலும் இவ்வுடலைத்தண்வாடை*
சோராமறுக்கும் வகை யறியேன்* சூழ்குழலார் 56

ஆரானுமேசுவ ரென்னுமதன்பழியை*
வாராமல் காப்பதற்கு வாளா இருந்தோழிந்தேன்* 57

வாராய்மடநெஞ்சே! வந்து* மணிவண்ணன்
சீரார்திருத்துழாய்மாலை நமக்கருளி* 58

தாரான் தருமென்று இரண்டத்தில் ஒன்றதனை*
ஆரானும் ஒன்னாதார் கேளாமே சொன்னக்கால்* 59

ஆராயுமேலும் பணி, கேட்டு அதன்றெனிலும்*
போராதொழியாதே போந்திடு நீயென்றேற்கு* 60

காரார்கடல்வண்ணன்பின் போன நெஞ்சமும்*
வாராதே என்னை மறந்ததுதான்* வல்வினையேன் 61

Koviloor Digital Library

ஊராருகப்பதேயாயினேன்* மற்றெனக்கிங்கு
ஆராய்வாரில்லை அழல்வாய் மெழுகுபோல்* 62

நீராய் உருகும் என்னாவி* நெடுங்கண்கள்
ஊராருறங்கிலும் தானுறங்கா* உத்தமன்தன் 63

பேராயினவே பிதற்றுவன்* பின்னையும்
காரார்கடல்போலும் காமத்தராயினார்* 64

ஆரே பொல்லாமையறிவார்* அதுநிற்க
ஆரானுமாதானும் அல்லளவள்காணீர்* 65

வாரார்வனமுலை வாசவதத்தையென்று*
ஆரானும் சொல்லப்படுவாள்* அவளும் தன் 66

பேராயமெல்லாம் ஒழியப் பெருந்தெருவே*
தாரார்தடந்தோள் தளைக்காலன்பின் போனாள் 67

ஊராரிகழ்ந்திடப்பட்டாளே ?* மற்றெனக்கிங்கு
ஆரானும்கற்பிப்பார் நாயகரே ? * நான் அவனைக் 68

காரார்திருமேனி காணுமளவும்போய்*
**சீரார்திருவேங்கடமே திருக்கோவ 69

லூரே* மதிட்கச்சியூரகமே பேரகமே*
பேராமருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே* 70

பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர்*
**ஆராமம்சூழ்ந்த அரங்கம்* கணமங்கை 71

காரார்மணிநிறக்கண்ணனூர் விண்ணகரம்*
சீரார்கணபுரம் சேறை திருவழுந்தூர்* 72

Koviloor Digital Library

காரார்குடந்தை கடிகை கடல்மல்லை*
ஏரார்பொழில்சூழ் இடவெந்தை நீர்மலை* 73

சீராரும்மாலிருஞ்சோலை திருமோகூர்*
பாரோர்புகழும் வதரி வடமதுரை* 74

ஊராயவெல்லாம் ஒழியாமே நான் அவனை*
ஓரானை கொம்பொசித்து ஓரானை கோள்விடுத்த 75

சீரானை* செங்கணெடியானைத் தேன்துழாய்த்
தாரானை* தாமரைபோல்கண்ணானை* எண்ணருஞ்சீர்ப் 76

பேராயிரமும் பிதற்றி** பெருந்தெருவே
ஊராரிகழிலும் ஊராதொழியேன்நான்* 77
வாரார்பூம்பெண்ணைமடல்*

சிறிய திருமடல் முற்றும்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

நேரிசைவெண்பா

* ஊராதொழியேன் உலகறிய ஒண்ணுதலீர்*
சீரார்முலைத்தடங்கள்சேரளவும்* பாரெல்லாம்
அன்றோங்கிநின்றளந்தான் நின்ற திருநறையூர்*
மன்றோங்க ஊர்வன் மடல்.

Koviloor Digital Library

பூச்சூட்டல்*

பெரியாழ்வார் திருமொழி 2–7

**ஆநிரை மேய்க்க நீ போதி அருமருந்து ஆவது அறியாய்*
கானகம் எல்லாம் திரிந்து உன் கரிய திருமேனி வாட*
பானையில் பாலைப் பருகிப் பற்றாதார் எல்லாம் சிரிப்ப*
தேனில் இனிய பிரானே! செண்பகப்பூச் சூட்ட வாராய் 1

கருவுடை மேகங்கள் கண்டால் உன்னைக் கண்டால் ஒக்கும் கண்கள்*
உருவுடையாய்! உலகேழும் உண்டாக வந்து பிறந்தாய்*
திருவுடையாள் மணவாளா! திருவரங்கத்தே கிடந்தாய்*
மருவி மணம் கமழ்கின்ற மல்லிகைப்பூச்சூட்ட வாராய்* 2

மச்சொடு மாளிகை ஏறி மாதர்கள்தம் இடம் புக்கு*
கச்சொடு பட்டைக்கிழித்துக் காம்பு துகிலவை கீறி*
நிச்சலும் தீமைகள் செய்வாய் நீள்திருவேங்கடத்து எந்தாய்*
பச்சைத் தமனகத்தோடு பாதிரிப்பூச்சூட்ட வாராய் 3

தெருவின்கண் நின்று இளவாய்ச்சிமார்களைத் தீமை செய்யாதே*
மருவும் தமனகமும் சீர் மாலை மணம் கமழ்கின்ற*
புருவம் கருங்குழல் நெற்றி பொலிந்த முகில் கன்று போலே*
உருவம் அழகிய நம்பீ! உகந்திவை சூட்ட நீ வாராய் 4

புள்ளினை வாய் பிளந்திட்டாய்! பொருகரியின் கொம்பொசித்தாய்*
கள்ள அரக்கியை மூக்கொடு காவலனைத் தலை கொண்டாய்*
அள்ளி நீ வெண்ணெய் விழுங்க அஞ்சாது அடியேன் அடித்தேன்*
தெள்ளிய நீரில் எழுந்த செங்கழுநீர் சூட்ட வாராய் 5

எருதுகளோடு பொருதி ஏதும் உலோபாய் காண் நம்பீ!*
கருதிய தீமைகள் செய்து கஞ்சனைக் கால்கொடு பாய்ந்தாய்*

---

* இது முதல் கண்ணிநுண்சிறுத்தாம்பு முடிவாக மாலைத் தோமாலை ஸேவையில் நித்யாநுஸந்தாதம்

Koviloor Digital Library

தெருவின்கண் தீமைகள் செய்து சிக்கென மல்லர்களோடு*
பொருது வருகின்ற பொன்னே! புன்னைப்பூச் சூட்ட வாராய். 6

குடங்கள் எடுத்து ஏறவிட்டுக் கூத்தாடவல்ல எங்கோவே!*
மடங்கொள் மதிமுகத்தாரை மால் செய்யவல்ல என்மைந்தா!*
இடந்திட்டு இரணியன் நெஞ்சை இருபிளவாக முன்கீண்டாய்*
குடந்தைக் கிடந்த எங்கோவே! குருக்கத்திப்பூச் சூட்ட வாராய். 7

சீமாலிகன் அவனோடு தோழமை கொள்ளவும் வல்லாய்*
சாமாறு அவனை நீ எண்ணிச் சக்கரத்தால் தலை கொண்டாய்*
ஆமாறு அறியும் பிரானே! அணி அரங்கத்தே கிடந்தாய்*
ஏமாற்றம் என்னைத் தவிர்த்தாய் இருவாட்சிப்பூச் சூட்ட வாராய் 8

அண்டத்து அமரர்கள் சூழ அத்தாணியுள் அங்கிருந்தாய்
தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய்! தூமலராள் மணவாளா!*
உண்டிட்டு உலகினை ஏழும் ஓர் ஆலிலையில் துயில் கொண்டாய்*
கண்டு நான் உன்னை உகக்கக் கருமுகைப்பூச் சூட்ட வாராய் 9

**செண்பக மல்லிகையோடு செங்கழுநீர் இருவாட்சி*
எண்பகர்பூவும் கொணர்ந்தேன் இன்று இவை சூட்ட வா என்று*
மண்பகர் கொண்டானை ஆய்ச்சி மகிழ்ந்து உரைசெய்த இம்மாலை*
பண்பகர் வில்லிபுத்தூர்க்கோன் பட்டர்பிரான் சொன்ன பத்தே 10

அடிவரவு: ஆநிரை கரு மச்சு தெரு புள் எருது குடம் சீமாலிகன் அண்டம் செண்பகம் இந்திரன்.

Koviloor Digital Library

காப்பிடல்

பெரியாழ்வார் திருமொழி 2–8

**இந்திரனோடு பிரமன் ஈசன் இமையவர் எல்லாம்*
மந்திர மாமலர் கொண்டு மறைந்து உவராய் வந்து நின்றார்*
சந்திரன் மாளிகை சேரும் சதுரர்கள் வெள்ளறை நின்றாய்*
அந்தியம்போது இதுவாகும் அழகனே! காப்பிட வாராய். 1

கன்றுகள் இல்லம் புகுந்து கதறுகின்ற பசுவெல்லாம்*
நின்றொழிந்தேன் உன்னைக் கூவி நேசமேல் ஒன்றும் இலாதாய்*
மன்றில் நில்லேல் அந்திப்போது மதிள் திருவெள்ளறை நின்றாய்!*
நன்று கண்டாய் என்தன் சொல்லு நான் உன்னைக் காப்பிட வாராய். 2

செப்போது மென்முலையார்கள் சிறுசோறும் இல்லும் சிதைத்திட்டு*
அப்போது நானுரப்பப் போய் அடிசிலும் உண்டிலை ஆள்வாய்*
முப்போதும் வானவர் ஏத்தும் முனிவர்கள் வெள்ளறை நின்றாய்*
இப்போது நான் ஒன்றும் செய்யேன் எம்பிரான்! காப்பிட வாராய். 3

கண்ணில் மணல்கொடு தூவிக் காலினால் பாய்ந்தனை என்றென்று*
எண்ணரும் பிள்ளைகள் வந்திட்டு இவரால் முறைப்படுகின்றார்*
கண்ணனே! வெள்ளறை நின்றாய் கண்டாரோடே தீமை செய்வாய்*
வண்ணமே வேலையதொப்பாய் வள்ளலே காப்பிட வாராய். 4

பல்லாயிரவர் இவ்வூரில் பிள்ளைகள் தீமைகள் செய்வார்*
எல்லாம் உன்மேல் அன்றிப் போகாது எம்பிரான்! நீ இங்கே வாராய்.
நல்லார்கள் வெள்ளறை நின்றாய் ஞானச்சுடரே! உன்மேனி*
சொல்லார வாழ்த்தி நின்று ஏத்திச் சொப்படக் காப்பிட வாராய். 5

கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல் கருநிறச் செம்மயிர்ப் பேயை*
வஞ்சிப்பதற்கு விடுத்தான் என்பதோர் வார்த்தையும் உண்டு*
மஞ்சுதவழ் மணிமாட மதிள் திருவெள்ளறை நின்றாய்*
அஞ்சுவன் நீ அங்கு நிற்க அழகனே! காப்பிட வாராய். 6

Koviloor Digital Library

கள்ளச் சகடும் மருதும் கலக்கழிய உதை செய்த*
பிள்ளை அரசே! நீ பேயைப் பிடித்து முலை யுண்ட பின்னை*
உள்ளவாறு ஒன்றும் அறியேன் ஒளியுடை வெள்ளறை நின்றாய்*
பள்ளிகொள்போது இதுவாகும் பரமனே! காப்பிட வாராய். 7

இன்பம் அதனை உயர்ந்தாய் இமையவர்க்கு என்றும் அரியாய்*
கும்பக்களிறு அட்ட கோவே! கொடுங்கஞ்சன் நெஞ்சினில் கூற்றே*
செம்பொன் மதிள் வெள்ளறையாய்! செல்வத்தினால் வளர் பிள்ளாய்*
கம்பக் கபாலி காண் அங்குக் கடிதோடிக் காப்பிட வாராய். 8

இருக்கொடு நீர் சங்கில் கொண்டிட்டு எழில்மறையோர் வந்து நின்றார்*
தருக்கேல் நம்பி! சந்தி நின்று தாய்சொல்லுக் கொள்ளாய் சிலநாள்*
திருக்காப்பு நான் உன்னைச் சாத்தத் தேசுடை வெள்ளறை நின்றாய்!*
உருக்காட்டும் அந்திவிளக்கு இன்று ஒளிகொள்ள ஏற்றுகேன் வாராய். 9

**போதமர் செல்வக்கொழுந்து புணர் திருவெள்ளறையானை*
மாதர்க்கு உயர்ந்தஅசோதை மகன் தன்னைக் காப்பிட்ட மாற்றம்*
வேதப்பயன் கொள்ள வல்ல விட்டுசித்தன் சொன்ன மாலை*
பாதப்பயன் கொள்ள வல்ல பத்தருள்ளார் வினை போமே. 10

அடிவரவு : இந்திரன் கன்று செப்பு கண்ணில் பல்லாயிரவர் கஞ்சன்
கள்ளம் இன்பம் இருக்கொடு போதமர் வெண்ணெய்

Koviloor Digital Library

சென்னியோங்கு

பெரியாழ்வார் திருமொழி 5-4

**சென்னியோங்கு தண் திருவேங்கடம் உடையாய்* உலகு
தன்னை வாழ நின்ற நம்பீ! தாமோதரா சதிரா!*
என்னையும் என் உடைமையையும் உன் சக்கரப்பொறி ஒற்றிக்கொண்டு*
நின்னருளே புரிந்து இருந்தேன் இனி என் திருக்குறிப்பே. 1

பறவையேறு பரம்புருடா! நீ என்னைக் கைக்கொண்ட பின்*
பிறவி என்னும் கடலும் வற்றிப் பெரும் பதம் ஆகின்றதால்*
இறவு செய்யும் பாவக்காடு தீக்கொளீஇ வேகின்றதால்*
அறிவை என்னும் அமுதவாறு தலைப் பற்றி வாய்க்கொண்டதே. 2

எம்மனா! என் குலதெய்வமே! என்னுடைய நாயகனே!*
நின்னுளேனாய்ப் பெற்ற நன்மை இவ்வுலகினில் ஆர் பெறுவார்*
நம்மன் போலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவம் எல்லாம்*
சும்மெனாதே கைவிட்டு ஓடித் தூறுகள் பாய்ந்தனவே. 3

கடல் கடைந்து அமுதம் கொண்டு கலசத்தை நிறைத்தாற் போல்*
உடலுருகி வாய்திறந்து மடுத்து உன்னை நிறைத்துக் கொண்டேன்*
கொடுமை செய்யும் கூற்றமும் என் கோல் ஆடி குறுகப் பெறா*
தடவரைத் தோள் சக்ரபாணீ! சார்ங்கவில் சேவகனே!* 4

பொன்னைக் கொண்டு உரைகல் மீதே நிறமெழ உரைத்தாற் போல்*
உன்னைக் கொண்டு என் நாவகம் பால் மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்*
உன்னைக்கொண்டு என்னுள் வைத்தேன் என்னையும் உன்னில் இட்டேன்*
என் அப்பா! என் இருடீகேசா! என் உயிர்க் காவலனே! 5

உன்னுடைய விக்கிரம் ஒன்று ஒழியாமல் எல்லாம்*
என்னுடைய நெஞ்சகம் பால் சுவர்வழி எழுதிக்கொண்டேன்*
மன் அடங்க மழு வலங்கைக் கொண்ட இராமநம்பீ!*
என்னிடை வந்து எம்பெருமான் இனி எங்குப் போகின்றதே? 6

Koviloor Digital Library

** பருப்பதத்துக் கயல் பொறித்த பாண்டியர் குலபதிபோல்*
திருப்பொலிந்த சேவடி என் சென்னியின் மேல் பொறித்தாய்*
மருப்பு ஒசித்தாய் மல் அடர்த்தாய் என்றென்று உன் வாசகமே*
உருப்பொலிந்த நாவினேனை உனக்கு உரித்தாக்கினையே. 7

அனந்தன் பாலும் கருடன் பாலும் ஐது நொய்தாக வைத்து* என்
மனந்தனுள்ளே வந்து வைகி வாழச் செய்தாய் எம்பிரான்!*
நினைந்து என்னுள்ளே நின்று நெக்குக் கண்கள் அசும்பு ஒழுக*
நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன் நேமி நெடியவனே!. 8

பனிக்கடலில் பள்ளிகோளைப் பழக விட்டு* ஓடி வந்து என்
மனக் கடலில் வாழ வல்ல மாய மணாள நம்பீ!*
தனிக் கடலே தனிச் சுடரே தனி உலகே என்றென்று*
உனக்கு இடமாயிருக்க, என்னை உனக்கு உரித்தாக்கினையே. 9

**தடவரைவாய் மிளிர்ந்து மின்னும் தவள நெடுங்கொடி போல்*
சுடரொளியாய் நெஞ்சினுள்ளே தோன்றும் என் சோதி நம்பீ*
வடதடமும் வைகுந்தமும் மதிள் துவராபதியும்*
இடவகைகள் இகழ்ந்திட்டு என்பால் இடவகை கொண்டனையே. 10

**வேயர் தங்கள் குலத்து உதித்த விட்டுசித்தன் மனத்தே*
கோயில் கொண்ட கோவலனைக் கொழுங்குளிர்முகில்வண்ணனை*
ஆயர் ஏற்றை அமரர் கோவை அந்தணர்தம் அமுதத்தினை*
சாயைபோலப் பாடவல்லார்தாமும் அணுக்கர்களே. 11

அடிவரவு : சென்னி பறவை எம்மனா கடல் பொன் உன் பருப்பதத்து
அனந்தன் பனி தடவரை வேயர் மார்கழி

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

மாலைத்தோமாலைஸேவையில் இதைத் தொடர்ந்து

நாச்சியார் திருமொழியிலிருந்து

விண்ணீலமேலாப்பு (8) பக்கம் எண் 37

அநுஸந்திக்கப்படுகிறது.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பெருமாள் திருமொழி

நான்காம் திருமொழி – ஊனேறு

(ஆழ்வார் திருவேங்கடமலையில் ஏதேனுமாக விரும்புதல்)

தரவுகொச்சகக்கலிப்பா

** ஊனேறுசெல்வத்து உடற்பிறவி யான் வேண்டேன்*
ஆனேறேழ்வென்றான் அடிமைத்திறமல்லால்*
கூனேறுசங்கமிடத்தான்தன் வேங்கடத்து*
கோனேரிவாழும் குருகாய்ப்பிறப்பேனே. 1

ஆனாதசெல்வத்து அரம்பையர்கள் தற்சூழ*
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்*
தேனார்பூஞ்சோலைத் திருவேங்கடச்சுனையில்*
மீனாய்ப்பிறக்கும் விதி யுடையெனாவேனே. 2

பின்னிட்டசடையானும் பிரமனும் இந்திரனும்*
துன்னிட்டுப்புகலரிய வைகுந்தநீள்வாசல்*
மின்வட்டச்சுடராழி வேங்கடக்கோன்தானுமிழும்*
பொன்வட்டில்பிடித்து உடனே புகப்பெறுவெனாவேனே. 3

ஒண்பவளவேலையுலவு தண்பாற்கடலுள்*
கண்துயிலும் மாயோன் கழலிணைகள்காண்பதற்கு*
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும்வேங்கடத்து*
செண்பகமாய் நிற்கும் திருவுடையெனாவேனே. 4

கம்பமதயானைக் கழுத்தகத்தின்மேலிருந்து*
இன்பமரும்செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்*
எம்பெருமான் ஈசன் எழில்வேங்கடமலைமேல்*
தம்பகமாய்நிற்கும் தவமுடையெனாவேனே. 5

Koviloor Digital Library

மின்னனையநுண்ணிடையார் உருப்பசியும்மேனகையும்*
அன்னவர்தம்பாடலொடும் ஆடலவை ஆதரியேன்*
தென்னவென வண்டினங்கள் பண்பாடும்வேங்கடத்துள்*
அன்னனையபொற்குவடாம் அருந் தவத்தெனாவேனே. 6

வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ்* மன்னவர்தம்
கோனாகிவீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்*
தேனார்பூஞ்சோலைத் திருவேங்கடமலைமேல்*
கானாறாய்ப்பாயும் கருத்துடையெனாவேனே. 7

பிறையேறுசடையானும் பிரமனும் இந்திரனும்*
முறையாய பெருவேள்விக் குறைமுடிப்பான்மறையானான்*
வெறியார்தண்சோலைத் திருவேங்கடமலைமேல்*
நெறியாய்க்கிடக்கும் நிலையுடையெனாவேனே. 8

**செடியாயவல்வினைகள் தீர்க்கும்திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்*
அடியாரும்வானவரும் அரம்பையரும்கிடந்தியங்கும்*
படியாய்க்கிடந்து உன் பவளவாய் காண்பேனே. 9

உம்பருலகாண்டு ஒருகுடைக்கீழ்* உருப்பசிதன்
அம்பொற்கலையல்குல் பெற்றாலும் ஆதரியேன்*
செம்பவளவாயான் திருவேங்கடமென்னும்*
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே. 10

**மன்னியதண்சாரல் வடவேங்கடத்தான்தன்*
பொன்னியலும்சேவடிகள்காண்பான் புரிந்திறைஞ்சி*
கொன்னவிலும்கூர்வேல் குலசேகரன்சொன்ன*
பன்னியநூல் தமிழ்வல்லார் பாங்காயபத்தர்களே. 11

அடிவரவு : ஊன் ஆனாத பின்னிட்ட ஒண் கம்பம் மின் வான் பிறை செடி உம்பர் மன்னிய தரு

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

பெரியதிருமொழி

முதலாம் பத்து ஒன்பதாம் திருமொழி

கலிநிலைத்துறை

**தாயே தந்தையென்றும் தாரமே கிளைமக்களென்றும்*
நோயேபட்டொழிந்தேன் நுன்னைக்காண்பதோராசையினால்*
வேயேய்பூம்பொழில்சூழ் விரையார்திருவேங்கடவா!*
நாயேன் வந்தடைந்தேன் நல்கிஆளென்னைக்கொண்டருளே. 1

மானேய்கண் மடவார் மயக்கில்பட்டு* மாநிலத்து
நானே நானாவித நரகம்புகும் பாவம் செய்தேன்*
தேனேய்பூம்பொழில்சூழ் திருவேங்கடமாமலை* என்
ஆனாய்! வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 2

கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன்றிலாமையினால்*
என்றேனும் இரந்தார்க்கு இனிதாக உரைத்தறியேன்*
குன்றேய்மேகமதிர் குளிர்மாமலைவேங்கடவா!*
அன்றே வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 3

குலந்தானெத்தனையும் பிறந்தேயிறந்தெய்த்தொழிந்தேன்*
நலந்தானொன்றுமிலேன் நல்லதோரறம் செய்துமிலேன்*
நிலம்தோய் நீள்முகில்சேர் நெறியார்திருவேங்கடவா!*
அலந்தேன் வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 4

எப்பாவம் பலவும் இவையே செய்து இளைத்தொழிந்தேன்*
துப்பா! நின்னடியே தொடர்ந்தேத்தவும்கிற்கின்றிலேன்*
செப்பார்திண்வரைசூழ் திருவேங்கடமாமலை* என்
அப்பா! வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 5

மண்ணாய் நீர் எரி கால் மஞ்சுலாவும் ஆகாசமுமாம்*
புண்ணாராக்கைதன்னுள் புலம்பித்தளர்ந்து எய்த்தொழிந்தேன்*
விண்ணார்நீள்சிகர விரையார்திருவேங்கடவா!*
அண்ணா! வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 6

Koviloor Digital Library

தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள் செய்துமிட்டேன்*
பெரியேனாயினபின் பிறர்க்கேயுழைத்து ஏழையானேன்*
கரிசேர்பூம்பொழில்சூழ் கனமாமலை வேங்கடவா!*
அரியே! வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 7

நோற்றேன் பல்பிறவி நுன்னைக்காண்பதோராசையினால்*
ஏற்றேன் இப்பிறப்பே இடருற்றனன் எம்பெருமான்*
கோல்தேன் பாய்ந்தொழுகும் குளிர்சோலைசூழ்வேங்கடவா!*
ஆற்றேன் வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 8

பற்றேல் ஒன்றுமிலேன் பாவமே செய்து பாவியானேன்*
மற்றேலொன்றறியேன் மாயனே! எங்கள்மாதவனே*
கல்தேன்பாய்ந்தொழுகும் கமலச்சுனைவேங்கடவா!*
அற்றேன் வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 9

**கண்ணாய்ஏழுலகுக்கு உயிராய எங்கார்வண்ணனை*
விண்ணோர்தாம் பரவும் பொழில்வேங்கடவேதியனை*
திண்ணார்மாடங்கள்சூழ் திருமங்கையர்கோன்கலியன்*
பண்ணார்பாடல்பத்தும் பயில்வார்க்கு இல்லை பாவங்களே. 10

அடிவரவு : தாய் மான் கொன்றேன் குலம் எப்பாவம் மண் தெரியேன் நோற்றேன் பற்றேல் கண்ணாய் கண்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

பெரிய திருமொழி மூன்றாம்பத்து இரண்டாம் திருமொழி

திருச்சித்திரகூடம் – 1✱

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

**ஊன்வாட உண்ணாதுஉயிர்காவலிட்டு
உடலில்பிரியாப்புலனைந்தும் நொந்து*
தாம் வாடவாடத்தவம் செய்யவேண்டா
தமதா இமையோருலகாளகிற்பீர்*
கானாட மஞ்ஞைக்கணமாட மாடே
கயலாடுகானீர்ப்பழனம் புடைபோய்*
தேனாட மாடக்கொடியாடு தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்றுசேர்மின்களே. 1

காயோடு நீடுகனியுண்டு, வீசு
கடுங்கால் நுகர்ந்து, நெடுங்காலம் * ஐந்து
தீயோடு நின்றுதவம் செய்யவேண்டா
திருமார்பனைச்சிந்தையுள் வைத்துமென்பீர்
வாயோதுவேதம்மலிகின்ற தொல்சீர்
மறையாளர் நாளும் முறையால்வளர்த்த*
தீயோங்கவோங்கப்புகழோங்குதில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே. 2

வெம்பும் சினத்துப்புனக்கேழலொன்றாய்
விரிநீர் முதுவெள்ளம் உள்புக்கழுந்த*
வம்புண்பொழில்சூழுலகன்றெடுத்தான்
அடிப்போது அணைவான்விருப்போடு இருப்பீர்*
பைம்பொன்னும்முத்தும்மணியும் கொணர்ந்து
படைமன்னவன் பல்லவர்கோன் பணிந்த*
செம்பொன்மணிமாடங்கள்சூழ்ந்த தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே. 3

✱ முன்பு திருச்சித்திரகூடத்தில் எழுந்தருளியிருந்த எம்பெருமான் தற்போது திருப்பதியில் எழுந்தருளியிருப்பதுகொண்டு அநுஸந்தானம்.

Koviloor Digital Library

அருமாநிலம்அன்று அளப்பான் குறளாய்
அவுணன் பெருவேள்வியில்சென்றிரந்த*
பெருமான் திருநாமம் பிதற்றி நுந்தம்
பிறவித்துயர் நீங்குதுமென்னகிற்பீர்*
கருமாகடலுள்கிடந்தான் உவந்து
கவைநா அரவினணைப்பள்ளியின்மேல்*
திருமால்திருமங்கைெ(ே)யாடாடு தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே. 4

கோமங்க வங்கக்கடல்வையம் உய்யக்
குலமன்னரங்கம் மழுவில் துணிய*
தாம் அங்கு அமருள் படைதொட்ட வென்றித்
தவமாமுனியைத்தமக்காக்ககிற்பீர்*
பூமங்கைதங்கிப்புலமங்கைமன்னிப்
புகழ்மங்கை எங்கும் திகழப்* புகழ்சேர்
சேமம்கொள்பைம்பூம்பொழில் சூழ்ந்த தில்லைத்
திருச்சித்ரகூடம்சென்று சேர்மின்களே. 5

நெய்வாயழலம்புதுரந்து முந்நீர்
துணியப்பணிகொண்டு அணியார்ந்து* இலங்கு
மையார்மணிவண்ணனை எண்ணி நுந்தம்
மனத்தே இருத்தும்படி வாழவல்லீர்*
அவ்வாய் இளமங்கையர்பேசவும்தான்
அருமாமறையந்தணர்சிந்தைபுக*
செவ்வாய்க்கிளி நான்மறைபாடுதில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே. 6

மௌவல் குழலாய்ச்சிமென்தோள்நயந்து
மகரம் சுழலச்சுழல்நீர்பயந்த*
தெய்வத்திருமாமலர்மங்கைதங்கு
திருமார்பனைச்சிந்தையுள் வைத்துமென்பீர்*

Koviloor Digital Library

கௌவைக்களிற்றின் மருப்பும் பொருப்பில்
கமழ்சந்தும் உந்தி நிவா வலங்கொள்*
தெய்வப்புனல்சூழ்ந்து அழகாய தில்லைத்
திருச்சித்ரகூடம்சென்று சேர்மின்களே. 7

மாவாயினங்கம் மதியாது கீறி
மழை மாமுதுகுன்று எடுத்து* ஆயர்தங்கள்
கோவாய் நிரைமேய்த்து உலகுண்டமாயன்
குரைமாகழல்கூடும் குறிப்புடையீர்*
மூவாயிரம் நான்மறையாளர் நாளும்
முறையால்வணங்க, அணங்காயசோதி*
தேவாதிதேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 8

செருநீலவேல்கண் மடவார்திறத்துச்
சினத்தோடு நின்று மனத்தால்வளர்க்கும்*
அருநீலபாவம் அகலப் புகழ்சேர்
அமரர்க்கும் எய்தாத அண்டத்து இருப்பீர்*
பெருநீர்நிவா உந்தி முத்தம் கொணர்ந்து எங்கும்
வித்தும் வயலுள் கயல்பாய்ந்து உகள*
திருநீலம் நின்று திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே. 9

**சீரார்பொழில்சூழ்ந்து அழகாயதில்லைத்
திருச்சித்ரகூடத்து உறைசெங்கண்மாலுக்கு*
ஆராதஉள்ளத்தவர் கேட்டு உவப்ப
அலை நீருலகுக்கு அருளேபுரியும்*
காரார்புயற்கைக்கலிகன்றி குன்றாவொலிமாலை
ஒரோன்பதோடு ஒன்றும்வல்லார்*
பாராருலகம் அளந்தானடிக்கீழ்ப்
பலகாலம்நிற்கும்படி வாழ்வர்தாமே. 10

அடிவரவு : ஊன் காயோடு வெம்பும் அருமா கோமங்க நெய் மௌவல் மாவாயின் செருசீரார் வாட

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

பெரிய திருமொழி மூன்றாம்பத்து மூன்றாம் திருமொழி - வாடமருதிடை

திருச்சித்திரகூடம் – 2

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

**வாடமருதிடைபோகி மல்லரைக்கொன்று ஒக்கலித்திட்டு*
ஆடல்நன்மாவுடைத்து ஆயராநிரைக்கு அன்று இடர்தீர்ப்பான்*
கூடியமாமழைகாத்த கூத்தனெனவருகின்றான்*
சேடுயர்பூம்பொழில்தில்லைச் சித்திரகூடத்துள்ளானே. 1

பேய்மகள் கொங்கைநஞ்சுண்ட பிள்ளை பரிசு இதுவென்றால்*
மாநிலமாமகள் மாதர்கேள்வன் இவனென்றும்* வண்டுண்
பூமகள் நாயகனென்றும் புலங்கெழுகோவியர்பாடி*
தேமலர்தூவவருவான் சித்திரகூடத்துள்ளானே. 2

பண்டு இவன் வெண்ணெயுண்டானென்று ஆய்ச்சியர்கூடி இழிப்ப*
எண்திசையோரும்வணங்க இணைமருதூடுநடந்திட்டு*
அண்டரும் வானத்தவரும் ஆயிரநாமங்களோடு*
திண்திறல்பாட வருவான் சித்திரகூடத்துள்ளானே. 3

வளைக்கைநெடுங்கண்மடவார் ஆய்ச்சியர் அஞ்சி அழைப்ப*
தளைத்தவிழ்தாமரைப்பொய்கைத் தண்தடம்புக்கு அண்டர்காண*
முளைத்தஎயிற்றழல் நாகத்து உச்சியில் நின்று அதுவாட*
திளைத்தமர்செய்து வருவான் சித்திரகூடத்துள்ளானே. 4

பருவக்கருமுகிலொத்து முத்துடை மாகடலொத்து*
அருவித்திரள்திகழ்கின்ற ஆயிரம் பொன்மலையொத்து*
உருவக்கருங்குழலாய்ச்சிதிறத்து இனமால்விடை செற்று*
தெருவில் திளைத்துவருவான் சித்திரகூடத்துள்ளானே. 5

** எய்யச்சிதைந்தது இலங்கை மலங்க வருமழை காப்பான்*
உய்யப்பருவரைதாங்கி ஆநிரைகாத்தானென்று ஏத்தி*

Koviloor Digital Library

வையத் தெவரும் வணங்க அணங்கெழுமாமலைபோலே*
தெய்வப்புள் ஏறிவருவான் சித்திரகூடத்துள்ளானே. 6

ஆவர் இவைசெய்தறிவார் ? அஞ்சனமாமலைபோலே*
மேவுசினத்து அடல் வேழம் வீழமுனிந்து* அழகாய
காவிமலர் நெடுங்கண்ணார் கைதொழ வீதிவருவான்*
தேவர்வணங்குதண்தில்லைச் சித்திரகூடத்துள்ளானே. 7

பொங்கி அமரிலொருகால் பொன்பெயரோனைவெருவ*
அங்கு அவனாகம் அளைந்திட்டு ஆயிரந்தோள் எழுந்தாட*
பைங்கணிரண்டு எரிகான்ற நீண்ட எயிற்றொடு பேழ்வாய்*
சிங்கவுருவில் வருவான் சித்திரகூடத்துள்ளானே. 8

கருமுகில்போல்வது ஓர்மேனி கையன ஆழியும் சங்கும்*
பெருவிறல்வானவர் சூழ ஏழுலகும் தொழுதேத்த*
ஒருமகள் ஆயர்மடந்தை ஒருத்தி நிலமகள்* மற்றைத்
திருமகளோடும் வருவான் சித்திரகூடத்துள்ளானே. 9

**தேனமர்பூம்பொழில் தில்லைச்சித்திரகூடம் அமர்ந்த*
வானவர்தங்கள்பிரானை மங்கையர்கோன், மருவார்*
ஊனமர்வேல்கலிகன்றி ஒண்தமிழ் ஒன்பதோடொன்றும்*
தானிவைகற்றுவல்லார்மேல் சாராதீவினைதானே. 10

அடிவரவு : வாட பேய் பண்டு வளை பருவம் எய்ய ஆவர் பொங்கி கருமுகில் தேனமர் ஒருகுறள்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

Koviloor Digital Library

பெரிய திருமொழி ஐந்தாம் பத்து எட்டாம் திருமொழி - ஏழையேதலன்

திருவரங்கம்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

**ஏழை ஏதலன் கீழ்மகனென்னாது
இரங்கி மற்றவற்கு இன்னருள் சுரந்து*
மாழைமான்மடநோக்கி உன்தோழி
உம்பி எம்பியென்றொழிந்திலை* உகந்து
தோழன் நீ எனக்கு இங்கொழியென்ற
சொற்கள்வந்து அடியேன் மனத்திருந்திட*
ஆழிவண்ண! நின்னடியிணையடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே. 1

வாதமாமகன் மர்க்கடம் விலங்கு
மற்றோர்சாதியென்றொழிந்திலை* உகந்து
காதலாதரம் கடலினும் பெருகச் செய்
தகவினுக்கு இல்லைகைம்மாறென்று*
கோதில்வாய்மையினாயொடும் உடனே
உண்பன்நானென்ற ஒண்பொருள்* எனக்கும்
ஆதல்வேண்டுமென்று அடியிணையடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே. 2

கடிகொள்பூம்பொழில் காமருபொய்கை
வைகுதாமரைவாங்கியவேழம்*
முடியும் வண்ணம் ஓர் முழுவலிமுதலை
பற்ற மற்றது நின்சரண்நினைப்ப*
கொடியவாய்விலங்கின்னுயிர் மலங்கக்
கொண்டசீற்றமொன்றுண்டுளதறிந்து* உன்
அடியனேனும்வந்து அடியிணையடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே. 3

Koviloor Digital Library

நஞ்சுசோர்வதோர் வெஞ்சினவரவம்
வெருவிவந்து நின்சரணெனச்சரணா*
நெஞ்சில் கொண்டு நின்னஞ்சிறைப்பறவைக்கு
அடைக்கலம்கொடுத்து அருள்செய்ததறிந்து*
வெஞ்சொலாளர்கள் நமன்தமர்கடியர்
கொடியசெய்வனவுள* அதற்கு அடியேன்
அஞ்சிவந்து நின்னடியிணையடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே 4

மாகம் மாநிலம் முழுதும் வந்திறைஞ்சும்
மலரடிகண்டமாமறையாளன்*
தோகைமாமயிலன்னவரின்பம்
துற்றிலாமையில் அத்த இங்கு ஒழிந்து*
போகம் நீ யெய்திப்பின்னும் நம்மிடைக்கே
போதுவாயென்ற பொன்னருள்* எனக்கும்
ஆகவேண்டுமென்று அடியிணையடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே 5

மன்னுநான்மறைமாமுனிபெற்ற
மைந்தனை மதியாத வெங்கூற்றன்
தன்னையஞ்சி* நின்சரணெனச்சரணாய்த்
தகவில் காலனையுகமுனிந்தொழியா*
பின்னைஎன்றும் நின்திருவடி பிரியாவண்ணம்
எண்ணிய பேரருள்* எனக்கும்
அன்னதாகுமென்று அடியிணையடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே 6

ஓதுவாய்மையும் உவனியப்பிறப்பும்
உனக்கு முன்தந்த அந்தணனொருவன்*
காதலென்மகன் புகலிடம்காணேன்
கண்டு நீ தருவாயெனக்கு என்று*
கோதில்வாய்மையினான் உனைவேண்டிய
குறைமுடித்து அவன் சிறுவனைக்கொடுத்தாய்*

Koviloor Digital Library

ஆதலால் வந்து உன்னடியிணையடைந்தேன்
அணிபொழில்திருவரங்கத்தம்மானே. 7

வேதவாய்மொழி அந்தணனொருவன்
எந்தை நின்சரண் என்னுடைமனைவி*
காதல்மக்களைப்பயத்தலும் காணாள்
கடியதோர் தெய்வம் கொண்டொளிக்குமென்றழைப்ப*
ஏதலார் முன்னே இன்னருள் அவற்குச்
செய்து உன்மக்கள் மற்றிவரென்று கொடுத்தாய்*
ஆதலால் வந்து உன்னடியிணையடைந்தேன்
அணிபொழில்! திருவரங்கத்தம்மானே. 8

**துளங்குநீண்முடியரசர்தம்குரிசில்
தொண்டைமன்னவன்திண்திறலொருவற்கு*
உளங்கொளன்பினோடு இன்னருள் சுரந்து
அங்கோடுநாழிகையேழுடனிருப்ப*
வளங்கொள்மந்திரம்மற்றவற்கு அருளிச்
செய்தவாறு அடியேனறிந்து* உலக
மளந்த பொன்னடியேயடைந்துய்ந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே 9

**மாடமாளிகைசூழ் திருமங்கை
மன்னன் ஒன்னலர்தங்களை வெல்லும்*
ஆடல்மாவலவன்கலிகன்றி
அணிபொழில் திருவரங்கத்தம்மானை*
நீடுதொல்புகழாழிவல்லானை
எந்தையை நெடுமாலை நினைந்த*
பாடல்பத்திவைபாடுமின் தொண்டீர்
பாட நும்மிடைப்பாவம் நில்லாவே. 10

அடிவரவு : ஏழை வாதம் கடி நஞ்சு மாகம் மன்னு ஒது வேதம் துளங்கு மாடம் கை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

Koviloor Digital Library

மாலைத்தோமாலைஸேவையில் இதைத் தொடர்ந்து

கோயில் திருவாய்மொழியிலிருந்து

ஒழிவில் காலம் எல்லாம் (3–3) பக்கம் எண் 88

உலகமுண்ட பெருவாயா (6–10) பக்கம் எண் 94

கங்குலும் பகலும் (7–2) பக்கம் எண் 96

ஆழியெழ (7–4) பக்கம் எண் 99

அநுஸந்திக்கப்படுகின்றன.

Koviloor Digital Library

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த

அமலனாதிபிரான்

தனியன்கள்

பெரிய நம்பிகள் அருளிச்செய்தது

ஆபாத சூடம் அநுபூய ஹரிம் சயாநம்
மத்யே கவேரதுஹிதுர் முதித அந்தராத்மா|
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோ நிச்சிகாய மந வை முநிவாஹநம் தம்.||

திருமலை நம்பிகள் அருளிச் செய்தது

காட்டவே கண்ட பாதகமலம் நல்லாடை உந்தி*
தேட்டரும் உதர பந்தம் திருமார்வு கண்டம் செவ்வாய்*
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனிபுகுந்து*
பாட்டினால் கண்டு வாழும் பாணர் தாள் பரவினோமே.

**அமலன் ஆதி பிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன்* விண்ணவர் கோன் விரையார் பொழில் வேங்கடவன்*
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிள் அரங்கத்தம்மான்* திருக்
கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே. 1

உவந்த உள்ளத்தனாய் உலகம் அளந்து அண்டமுற*
நிவந்த நீண்முடியன் அன்று நேர்ந்த நிசாசரரை*
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன் கடியார் பொழில் அரங்கத்தம்மான்* அரைச்
சிவந்த ஆடையின்மேல் சென்றதாம் என சிந்தனையே. 2

**மந்திபாய் வடவேங்கட மாமலை* வானவர்கள்
சந்தி செய்ய நின்றான் அரங்கத்து அரவின் அணையான்*
அந்திபோல் நிறத்தாடையும் அதன்மேல் அயனைப் படைத்தது, ஓர் எழில்*
உந்தி மேலதன்றோ அடியேன் உள்ளத்து இன்னுயிரே. 3

Koviloor Digital Library

சதுர மாமதிள் சூழ் இலங்கைக்கு இறைவன் தலை பத்து
உதிர ஓட்டி* ஓர் வெங்கணை உய்த்தவன் ஓத வண்ணன்*
மதுர மாவண்டு பாட மாமயிலாடு அரங்கத்தம்மான்* திருவயிற்று
உதரபந்தம் என் உள்ளத்துள் நின்று உலாகின்றதே. 4

பாரமாய பழவினை பற்று அறுத்து* என்னைத் தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததுஅன்றி என்னுள் புகுந்தான்*
கோர மாதவம் செய்தனன்கொல் அறியேன் அரங்கத்தம்மான்* திரு
ஆர மார்பதன்றோ அடியேனை ஆட்கொண்டதே. 5

துண்ட வெண் பிறையன் துயர் தீர்த்தவன்* அஞ்சிறைய
வண்டு வாழ் பொழில் சூழ் அரங்கநகர் மேய அப்பன்*
அண்டரண்ட பகிரண்டத்து ஒரு மாநிலம் எழு மால் வரை * முற்றும்
உண்ட கண்டம் கண்டீர் அடியேனை உய்யக்கொண்டதே. 6

கையினார் சுரிசங்கு அனல் ஆழியர்* நீள் வரை போல்
மெய்யனார் துளப விரையார் கமழ் நீண்முடி எம்
ஐயனார்* அணி அரங்கனார் அரவின் அணைமிசை மேய மாயனார்*
செய்ய வாய் ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே 7

பரியனாகி வந்த அவுணன் உடல் கீண்ட* அமரர்க்கு
அரிய ஆதிப்பிரான் அரங்கத்து அமலன் முகத்து*
கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரி ஓடி* நீண்ட அப்
பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே. 8

**ஆல மாமரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய்*
ஞாலம் ஏழும் உண்டான் அரங்கத்து அரவின் அணையான்*
கோல மாமணி ஆரமும் முத்துத்தாமமும், முடிவில்லது ஓர் எழில்*
நீலமேனி ஐயோ! நிறைகொண்டது என் நெஞ்சினையே. 9

Koviloor Digital Library

**கொண்டல் வண்ணணைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் * என் உள்ளம் கவர்ந்தானை*
அண்டர்கோன் அணி அரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள்* மற்றொன்றினைக் காணாவே. 10

அடிவரவு : அமலன், உவந்த, மந்தி, சதுரம், பாரம், துண்ட, கை, பரி, ஆலம், கொண்டல், கண்ணி

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

மதுரகவியாழ்வார் அருளிச்செய்த

கண்ணிநுண்சிறுத்தாம்பு

தனியன்கள்

நாதமுனிகள் அருளிச்செய்து

அவிதித விஷயாந்தர: சடாரே :
உபநிஷதாம் உபகாந மாத்ர பே ாக:|
அபி ச குணவசாத் ததேகசேஷீ
மதுரகவிர் ஹ்ருதயேமம ஆவிரஸ்து||

வேறு ஒன்றும் நான் அறியேன் வேதம் தமிழ் செய்த*
மாறன் சடகோபன் வண் குருகூர் ஏறு* எங்கள்
வாழ்வாம் என்று ஏத்தும் மதுரகவியார்* எம்மை
ஆள்வார் அவரே அரண்.

Koviloor Digital Library

**கண்ணி நுண் சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன்* என் அப்பனில்*
நண்ணித்தென் குருகூர் நம்பி என்றக்கால்*
அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே. 1

நாவினால் நவிற்று இன்பம் எய்தினேன்*
மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே*
தேவு மற்று அறியேன் குருகூர் நம்பி*
பாவின் இன்னிசை பாடித் திரிவனே. 2

திரிதந்தாகிலும் தேவபிரானுடைக்*
கரிய கோலத் திருவுருக் காண்பன் நான்*
பெரிய வண் குருகூர் நகர் நம்பிக்கு ஆள்
உரியனாய்* அடியேன் பெற்ற நன்மையே. 3

நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்*
புன்மையாகக் கருதுவர் ஆதலில்*
அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும்
தன்மையான்* சடகோபன் என் நம்பியே. 4

நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்*
நம்பினேன் மடவாரையும் முன்னெலாம்*
செம் பொன் மாடத் திருக்குருகூர் நம்பிக்கு
அன்பனாய்* அடியேன் சதிர்த்தேன் இன்றே. 5

இன்று தொட்டும் எழுமையும் எம்பிரான்*
நின்று தன் புகழ் ஏத்த அருளினான்*
குன்ற மாடத் திருக்குருகூர் நம்பி*
என்றும் என்னை இகழ்விலன் காண்மினே. 6

கண்டுகொண்டு என்னைக் காரிமாறப் பிரான்*
பண்டை வல்வினை பாற்றி அருளினான்*
எண் திசையும் அறிய இயம்புகேன்*
ஒண் தமிழ்ச் சடகோபன் அருளையே. 7

Koviloor Digital Library

அருள் கொண்டாடும் அடியவர் இன்புற*
அருளினான் அவ்வருமறையின் பொருள்*
அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்*
அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே. 8

மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள்*
நிற்கப் பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான்*
தக்க சீர்ச் சடகோபன் என் நம்பிக்கு * ஆள்
புக்க காதல் அடிமைப் பயன் அன்றே 9

**பயன் அன்றாகிலும் பாங்கு அல்லராகிலும்*
செயல் நன்றாக் திருத்திப் பணி கொள்வான்*
குயில் நின்று ஆர் பொழில்சூழ் குருகூர் நம்பீ!*
முயல்கின்றேன் உன்தன் மொய்கழற்கு அன்பையே 10

**அன்பன்தன்னை அடைந்தவர்கட்கு எல்லாம்
அன்பன்* தென் குருகூர் நகர் நம்பிக்கு*
அன்பனாய் மதுரகவி சொன்ன சொல்
நம்புவார் பதி* வைகுந்தம் காண்மினே. 11

அடிவரவு: கண்ணி நாவினால் திரி நன்மை நம்பினேன் இன்று கண்டு அருள் மிக்க பயன் அன்பன் வாடினேன்

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

ஸ்ரீ நம்மாழ்வார் - திருப்பதி

Koviloor Digital Library

Koviloor Digital Library

நம்மாழ்வார் அருளிச்செய்தவை

கோயில் திருவாய்மொழி

தனியன்கள்

பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோபவாங்மயம்|
ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிட வேதஸாகரம்||

திருவழுதி நாடென்றும் தென்குருகூரென்றும்*
மருவினிய வண்பொருநலென்றும்*அருமறைகள்
அந்தாதி செய்தானடியிணையே* எம்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து.

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்*
இனத்தாரையல்லாது இறைஞ்சேன்* தனத்தாலும்
ஏதுங் குறைவிலேன்* எந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடையபற்று.

ஏய்ந்த பெருங்கீர்த்தியிராமானுசமுனிதன்*
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்* ஆய்ந்தபெருஞ்
சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம்தரிக்கும்*
பேராதவுள்ளம் பெற.

வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்*
ஆன்ற தமிழ்மறைகளாயிரமும்* ஈன்ற
முதல்தாய் சடகோபன்* மொய்ம்பால் வளர்த்த
இதத்தாய் இராமானுசன்.

மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும்*
தக்க நெறியும் தடையாகித் தொக்கியலும்*
ஊழ்வினையும், வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்*
யாழினிசை வேதத்தியல்.

Koviloor Digital Library

திருவாய்மொழி முதல்பத்து முதல் திருவாய்மொழி

கலிவிருத்தம்

**உயர்வறவுயர்நலம் உடையவன்யவனவன்*
மயர்வறமதி நலம்அருளினன்யவனவன்**
அயர்வறுமமரர்கள் அதிபதி யவனவன்*
துயரறுசுடரடி தொழுதெழு என்மனனே! 1

மனனகமலமற மலர்மிசையெழுதரும்*
மனனுணர்வளவிலன் பொறியுணர்வவையிலன்*
இனனுணர் முழுநலம் எதிர்நிகழ்கழிவினும்*
இனனிலனெனனுயிர் மிகுநரையிலனே. 2

இலனதுவுடையனிது எனநினைவரியவன்*
நிலனிடைவிசும்பிடை உருவினனருவினன்*
புலனொடுபுலனலன் ஒழிவிலன்பரந்த*அந்
நலனுடையொருவனை நணுகினம் நாமே. 3

நாமவனிவனுவன் அவளிவளுவளெவள்*
தாமவரிவருவர் அதுவிதுவுதுவெது*
வீமவையிவையுவை அவை நலம் தீங்கவை*
ஆமவையாயவையாய்நின்ற அவரே. 4

அவரவர் தமதமது அறிவறிவகைவகை*
அவரவரிறையவர் எனவடியடைவர்கள்*
அவரவரிறையவர் குறைவிலரிறையவர்*
அவரவர்விதிவழி அடையநின்றனரே. 5

நின்றனரிருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்*
நின்றிலரிருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்*
என்றுமொரியல்வினர் என நினைவரியவர்*

Koviloor Digital Library

என்றுமொரியல்வொடு நின்றவெந்திடரே. 6
திடவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை*
படர்பொருள் முழுவதுமாய் அவையவைதொறும்*
உடல்மிசையுயிரெனக் கரந்தெங்கும்பரந்துளன்*
சுடர்மிகுசுருதியுள் இவையுண்டசுரனே. 7

சுரரறிவருநிலை விண் முதல்முழுவதும்*
வரன்முதலாயவை முழுதுண்டபரபரன்*
புரமொருமூன்றெரித்து அமரர்க்குமறிவியந்து*
அரனயனென உலகழித்தமைத்துளனே. 8

உளனெனிலுளன் அவனுருவம் இவ்வுருவுகள்*
உளனலனெனில் அவனருவம் இவ்வருவுகள்*
உளனெனஇலனென இவைகுணமுடைமையில்*
உளனிருதகைமையொடு ஒழிவிலன்பரந்தே. 9

பரந்ததண்பரவையுள் நீர்தொறும்பரந்துளன்*
பரந்தவண்டமிதென நிலவிசும்பொழிவற*
கரந்தசிலிடந்தொறும் இடந் திகழ்பொருள்தொறும்*
கரந்தெங்கும்பரந்துளன் இவையுண்டகரனே 10

** கரவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை*
வரனவில்திறல்வலி அளிபொறையாய் நின்ற*
பரனடிமேல்குருகூர்ச்சடகோபன்சொல்*
நிரனிறையாயிரத்து இவைபத்தும்வீடே 11

Koviloor Digital Library

திருவாய்மொழி முதற்பத்து இரண்டாம் திருவாய்மொழி

வஞ்சித்துறை

**வீடுமின்முற்றவும் வீடுசெய்து* உம்முயிர்
வீடுடையானிடை* வீடுசெய்ம்மினே. 1

மின்னின் நிலையில* மன்னுயிராக்கைகள்*
என்னுமிடத்து* இறை உன்னுமின் நீரே. 2

நீர் நுமதென்றிவை* வேர்முதல்மாய்த்து* இறை
சேர்மின்* உயிர்க்கு அதன் நேர்நிறையில்லே. 3

இல்லதும் உள்ளதும்* அல்லது அவனுரு*
எல்லையில் அந்நலம்* புல்குபற்றற்றே. 4

அற்றதுபற்றெனில்* உற்றதுவீடுயிர்*
செற்றதுமன்னுறில்* அற்றிறைபற்றே. 5

பற்றிலனீசனும்* முற்றவும் நின்றனன்*
பற்றிலையாய்* அவன் முற்றிலடங்கே. 6

அடங்கெழில் சம்பத்து* அடங்கக்கண்டு* ஈசன்
அடங்கெழிலஃதென்று* அடங்குகவுள்ளே. 7

உள்ளமுரைசெயல்* உள்ளவிம் மூன்றையும்*
உள்ளிக்கெடுத்து* இறை உள்ளிலொடுங்கே. 8

ஒடுங்க அவன்கண்* ஒடுங்கலும் எல்லாம்*
விடும், பின்னுமாக்கை* விடும்பொழுது எண்ணே. 9

**எண் பெருக்கந் நலத்து* ஒண் பொருள், ஈறில*
வண் புகழ்நாரணன்* திண் கழல்சேரே. 10

**சேர்த்தடத்* தென்குருகூர்ச்சடகோபன்சொல்*
சீர்த்தொடையாயிரத்து* ஓர்த்தவிப்பத்தே. 11

Koviloor Digital Library

ஆழ்வார் திருவடிகளே சரணம்

திருவாய்மொழி இரண்டாம்பத்து பத்தாம் திருவாய்மொழி

கலிவிருத்தம்

**கிளரொளியிளமை கெடுவதன் முன்னம்*
வளரொளிமாயோன் மருவியகோயில்*
வளரிளம்பொழில்சூழ் மாலிருஞ்சோலை*
தளர்விலராகில் சார்வதுசதிரே. 1

சதிரிளமடவார்தாழ்ச்சியைமதியாது*
அதிர்குரல்சங்கத்து அழகர்தம்கோயில்*
மதிதவழ்குடுமி மாலிருஞ்சோலை*
பதியதுஏத்தி எழுவதுபயனே. 2

பயனல்லசெய்து பயனில்லை நெஞ்சே*
புயல்மழைவண்ணர் புரிந்துறைகோயில்*
மயல்மிகுபொழில்சூழ் மாலிருஞ்சோலை*
அயல்மலையடைவது அதுகருமமே. 3

கரும வன்பாசம் கழித்துழன்றுய்யவே*
பெருமலையெடுத்தான் பீடுறைகோயில்*
வருமழைதவழும் மாலிருஞ்சோலை*
திருமலையதுவே அடைவது திறமே. 4

திறமுடைவலத்தால் தீவினை பெருக்காது*
அறமுயலாழிப் படையவன் கோயில்*
மறுவில் வண்சுனைசூழ் மாலிருஞ்சோலை*
புறமலைசாரப் போவதுகிறியே. 5

கிறியென நினைமின் கீழ்மைசெய்யாதே*
உறியமர்வெண்ணெய் உண்டவன்கோயில்*
மறியொடுபிணைசேர் மாலிருஞ்சோலை*

Koviloor Digital Library

நெறிபடவதுவே நினைவது நலமே. 6

நலமெனநினைமின் நரகழுந்தாதே*
நிலமுனமிடந்தான் நீடுறைகோயில்*
மலமறுமதிசேர் மாலிருஞ்சோலை*
வலமுறையெய்தி மருவுதல்வலமே. 7

வலம்செய்துவைகல் வலம்கழியாதே*
வலம்செய்யும் ஆயமாயவன்கோயில்*
வலம்செய்யும்வானோர் மாலிருஞ்சோலை*
வலம்செய்துநாளும் மருவுதல்வழக்கே. 8

வழக்கென நினைமின் வல்வினை மூழ்காது*
அழக்கொடியட்டான் அமர்பெருங்கோயில்*
மழக்களிற்றினம்சேர் மாலிருஞ்சோலை*
தொழக்கருதுவதே துணிவதுசூதே. 9

சூதென்றுகளவும் சூதும்செய்யாதே*
வேதமுன்விரித்தான் விரும்பியகோயில்*
மாதுறுமயில்சேர் மாலிருஞ்சோலை*
போதவிழ்மலையே புகுவதுபொருளே. 10

**பொருளென்று இவ்வுலகம் படைத்தவன்புகழ்மேல்*
மருளில்வண்குருகூர் வண்சடகோபன்*
தெருள்கொள்ளச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்து*
அருளுடையவன்தாள் அணைவிக்கும் முடித்தே. 11

Koviloor Digital Library

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி மூன்றாம் பத்து மூன்றாம் திருவாய்மொழி

கலிவிருத்தம்

**ஒழிவில்காலமெல்லாம் உடனாய்மன்னி*
வழுவிலா அடிமை செய்யவேண்டும்நாம்*
தெழிகுரலருவித் திருவேங்கடத்து*
எழில்கொள்சோதி எந்தை தந்தைதந்தைக்கே. 1

எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும்
முந்தை* வானவர் வானவர்கோனொடும்*
சிந்துபூமகிழும் திருவேங்கடத்து
அந்தமில்புகழ்க் காரெழிலண்ணலே. 2

அண்ணல்மாயன் அணிகொள்செந்தாமரைக்
கண்ணன்* செங்கனிவாய்க் கருமாணிக்கம்*
தெண்ணிறைச்சுனைநீர்த் திருவேங்கடத்து*
எண்ணில்தொல்புகழ் வானவரீசனே. 3

ஈசன்வானவர்க்கு என்பன், என்றால்* அது
தேசமோ திருவேங்கடத்தானுக்கு?
நீசனேன் நிறைவொன்றுமிலேன்* என்கண்
பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே. 4

சோதியாகி எல்லாவுலகும்தொழும்*
ஆதிமூர்த்தியென்றால் அளவாகுமோ?
வேதியர் முழுவேதத்தமுதத்தை*
தீதில்சீர்த் திருவேங்கடத்தானையே. 5

வேங்கடங்கள் மெய்ம்மேல்வினை முற்றவும்*
தாங்கள் தங்கட்கு நல்லனவேசெய்வார்
வேங்கடத்துறைவார்க்கு நமவென்ன
லாம்கடமை* அது, சுமந்தார்கட்கே. 6

Koviloor Digital Library

சுமந்துமாமலர் நீர் சுடர் தூபம்கொண்டு*
அமர்ந்துவானவர் வானவர்கோனொடும்*
நமன்றெழும் திருவேங்கடம் நங்கட்கு*
சமன்கொள்வீடுதரும் தடங்குன்றமே. 7

**குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன்*
அன்றுஞாலம் அளந்தபிரான்* பரன்
சென்றுசேர் திருவேங்கடமாமலை*
ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே. 8

ஓயும் மூப்புப் பிறப்பிறப்புப் பிணி*
வீயுமாறுசெய்வான் திருவேங்கடத்
தாயன்* நாள்மலராம் அடித்தாமரை*
வாயுள்ளும் மனத்துள்ளும் வைப்பார்கட்கே. 9

வைத்தநாள்வரை எல்லைகுறுகிச்சென்று*
எய்த்திளைப்பதன் முன்னம் அடைமினோ*
பைத்தபாம்பணையான் திருவேங்கடம்*
மொய்த்தசோலை மொய்பூந்தடம் தாழ்வரே 10

**தாள் பரப்பி மண் தாவிய ஈசனை*
நீள்பொழில்குருகூர்ச்சடகோபன்சொல்*
கேழிலாயிரத்து இப்பத்தும்வல்லவர்*
வாழ்வர்வாழ்வெய்தி ஞாலம்புகழவே. 11

ஆழ்வார் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

திருவாய்மொழி நான்காம் பத்து பத்தாம் திருவாய்மொழி

அறுசீராசிரிய விருத்தம்

**ஒன்றும்தேவும் உலகுமுயிரும் மற்றும் யாதுமில்லா
அன்று* நான்முகன் தன்னொடு தேவருலகோடுயிர்படைத்தான்*
குன்றம்போல் மணிமாட நீடுதிருக்குருகூரதனுள்*
நின்ற ஆதிப்பிரான் நிற்க மற்றைத்தெய்வம் நாடுதிரே 1

நாடி நீர்வணங்கும் தெய்வமும் உம்மையும் முன்படைத்தான்*
வீடில்சீர்ப்புகழாதிப்பிரானவன் மேவியுறைகோயில்*
மாடமாளிகைசூழ்ந்தழகாய திருக்குருகூரதனை*
பாடியாடிப்பரவிச்சென்மின்கள் பல்லுலகீர்! பரந்தே 2

பரந்ததெய்வமும் பல்லுலகும்படைத்து அன்றுடனே விழுங்கி*
கரந்துமிழ்ந்து கடந்திடந்தது கண்டும் தெளியகில்லீர்*
சிரங்களாலமரர்வணங்கும் திருக்குருகூரதனுள்*
பரன்திறமன்றிப் பல்லுலகீர்! தெய்வம்மற்றில்லை பேசுமினே. 3

பேசநின்ற சிவனுக்கும் பிரமன்தனக்கும் பிறர்க்கும்
நாயகனவனே* கபால நன்மோக்கத்துக் கண்டுகொண்மின்*
தேசமாமதிள்சூழ்ந்தழகாய திருக்குருகூரதனுள்*
ஈசன்பால் ஓரவம் பறைதல் என்னாவது இலிங்கியர்க்கே. 4

**இலிங்கத்திட்டபுராணத்தீரும் சமணரும் சாக்கியரும்*
வலிந்துவாதுசெய்வீர்களும் மற்றும் நும்தெய்வமுமாகி நின்றான்*
மலிந்து செந்நெல் கவரிவீசும் திருக்குருகூரதனுள்*
பொலிந்துநின்றபிரான் கண்டீர்! ஒன்றும்பொய்யில்லை போற்றுமினே. 5

போற்றி மற்றோர் தெய்வம் பேணப்புறத்திட்டு* உம்மை இன்னே
தேற்றிவைத்தது எல்லீரும் வீடுபெற்றால் உலகில்லையென்றே*
சேற்றில்செந்நெல்கமலமோங்கு திருக்குருகூரதனுள்*

Koviloor Digital Library

ஆற்றவல்லவன் மாயம்கண்டீர் அதறிந்தறிந்தோடுமினே. 6

ஒடியோடிப்பலபிறப்பும்பிறந்து மற்றோர்தெய்வம்
பாடியாடிப்பணிந்து* பல்படிகால் வழியேறிக்கண்டீர்*
கூடிவானவரேத்தநின்ற திருக்குருகூரதனுள்*
ஆடுபுட்கொடி ஆதிமூர்த்திக்கு அடிமைபுகுவதுவே. 7

புக்கடிமையினால் தன்னைக்கண்ட மார்க்கண்டேயனவனை*
நக்கபிரானும் அன்றுய்யக்கொண்டது நாராயணனருளே*
கொக்கலர் தடந்தாழைவேலித் திருக்குருகூரதனுள்*
மிக்க ஆதிப்பிரான்நிற்க மற்றைத்தெய்வம் விளம்புதிரே. 8

விளம்பும் ஆறுசமயமும் அவையாகியும் மற்றும் தன்பால்*
அளந்துகாண்டற்கரியனாகிய ஆதிப்பிரானமரும்*
வளங்கொள் தண்பணை சூழ்ந்தழகாய திருக்குருகூரதனை*
உளங்கொள்ஞானத்துவைம்மின் உம்மையுய்யக்கொண்டுபோகுறிலே. 9

உறுவதாவதெத்தேவும் எவ்வுலகங்களும் மற்றும் தன்பால்*
மறுவில் மூர்த்தியோடொத்து இத்தனையும் நின்றவண்ணம் நிற்கவே*
செறுவில்செந்நெல்கரும்பொடோங்குதிருக்குருகூரதனுள்*
குறியமாணுருவாகிய நீள்குடக்கூத்தனுக்காட்செய்வதே. 10

**ஆட்செய்தாழிப்பிரானைச்சேர்ந்தவன் வண்குருகூர்நகரான்*
நாட்கமழ்மகிழ்மாலைமார்பினன் மாறன்சடகோபன்*
வேட்கையால்சொன்ன பாடல் ஆயிரத்துளிப்பத்தும்வல்லார்*
மீட்சியின்றிவைகுந்தமாநகர் மற்றதுகையதுவே. 11

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

Koviloor Digital Library

திருவாய்மொழி ஐந்தாம் பத்து எட்டாம் திருவாய்மொழி

அறுசீராசிரிய விருத்தம்

**ஆராவமுதே! அடியேனுடலம் நின்பாலன்பாயே*
நீராயலைந்துகரைய உருக்குகின்ற நெடுமாலே!
சீரார்செந்நெல்கவரிவீசும் செழுநீர்த்திருக்குடந்தை*
ஏரார்கோலம்திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே!. 1

எம்மானே! என்வெள்ளை மூர்த்தி! என்னையாள்வானே*
எம்மாவுருவும்வேண்டுமாற்றால் ஆவாய் எழிலேறே!*
செம்மாகமலம் செழுநீர்மிசைக்கண்மலரும் திருக்குடந்தை*
அம்மாமலர்க் கண்வளர்கின்றானே! என்நான் செய்கேனே?. 2

என் நான் செய்கேன் யாரேகளைகண்? என்னையென்செய்கின்றாய்?
உன்னால் அல்லால்யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்*
கன்னார்மதிள்சூழ்குடந்தைக்கிடந்தாய்! அடியேனருவாணாள்*
சென்னாள் எந்நாள் அந்நாள் உனதாள் பிடித்தேசெலக்காணே. 3

செலக்காண்கிற்பார்காணுமளவும் செல்லும்கீர்த்தியாய்*
உலப்பிலானே! எல்லாவுலகுமுடைய ஒருமூர்த்தி*
நலத்தால்மிக்கார் குடந்தைக்கிடந்தாய்! உன்னைக்காண்பான் நான்
அலப்பாய்* ஆகாசத்தைநோக்கி அழுவன்தொழுவனே. 4

அழுவன்தொழுவன் ஆடிக்காண்பன் பாடியலற்றுவன்*
தழுவல்வினையால் பக்கம் நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன்*
செழுவொண்பழனக் குடந்தைக்கிடந்தாய் செந்தாமரைக்கண்ணா!*
தொழுவனேனை உனதாள் சேரும்வகையே சூழ்கண்டாய். 5

சூழ்கண்டாய் என்தொல்லைவினையையறுத்து உன்னடிசேரும்
ஊழ்கண்டிருந்தே* தூராக்குழிதூர்த்து எனைநாள் அகன்றிருப்பன்?
வாழ்தொல்புகழார்குடந்தைக்கிடந்தாய்! வானோர்கோமானே!*
யாழினிசையே! அமுதே அறிவின் பயனே! அரியேறே!. 6

Koviloor Digital Library

அரியேறே! என் அம்பொற்சுடரே! செங்கண்கருமுகிலே!
எரியே! பவளக்குன்றே! நால்தோளெந்தாய்! உனதருளே*
பிரியா அடிமையென்னைக்கொண்டாய் குடந்தைத்திருமாலே!*
தரியேன் இனி உன்சரணம் தந்து என் சன்மம்களையாயே. 7

களைவாய்துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்*
வளைவாய்நேமிப்படையாய் குடந்தைக்கிடந்தமாமாயா
தளராவுடலமெனதாவி சரிந்துபோம்போது*
இளையாது உனதாளொருங்கப்பிடித்துப்போதஇசைநீயே. 8

இசைவித்துஎன்னை உன்தாளிணைக்கீழ் இருத்துமம்மானே!*
அசைவிலமரர் தலைவர்தலைவா ஆதிப்பெருமூர்த்தி!*
திசைவில்வீசும் செழுமாமணிகள்சேரும் திருக்குடந்தை*
அசைவிலுலகம் பரவக்கிடந்தாய்! காணவாராயே. 9

**வாரா அருவாய்வருமென்மாயா மாயாமூர்த்தியாய்*
ஆராவமுதாய் அடியேனாவி அகமே தித்திப்பாய்*
தீராவினைகள் தீர என்னையாண்டாய் திருக்குடந்தை
ஊரா!* உனக்காட்பட்டும் அடியேனின்னம் உழல்வேனோ. 10

** உழலையென்பின்பேய்ச்சி முலையூடு அவளையுயிருண்டான்*
கழல்களவையேசரணாகக்கொண்டகுருகூர்ச்சடகோபன்*
குழலின்மலியச்சொன்ன ஒராயிரத்துளிப்பத்தும்*
மழலைதீரவல்லார் காமர் மானேய்நோக்கியர்க்கே 11

ஆழ்வார் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

திருவாய்மொழி ஆறாம் பத்து பத்தாம் திருவாய்மொழி
அறுசீராசிரிய விருத்தம்

**உலகமுண்ட பெருவாயா! உலப்பில்கீர்த்தியம்மானே!*
நிலவும்சுடர் சூழொளிமூர்த்தி! நெடியாய் அடியேனாருயிரே!*
திலதமுலகுக்காய் நின்றதிருவேங்கடத்தெம்பெருமானே!*
குலதொல்லடியேன் உனபாதம் கூடுமாறு கூறாயே. 1

கூறாய் நீராய் நிலனாகிக் கொடுவல்லசுரர் குலமெல்லாம்*
சீறாவெறியும் திருநேமிவலவா! தெய்வக்கோமானே!*
சேறார்சுனைத்தாமரை செந்தீமலரும் திருவேங்கடத்தானே!*
ஆறாவன்பிலடியேன் உன்னடிசேர்வண்ணம் அருளாயே. 2

வண்ணமருள்கொளணிமேகவண்ணா! மாயவம்மானே!
எண்ணம் புகுந்து தித்திக்குமமுதே! இமையோரதிபதியே!
தெண்ணலருவிமணிபொன் முத்தலைக்கும் திருவேங்கடத்தானே!*
அண்ணலே! உன்னடிசேர அடியேற்கு ஆவாவென்னாயே. 3

ஆவாவென்னாது உலகத்தையலைக்கும் அசுரர்வாணாள்மேல்*
தீவாய்வாளிமழை பொழிந்தசிலையா! திருமாமகள் கேள்வா!
தேவா* சுரர்கள் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே!*
பூவார்கழல்கள் அருவினையேன் பொருந்துமாறு புணராயே. 4

புணராநின்றமரமேழ் அன்றெய்த ஒருவில்வலவாவோ!
புணரேய்நின்றமரமிரண்டின் நடுவேபோன முதல்வாவோ!
திணரார்மேகமெனக்களிறு சேரும் திருவேங்கடத்தானே!*
திணரார்சார்ங்கத்துனபாதம் சேர்வதடியேன் எந்நாளே. 5

எந்நாளே நாம்மண்ணளந்த இணைத்தாமரைகள் காண்பதற்கென்று*
எந்நாளும்நின்று இமையோர்களேத்தி இறைஞ்சிஇனமினாமாய்*
மெய்ந்நாமனத்தால்வழிபாடு செய்யும் திருவேங்கடத்தானே!*

Koviloor Digital Library

மெய்ந்நானெய்தி எந்நாள் உன்னடிக்கண் அடியேன்மேவுவதே. 6

அடியேன்மேவியமர்கின்றவமுதே! இமையோரதிபதியே!*
கொடியா அடுபுள்ளுடையானே! கோலக்கனிவாய்ப்பெருமானே!*
செடியார்வினைகள் தீர்மருந்தே! திருவேங்கடத்தெம்பெருமானே!*
நொடியார்பொழுதுமுனபாதம் காணநோலாதாற்றேனே. 7

நோலாதாற்றேன் உனபாதம் காணவென்று நுண்ணுணர்வின்*
நீலார்கண்டத்தம்மானும் நிறைநான்முகனும் இந்திரனும்*
சேலேய்கண்ணார்பலர் சூழவிரும்பும் திருவேங்கடத்தானே!*
மாலாய் மயக்கி அடியேன்பால் வந்தாய்போலே வாராயே. 8

வந்தாய்போலே வாராதாய்! வாராதாய்போல் வருவானே!*
செந்தாமரைக்கண் செங்கனிவாய் நால்தோளமுதே! எனுதுயிரே!*
சிந்தாமணிகள் பகர் அலைப்பகல்செய் திருவேங்கடத்தானே!*
அந்தோ! அடியேன் உனபாதம் அகலகில்லேன்இறையுமே. 9

**அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா!*
நிகரில்புகழாய்! உலக மூன்றுடையாய்! என்னையாள்வானே!*
நிகரிலமரர்முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே!*
புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே. 10

அடிக்கீழமர்ந்துபுகுந்து அடியீர்! வாழ்மின்னென்றென்றருள்கொடுக்கும்
படிக்கேழில்லாப்பெருமானைப்பழனக்குருகூர்ச்சடகோபன்*
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத் திருவேங்கடத்துக்கு இவைபத்தும்*
பிடித்தாா்பிடித்தாா் வீற்றிருந்து பெரியவானுள் நிலாவுவரே. 11

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. No. 30786

Koviloor Digital Library

ஆழ்வார் திருவடிகளே சரணம்

திருவாய்மொழி ஏழாம் பத்து இரண்டாம் திருவாய்மொழி
எழுசீராசிரிய விருத்தம்

**கங்குலும்பகலும்கண்துயிலறியாள்
கண்ணநீர்கைகளாலிறைக்கும்*
சங்குசக்கரங்களென்றுகைகூப்பும்
தாமரைக்கண்ணென்றேதளரும்*
எங்ஙனேதரிக்கேன் உன்னைவிட்டென்னும்
இருநிலம்கைதுழாவிருக்கும்*
செங்கயல்பாய்நீர்த்திருவரங்கத்தாய்!*
இவள்திறத்து என்செய்கின்றாயே?. 1

என்செய்கின்றாய் என் தாமரைக்கண்ணா!
என்னும் கண்ணீர்மல்கவிருக்கும்*
என்செய்கேன் எறிநீர்த் திருவரங்கத்தாய்!
என்னும் வெவ்வுயிர்த்துயிர்த்துருகும்*
முன்செய்த வினையே முகப்படாயென்னும்
முகில்வண்ணா தகுவதோவென்னும்*
முன்செய்திவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாய்!*
என்கொலோ முடிகின்றது இவட்கே? 2

வட்கிலளிறையும் மணிவண்ணாவென்னும்
வானமேநோக்கும் மையாக்கும்*
உட்குடையசுரருயிரெல்லாமுண்ட
ஒருவனேயென்னுமுள்ளுருகும்*
கட்கிலீ! உன்னைக்காணுமாறருளாய்
காகுத்தா! கண்ணனே என்னும்*
திட்கொடிமதிள்சூழ்திருவரங்கத்தாய்
இவள்திறத்து என்செய்திட்டாயே? 3

இட்டகாலிட்டகையளாயிருக்கும்
எழுந்துலாய் மயங்கும் கைகூப்பும்*

Koviloor Digital Library

கட்டமேகாதலென்று மூர்ச்சிக்கும்
கடல்வண்ணா! கடியைகாணென்னும்*
வட்டவாய்நேமிவலங்கையா! என்னும்
வந்திடாயென்றென்றேமயங்கும்*
சிட்டனே! செழுநீர்த்திருவரங்கத்தாய்
இவள்திறத்து என்சிந்தித்தாயே. 4

சிந்திக்கும் திசைக்கும்தேறும் கைகூப்பும்
திருவரங்கத்துள்ளாயென்னும்
வந்திக்கும் ஆங்கேமழைக்கண் நீர்மல்க
வந்திடாயென்றென்றேமயங்கும்*
அந்திப்போதவுணனுடலிடந்தானே
அலைகடல்கடைந்தவாரமுதே
சந்தித்து உன்சரணம்சார்வதேவலித்த
தையலை மையல்செய்தானே!. 5

மையல்செய்து என்னை மனம் கவர்ந்தானே!
என்னும் மாமாயனே! என்னும்*
செய்யவாய்மணியேயென்னும் தண்புனல்சூழ்
திருவரங்கத்துள்ளாயென்னும்*
வெய்யவாள் தண்டுசங்குசக்கரம்
வில்லேந்தும் விண்ணோர்முதலென்னும்*
பைகொள்பாம்பணையாய்! இவள்திறத்தருளாய்
பாவியேன்செயற்பாலதுவே. 6

பாலதுன்பங்களின்பங்கள்படைத்தாய்!
பற்றிலார்பற்றநின்றானே!*
காலசக்கரத்தாய்! கடலிடங்கொண்ட
கடல்வண்ணா! கண்ணனேயென்னும்*
சேல்கொள்தண்புனல்சூழ்திருவரங்கத்தா
யென்னும் என்தீர்த்தனேயென்னும்
கோலமாமழைக்கண் பனிமல்கஇருக்கும்

Koviloor Digital Library

என்னுடைக்கோமளக்கொழுந்தே. 7

கொழுந்துவானவர்கட்கென்னும் குன்றேந்திக்
கோநிரைகாத்தவனென்னும்
அழும் தொழும் ஆவியனலவெவ்வுயிர்க்கும்
அஞ்சனவண்ணனேயென்னும்*
எழுந்துமேல்நோக்கி இமைப்பிலளிருக்கும்
எங்ஙனே நோக்குகேனென்னும்
செழுந்தடம்புனல்சூழ்திருவரங்கத்தாய்
என்செய்கேன் என்திருமகட்கே ? 8

**என்திருமகள்சேர்மார்வனேயென்னும்
என்னுடையாவியேயென்னும்*
நின்திருவெயிற்றால் இடந்துநீகொண்ட
நிலமகள்கேள்வனேயென்னும்*
அன்றுருவேழும்தழுவி நீ கொண்ட
ஆய்மகளன்பனேயென்னும்*
தென்திருவரங்கம்கோயில்கொண்டானே!
தெளிகிலேன் முடிவிவள்தனக்கே. 9

முடிவிவள்தனக்கொன்றறிகிலேனென்னும்
மூவுலகாளியேயென்னும்*
கடிகமழ்கொன்றைச்சடையனேயென்னும்
நான்முகக்கடவுளேயென்னும்*
வடிவுடைவானோர் தலைவனேயென்னும்
வண்திருவரங்கனேயென்னும்
அடியடையாதாள்போல் இவள்அணுகி
அடைந்தனள்முகில்வண்ணனடியே. 10

**முகில்வண்ணனடியையடைந்தருள்சூடி
உயந்தவன் மொய்புனல்பொருநல்*
துகில்வண்ணத்தூநீர்ச்சேர்ப்பன் வண்பொழில்சூழ்

Koviloor Digital Library

வண்குருகூர்ச்சடகோபன்*
முகில்வண்ணனடிமேல் சொன்ன சொல்மாலை
ஆயிரத்திப்பத்தும் வல்லார்*
முகில்வண்ணவானத்து இமையவர்சூழ
இருப்பர் பேரின்பவெள்ளத்தே. 11

ஆழ்வார் திருவடிகளே சரணம்

திருவாய்மொழி ஏழாம் பத்து நான்காம் திருவாய்மொழி*
கலிவிருத்தம்

**ஆழியெழச் சங்கும் வில்லுமெழ* திசை
வாழியெழத் தண்டும்வாளுமெழ* அண்டம்
மோழையெழ முடிபாதமெழ* அப்பன்
ஊழியெழ வுலகங்கொண்டவாறே 1

ஆறுமலைக்கு எதிர்ந்தோடுமொலி* அர
வூறுசுலாய் மலைதேய்க்குமொலி* கடல்
மாறுசுழன்று அழைக்கின்றவொலி* அப்பன்
சாறுபட அமுதங்கொண்ட நான்றே 2

நான்றில ஏழ்மண்ணுந்தானத்தவே* பின்னும்
நான்றில் ஏழ்மலைதானத்தவே* பின்னும்
நான்றில ஏழ்கடல் தானத்தவே* அப்பன்
ஊன்றியிடந்து எயிற்றில்கொண்டநாளே 3

நாளுமெழ நிலநீருமெழ* விண்ணும்
கோளுமெழ எரிகாலுமெழ* மலை
தாளுமெழச்சுடர்தானுமெழ* அப்பன்
ஊளியெழ வுலகமுண்டவூணே 4

---

* இத்திருவாய்மொழி நித்யநுஸந்தானம்; கோயில் திருவாய்மொழியல்ல.

Koviloor Digital Library

ஊனுடைமல்லர் ததர்ந்தவொலி* மன்னர்
ஆனுடைச்சேனை நடுங்குமொலி* விண்ணுள்
ஏனுடைத்தேவர் வெளிப்பட்டவொலி* அப்பன்
காணுடைப்பாரதம் கையறைபோழ்தே 5

போழ்துமெலிந்த புன்செக்கரில்* வான்திசை
சூழுமெழுந்துதிரப்புனலா* மலை
கீழ்துபிளந்த சிங்கமொத்ததால்* அப்பன்
ஆழ்துயர்செய்து அசுரரைக்கொல்லுமாறே 6

மாறுநிரைத்திரைக்குஞ்சரங்கள்* இன
நூறுபிணம் மலைபோல்புரள* கடல்
ஆறுமடுத்து உதிரப்புனலா* அப்பன்
நீறுபட இலங்கைசெற்ற நேரே. 7

நேர்சரிந்தான் கொடிக்கோழிகொண்டான்* பின்னும்
நேர்சரிந்தான் எரியுமனலோன்* பின்னும்
நேர்சரிந்தான் முக்கண் மூர்த்திகண்டீர்* அப்பன்
நேர்சரிவாணன் திண்டோள்கொண்டவன்றே. 8

அன்றுமண் நீரெரிகால் விண்மலை முதல்*
அன்று சுடர்இரண்டு பிறவும்* பின்னும்
அன்று மழையுயிர் தேவும்மற்றும்* அப்பன்
அன்று முதல் உலகஞ்செய்ததுமே. 9

மேய்நிரைகீழ்புக மாபுரள* சுனை
வாய்நிறை நீர் பிளிறிச் சொரிய* இன
ஆநிரைபாடி அங்கேயொடுங்க* அப்பன்
தீமழைகாத்துக் குன்றமெடுத்தானே. 10

**குன்றமெடுத்தபிரான் அடியாரொடும்
ஒன்றிநின்ற சடகோபனுரை செயல்*
நன்றிபுனைந்த ஓராயிரத்துள்இவை*
வென்றிதரும்பத்தும் மேவிக்கற்பார்க்கே 11

ஆழ்வார் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

திருவாய்மொழி எட்டாம் பத்து பத்தாம் திருவாய்மொழி
அறுசீராசிரியவிருத்தம்

**நெடுமாற்கடிமைசெய்வேன்போல் அவனைக்கருத வஞ்சித்து*
தடுமாற்று அற்றதீக்கதிகள் முற்றும் தவிர்ந்த சதிர்நினைந்தால்*
கொடுமாவினையேன் அவனடியாரடியே கூடுமிதுவல்லால்*
விடுமாறென்பதென் அந்தோ வியன்மூவுலகுபெறினுமே. 1

வியன்மூவுலகு பெறினும் போய்த் தானே தானேயானாலும்*
புயல்மேகம் போல் திருமேனியம்மான் புனைபூங்கழலடிக்கீழ்
சயமே அடிமைதலைநின்றார் திருத்தாள்வணங்கி* இம்மையே
பயனே இன்பம் யான்பெற்றது உறுமோ பாவியேனுக்கே. 2

உறுமோபாவியேனுக்கு இவ்வுலகமூன்றும் உடன்நிறைய*
சிறுமாமேனி நிமிர்த்த என்செந்தாமரைக்கண் திருக்குறளன்*
நறுமாவிரைநாள்மலரடிக்கீழ்ப் புகுதலன்றி அவனடியார்*
சிறுமாமனிசராய் என்னையாண்டார் இங்கேதிரியவே. 3

இங்கேதிரிந்தேற்கிழுக்குற்றென்? இருமாநிலம் முன்னுண்டுமிழ்ந்த*
செங்கோலத்தபவளவாய்ச் செந்தாமரைக்கணென்னம்மான்*
பொங்கேழ்புகழ்கள் வாயவாய்ப் புலன்கொள்வடிவு என்மனத்ததாய்
அங்கேய்மலர்கள்கையவாய் வழிபட்டோட அருளிலே. 4

வழிபட்டோட அருள்பெற்று மாயன்கோலமலரடிக்கீழ்*
சுழிபட்டோடும் சுடர்ச்சோதிவெள்ளத்து இன்புற்றிருந்தாலும்*
இழிபட்டோடும் உடலினிற்பிறந்து தன்சீர்யான்கற்று*
மொழிபட்டோடும் கவியமுதம் நுகர்ச்சி உறுமோ முழுதுமே. 5

நுகர்ச்சியுறுமோ? மூவுலகின்விடுபேறு, தன்கேழில்*
புகர்ச்செம்முகத்தகளிறட்ட பொன்னாழிக்கையென்னம்மான்*
நிகர்ச்செம்பங்கியெரிவிழிகள் நீண்டவசுரருயிரெல்லாம்*
தகர்த்துண்டுழலும் புட்பாகன் பெரியதனிமாப்புகழே. 6

Koviloor Digital Library

தனிமாப்புகழே எஞ்ஞான்றும் நிற்கும்படியாய்த்தான் தோன்றி*
முனிமாப்பிரமமுதல்வித்தாய் உலகமூன்றும் முளைப்பித்த*
தனிமாத்தெய்வத் தளிரடிக்கீழ்ப் புகுதலன்றி, அவனடியார்*
நனிமாக்கலவியின்பமே நாளும் வாய்க்கநங்கட்கே. 7

நாளும் வாய்க்க நங்கட்கு நளிர்நீர்க்கடலைப்படைத்து* தன்
தாளும் தோளும் முடிகளும் சமனிலாதபல பரப்பி*
நீளும்படர்பூங்கற்பகக்காவும் நிறைபல்நாயிற்றின்*
கோளுமுடைய மணிமலைபோல் கிடந்தான் தமர்கள்கூட்டமே. 8

தமர்கள் கூட்டவல்வினையை நாசம்செய்யும்சதிர்மூர்த்தி*
அமர்கொளாழி சங்குவாள் வில்தண்டாதிபல்படையன்*
குமரன் கோலவைங்கணைவேள்தாதை கோதிலடியார்தம்*
தமர்கள்தமர்கள்தமர்களாம் சதிரேவாய்க்க தமியேற்கே. 9

வாய்க்கதமியேற்கு ஊழிதோறூழியூழி* மாகாயாம்
பூக்கொள்மேனிநான்குதோள் பொன்னாழிக்கைஎன்னம்மான்*
நீக்கமில்லாவடியார்தம் அடியாரடியாரடியார்எம்
கோக்கள்* அவர்க்கேகுடிகளாய்ச்செல்லும் நல்ல கோட்பாடே. 10

**நல்லகோட்பாட்டுலகங்கள் மூன்றினுள்ளும் தான்நிறைந்த*
அல்லிக்கமலக்கண்ணனை அந்தண்குருகூர்ச்சடகோபன்*
சொல்லப்பட்ட ஆயிரத்துள் இவையும் பத்தும் வல்லார்கள்*
நல்லபதத்தால் மனைவாழ்வர் கொண்டபெண்டிர் மக்களே. 11

ஆழ்வார் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

திருவாய்மொழி ஒன்பதாம் பத்து பத்தாம் திருவாய்மொழி
கலிவிருத்தம்

**மாலைநண்ணித் தொழுதெழுமினோ வினைகெட*
காலைமாலை கமலமலரிட்டு நீர்*
வேலைமோதும்மதிள்சூழ் திருக்கண்ணபுரத்து*
ஆலின்மேலாலமர்ந்தான் அடியிணைகளே. 1

கள்ளவிழும் மலரிட்டு நீரிறைஞ்சுமின்*
நள்ளிசேரும்வயல்சூழ் கிடங்கின்புடை*
வெள்ளியேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
உள்ளி* நாளும் தொழுதெழுமினோ தொண்டரே. 2

தொண்டர்! நுந்தம் துயர்போக நீரேகமாய்*
விண்டுவாடாமலரிட்டு நீர்இறைஞ்சுமின்*
வண்டுபாடும்பொழில்சூழ் திருக்கண்ணபுரத்து
அண்டவாணன்* அமரர்பெருமானையே. 3

மானைநோக்கி மடப்பின்னைதன் கேள்வனை*
தேனைவாடாமலரிட்டு நீரிறைஞ்சுமின்*
வானையுந்தும் மதிள்சூழ் திருக்கண்ணபுரம்*
தான்நயந்த பெருமான் சரணாகுமே. 4

சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்*
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்*
அரணமைந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரத்
தரணியாளன்* தனதன்பர்க்கன்பாகுமே. 5

அன்பனாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்*
செம்பொனாகத்து அவுணனுடல்கீண்டவன்*
நன்பொனேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரத்து
அன்பன்* நாளும் தனமெய்யர்க்குமெய்யனே. 6

Koviloor Digital Library

மெய்யனாகும் விரும்பித்தொழுவார்க்கெல்லாம்*
பொய்யனாகும் புறமே தொழுவார்க்கெல்லாம்*
செய்யில் வாளையுகளும் திருக்கண்ணபுரத்து
ஐயன்* ஆகத்தணைப்பார்கட்கணியனே. 7

அணியனாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்*
பிணியும் சாரா பிறவிகெடுத்தாளும்*
மணிபொனேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
பணிமின்* நாளும் பரமேட்டிதன் பாதமே. 8

பாதம் நாளும்பணியத் தணியும்பிணி*
ஏதம்சாரா எனக்கேல் இனியென்குறை?
வேதநாவர்விரும்பும் திருக்கண்ணபுரத்து
ஆதியானை* அடைந்தார்க்கு அல்லலில்லையே. 9

இல்லையல்லல் எனக்கேல் இனியென்குறை*
அல்லிமாதரமரும் திருமார்பினன்*
கல்லிலேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
சொல்ல* நாளும் துயர்பாடுசாராவே. 10

**பாடுசாராவினை பற்றறவேண்டுவீர்*
மாடநீடுகுருகூர்ச்சடகோபன்* சொல்
பாடலானதமிழ் ஆயிரத்துளிப்பதும்
பாடியாடி* பணிமின் அவன் தாள்களே. 11

ஆழ்வார் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

திருவாய்மொழி பத்தாம் பத்து ஒன்பதாம் திருவாய்மொழி
கலிவிருத்தம்

**சூழ்விசும்பணிமுகில் தூரியம் முழக்கின*
ஆழ்கடலலைதிரை கையெடுத்தாடின*
ஏழ்பொழிலும் வளமேந்திய என்னப்பன்*
வாழ்புகழ் நாரணன்தமரைக்கண்டுகந்தே. 1

நாரணன்தமரைக்கண்டுகந்து நன்னீர் முகில்*
பூரணபொற்குடம் பூரித்தது உயர் விண்ணில்*
நீரணி கடல்கள் நின்றார்த்தன* நெடுவரைத்
தோரணம் நிரைத்து எங்கும் தொழுதனருலகே. 2

தொழுதனர் உலகர்கள் தூபநல்மலர் மழை
பொழிவனர்* பூமியன்றளந்தவன் தமர்முன்னே*
எழுமினென்று இருமருங்கு இசைத்தனர் முனிவர்கள்*
வழியிது வைகுந்தற்கு என்று வந்தெதிரே. 3

எதிரெதிரிமையவர் இருப்பிடம் வகுத்தனர்*
கதிரவரவரவர் கைந்நிரைகாட்டினர்*
அதிர்குரல்முரசங்கள் அலைகடல் முழக்கொத்த*
மதுவிரிதுழாய்முடி மாதவன்தமர்க்கே 4

மாதவன்தமரென்று வாசலில்வானவர்*
போதுமின் எமதிடம் புகுதுகவென்றலும்*
கீதங்கள்பாடினர் கின்னரர் கெருடர்கள்
வேதநல்வாயவர் வேள்வியுள் மடுத்தே 5

வேள்வியுள் மடுத்தலும் விரைகமழ்நறும்புகை*
காளங்கள்வலம்புரி கலந்து எங்குமிசைத்தனர்*
ஆண்மின்கள் வானகம் ஆழியான்தமரென்று*
வாளொண்கண்மடந்தையர் வாழ்த்தினர்மகிழ்ந்தே. 6

Koviloor Digital Library

மடந்தையர்வாழ்த்தலும் மருதரும்வசுக்களும்*
தொடர்ந்தெங்கும் தோத்திரஞ்சொல்லினர்* தொடுகடல்
கிடந்த எங்கேசவன் கிளரொளிமணிமுடி*
குடந்தை எங்கோவலன் குடியடியார்க்கே. 7

குடியடியாரிவர் கோவிந்தன்தனக்கென்று
முடியுடைவானவர் முறைமுறை எதிர்கொள்ள*
கொடியணிநெடுமதிள் கோபுரம் குறுகினர்*
வடிவுடைமாதவன் வைகுந்தம்புகவே. 8

வைகுந்தம்புகுதலும் வாசலில் வானவர்*
வைகுந்தன்தமர் எமர் எமதிடம்புகுதென்று*
வைகுந்தத்தமரரும் முனிவரும்வியந்தனர்*
வைகுந்தம் புகுவது மண்ணவர்விதியே. 9

விதிவகைபுகுந்தனரென்றுநல்வேதியர்*
பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்*
நிதியும் நற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும்*
மதிமுகமடந்தையர் ஏந்தினர் வந்தே. 10

**வந்து அவர்எதிர்கொள்ள மாமணிமண்டபத்து*
அந்தமில்பேரின்பத்து அடியரோடிருந்தமை*
கொந்தலர்பொழில் குருகூர்ச்சடகோபன்* சொல்
சந்தங்களாயிரத்து இவைவல்லார் முனிவரே. 11

ஆழ்வார் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

திருவாய்மொழி பத்தாம் பத்து பத்தாம் திருவாய்மொழி

அறுசீராசிரிய விருத்தம்

** முனியே! நான்முகனே! முக்கண்ணப்பா! என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண்கருமாணிக்கமேஎன்கள்வா!*
தனியேனாருயிரே! என்தலைமிசையாய் வந்திட்டு*
இனிநான் போகலொட்டேன் ஒன்றும் மாயஞ்செய்யேல் என்னையே. 1

மாயஞ்செய்யேல்என்னை உன்திருமார்வத்துமாலைநங்கை*
வாசஞ்செய்பூங்குழலாள் திருவாணை நின்னாணை கண்டாய்*
நேசஞ்செய்து உன்னோடென்னை உயிர்வேறின்றி ஒன்றாகவே*
கூசஞ்செய்யாது கொண்டாய் என்னைக் கூவிக்கொள்ளாய் வந்தந்தோ.2

கூவிக்கொள்ளாய் வந்தந்தோ என்பொல்லாக் கருமாணிக்கமே!*
ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன் நான்*
மேவித்தொழும்பிரமன்சிவன் இந்திரனாதிக்கெல்லாம்*
நாவிக்கமலமுதற்கிழங்கே உம்பரந்ததுவே 3

உம்பரந்தண்பாழேயோ அதனுள்மிசை நீயேயோ*
அம்பரநற்சோதி யதனுள் பிரமன் அரன்நீ*
உம்பரும்யாதவரும்படைத்த முனிவனவன்நீ*
எம்பரம் சாதிக்கலுற்று என்னைப்போரவிட்டிட்டாயே 4

போரவிட்டிட்டு என்னை நீ புறம்போக்கலுற்றால்*பின்னை யான்
ஆரைக்கொண்டெத்தையந்தோ எனதென்பதென் ? யானென்பதென் ?*
தீரஇரும்புண்டநீரதுபோல என்னாருயிரை
ஆரப்பருக* எனக்கு ஆராவமுதானாயே. 5

எனக்காராவமுதாய் எனதாவியை இன்னுயிரை*
மனக்காராமைமன்னி உண்டிட்டாய் இனியுண்டொழியாய்*
புனக்காயாநிறத்த! புண்டரீகக்கண் செங்கனிவாய்*
உனக்கேற்கும் கோலமலர்ப்பாவைக்கன்பா! என்னன்பேயோ. 6

Koviloor Digital Library

**கோலமலர்ப்பாவைக்கன்பாகிய என்னன்பேயோ*
நீலவரைஇரண்டு பிறைகவ்வி நிமிர்ந்ததொப்ப*
கோலவராகமொன்றாய் நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்!*
நீலக்கடல்கடைந்தாய் உன்னைப்பெற்று இனிப் போக்குவனோ 7

பெற்றினிப்போக்குவனோ ? உன்னை! என்தனிப்பேருயிரை*
உற்ற இருவினையாய் உயிராய்ப்பயனாய் அவையாய்
முற்றவிம்மூவுலகும் பெருந்தூறாய்த்தூற்றில்புக்கு*
முற்றக்கரந்தொளித்தாய் என்முதல்தனிவித்தேயோ!. 8

முதல்தனிவித்தேயோ! முழுமூவுலகாதிக்கெல்லாம்*
முதல்தனிஉன்னை உன்னை எனைநாள்வந்து கூடுவன் நான் ?
முதல்தனி அங்குமிங்கும் முழுமுற்றுறுவாழ்பாழாய்*
முதல்தனி சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவிலீயோ!. 9

**சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும்பாழேயோ
சூழ்ந்ததனில் பெரிய பரநன்மலர்ச்சோதீயோ
சூழ்ந்ததனில் பெரிய சுடர்ஞானவின்பமேயோ!*
சூழ்ந்ததனில் பெரிய என்னவாவறச் சூழ்ந்தாயே 10

**அவாவறச்சூழ் அரியை அயனை அரனையலற்றி*
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்சொன்ன*
அவாவிலந்தாதிகளால் இவையாயிரமும்* முடிந்த
அவாவிலந்தாதி இப்பத்தறிந்தார் பிறந்தாருயர்ந்தே 11

(உயர்வறவுயர்நலம் உடையவன்யவனவன், மயர்வறமதி நலம் அருளினன்யவனவன், அயர்வறுமமரர்கள் அதிபதியவனவன், துயரறுசுடரடி தொழுதெழு என்மனனே)

ஆழ்வார் திருவடிகளே சரணம்

கோயில் திருவாய்மொழி முற்றும்.

Koviloor Digital Library

திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த

இராமானுச நூற்றந்தாதி

தனியன்கள்

வேதப்பிரான் பட்டர் அருளிச் செய்தவை

முன்னை வினையகல மூங்கிற்குடியமுதன்*
பொன்னங் கழற்கமலப் போதிரண்டும்* என்னுடைய
சென்னிக்கணியாகச் சேர்த்தினேன்* தென்புலத்தார்க்கு
என்னுக் கடவுடையேன் யான். 1

நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதின்றி நண்ணினர்பால்*
சயந்தரு கீர்த்தி இராமானுச முனி தாளிணைமேல்*
உயர்ந்த குணத்துத் திருவரங்கத்தமுது ஓங்கும்* அன்பால்
இயம்பும் கலித்துறை அந்தாதி ஓத இசை நெஞ்சமே. 2

அபிநிவேசமுடைய ஆஸ்திகர் அருளியது

சொல்லின் தொகைகொண்டு உனதடிப்போதுக்குத் தொண்டுசெய்யும்*
நல்லன்பரேத்தும் உன்நாமமெல்லாம் என் தன் நாவினுள்ளே*
அல்லும் பகலும் அமரும்படிநல்கு அறுசமயம்
வெல்லும்பரம!* இராமானுச! இது என் விண்ணப்பமே 3

*இனி என் குறை நமக்கு எம்பெருமானார் திருநாமத்தால்
முனிதந்த நூற்றெட்டுச் சாவித்திரியென்னும் நுண்பொருளை
கனிதந்த செஞ்சொல் கலித்துறையந்தாதி பாடித்தந்தான்
புனிதன் திருவரங்கத்தமுதாகிய புண்ணியனே. 4

நூல்

**பூமன்னுமாது பொருந்தியமார்பன்* புகழ்மலிந்த
பாமன்னுமாறனடி பணிந்துய்ந்தவன்* பல்கலையோர்
தாம் மன்னவந்த இராமானுசன் சரணாரவிந்தம்
நாம் மன்னிவாழ* நெஞ்சே! சொல்லுவோம் அவன் நாமங்களே. 1

---

* திருநாராயணபுரத்தில் அநுஸந்திக்கப்படுகிறது

Koviloor Digital Library

ஸ்ரீ ராமானுஜர் - திருப்பதி

Koviloor Digital Library

Koviloor Digital Library

**கள்ளார்பொழில் தென்னரங்கன்* கமலப்பதங்கள் நெஞ்சில்
கொள்ளாமனிசரை நீங்கி* குறையல்பிரானடிக்கீழ்
விள்ளாத அன்பன் இராமானுசன் மிக்கசீலமல்லால்
உள்ளாதென்னெஞ்சு!* ஒன்றறியேன் எனக்குற்ற பேரியல்வே. 2

பேரியல்நெஞ்சே! அடிபணிந்தேன் உன்னை* பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ள சுற்றம் புலர்த்தி* பொருவருஞ்சீர்
ஆரியன் செம்மை இராமானுசமுனிக்கன்புசெய்யும்
சீரியபேறுடையார்* அடிக்கீழ் என்னைச் சேர்த்ததற்கே. 3

என்னைப்புவியில் ஒருபொருளாக்கி* மருள்சுரந்த
முன்னைப்பழவினை வேரறுத்து* ஊழி முதல்வனையே
பன்னப்பணித்த இராமானுசன் பரன்பாதமுமென்
சென்னித் தரிக்கவைத்தான்* எனக்கேதும் சிதைவில்லையே. 4

எனக்குற்றசெல்வம் இராமானுசனென்று* இசையகில்லா
மனக்குற்றமாந்தர் பழிக்கில்புகழ்* அவன்மன்னியசீர்
தனக்குற்றஅன்பர் அவன் திருநாமங்கள் சாற்றும் என்பா
இனக்குற்றம் காணகில்லார்* பத்திஏய்ந்த இயல்விதென்றே. 5

இயலும்பொருளும் இசையத்தொடுத்து* ஈன்கவிகளன்பால்
மயல்கொண்டுவாழ்த்தும் இராமானுசனை* மதியின்மையால்
பயிலும் கவிகளில் பத்தியில்லாத என் பாவி நெஞ்சால்
முயல்கின்றனன்* அவன்றன் பெருங்கீர்த்திமொழிந்திடவே. 6

**மொழியைக் கடக்கும் பெரும்புகழான்* வஞ்சமுக்குறும்பாம்
குழியைக்கடக்கும் நம்கூரத்தாழ்வான் சரண்கூடியபின்*
பழியைக்கடத்தும் இராமானுசன் புகழ்பாடி அல்லா
வழியைக்கடத்தல்* எனக்கு இனியாதும் வருத்தமன்றே. 7

வருத்தும் புறவிருள் மாற்ற* எம்பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ்தன்னையும்கூட்டி* ஒன்றத்
திரித்து அன்றெரித்த திருவிளக்கைத் தன் திருவுள்ளத்தே
இருத்தும்பரமன்* இராமானுன் எம் இறையவனே. 8

Koviloor Digital Library

இறைவனைக் காணும் இதயத்திருள்கெட்* ஞானமென்னும்
நிறைவிளக்கேற்றியபூதத் திருவடித்தாள்கள்* நெஞ்சத்து
உறையவைத்தாளும் இராமானுசன் புகழ் ஓதும் நல்லோர்
மறையினைக் காத்து* இந்தமண்ணகத்தே மன்னவைப்பவரே. 9

மன்னிய பேரிருள் மாண்டபின்* கோவலுள் மாமலராள்
தன்னொடுமாயனைக் கண்டமை காட்டும்* தமிழ்த்தலைவன்
பொன்னடி போற்றும் இராமானுசற்கு அன்பு பூண்டவர்தாள்
சென்னியிற் சூடும்* திருவுடையார்என்றும் சீரியரே. 10

சீரியநான்மறைச்செம்பொருள்* செந்தமிழாலளித்த
பாரியலும் புகழ்ப்பாண்பெருமாள்* சரணாம் பதுமத்
தாரியல்சென்னி இராமானுசன்தன்னைச் சார்ந்தவர்தம்
காரியவண்மை* என்னால் சொல்லொணாது இக்கடலிடத்தே. 11

இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்கிறைவன்* இணையடிப்போது
அடங்கும் இதயத்திராமானுசன்* அம்பொற்பாதமென்றும்
கடங்கொண்டிறைஞ்சும் திருமுனிவர்க்கன்றிக் காதல்செய்யாத்
திடங்கொண்ட ஞானியர்க்கே* அடியேன்அன்பு செய்வதுவே. 12

செய்யும் பசுந்துளவத்தொழில் மாலையும்* செந்தமிழில்
பெய்யும் மறைத்தமிழ் மாலையும்* பேராதசீர் அரங்கத்து
அய்யன் கழற்கணியும் பரன்தாளன்றி ஆதரியா
மெய்யன்* இராமானுசன் சரணே கதிவேறெனக்கே. 13

கதிக்குப்பதறி* வெங்கானமும் கல்லும்கடலுமெல்லாம்
கொதிக்கத் தவம் செய்யும் கொள்கையற்றேன்* கொல்லிகாவலன்
சொல்பதிக்கும் கலைக்கவிபாடும் பெரியவர்பாதங்களே
துதிக்கும்பரமன்* இராமானுசன் என்னைச்சோர்விலனே. 14

Koviloor Digital Library

சோராதகாதல் பெருஞ்சுழிப்பால்* தொல்லைமாலை ஒன்றும்
பாராது அவனைப் பல்லாண்டென்று காப்பிடும்* பான்மையன்தாள்
பேராத உள்ளத்து இராமானுசன்தன் பிறங்கியசீர்
சாராமனிசரைச் சேரேன்* எனக்கென்னதாழ்வினியே ?. 15

**தாழ்வொன்றில்லா மறைதாழ்ந்து* தலமுழுதும் கலியே
ஆள்கின்ற நாள்வந்து அளித்தவன் காண்மின்* அரங்கர்மௌலி
சூழ்கின்றமாலையைச் சூடிக்கொடுத்தவள் தொல்லருளால்
வாழ்கின்ற வள்ளல்* இராமானுசனென்னும் மாமுனியே. 16

முனியார் துயரங்கள் முந்திலும்* இன்பங்கள் மொய்த்திடினும்
கனியார் மனம், கண்ணமங்கை நின்றானைக்* கலைபரவும்
தனியானையைக் தண்டமிழ்செய்த நீலன்தனக்கு உலகில்
இனியானை* எங்கள் இராமானுசனைவந்தெய்தினரே. 17

எய்தற்கரிய மறைகளை* ஆயிரம் இன்தமிழால்
செய்தற்கு உலகில் வரும் சடகோபனை* சிந்தையுள்ளே
பெய்தற்கிசையும் பெரியவர்சீரை உயிர்களெல்லாம்
உய்தற்குதவும்* இராமானுசன் எம் உறுதுணையே. 18

உறுபெருஞ்செல்வமும் தந்தையும் தாயும்* உயர்குருவும்
வெறிதருபூமகள் நாதனும்* மாறன் விளங்கியசீர்
நெறிதரும் செந்தமிழ் ஆரணமேயென்று இந்நீணிலத்தோர்
அறிதரநின்ற* இராமானுசன் எனக்காரமுதே. 19

ஆரப்பொழில் தென்குருகைப்பிரான்* அமுதத்திருவாய்
ஈரத்தமிழின் இசை உணர்ந்தோர்கட்கு* இனியவர்தம்
சீரைப்பயின்றுய்யும் சீலங்கொள் நாதமுனியை நெஞ்சால்
வாரிப்பருகும்* இராமானுசன் என்தன் மாநிதியே. 20

நிதியைப் பொழியும் முகிலென்று* நீசர்தம் வாசல்பற்றித்
துதிகற்று உலகில் துவள்கின்றிலேன் இனித்* தூய்நெறிசேர்

Koviloor Digital Library

எதிகட்கிறைவன் யமுனைத்துறைவன் இணையடியாம்
கதிபெற்றுடைய* இராமானுசன் என்னைக்காத்தனனே. 21

கார்த்திகையானும் கரிமுகத்தானும்* கனலும் முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு* மூவுலகும்
பூத்தவனே என்று போற்றிட வாணன் பிழைபொறுத்த
தீர்த்தனை யேத்தும்* இராமானுசன் என்தன் சேமவைப்பே. 22

வைப்பாய வான்பொருள்ளென்று* நல்லன்பர் மனத்தகத்தே
எப்போதும் வைக்கும் இராமானுசனை* இருநிலத்தில்
ஒப்பார் இலாத உறவினையேன் வஞ்சநெஞ்சில் வைத்து
முப்போதும் வாழத்துவன்* என்னாம் இது அவன்மொய்புகழ்க்கே. 23

மொய்த்த வெந்தீவினையால் பல்லுடல்தொறும் மூத்து* அதனால்
எய்த்தொழிந்தேன் முனநாள்களெல்லாம்* இன்று கண்டுயர்ந்தேன்
பொய்த்தவம் போற்றும் புலைச்சமயங்கள் நிலத்தவியக்
கைத்த, மெய்ஞ்ஞானத்து* இராமானுசனென்னும் கார்தன்னையே. 24

காரேய் கருணை இராமானுச! இக்கடலிடத்தில்
ஆரே யறிபவர் நின்னருளின் தன்மை ?* அல்லலுக்கு
நேரே உறைவிடம்நான் வந்து நீ என்னை உய்த்தபின் உன்
சீரே உயிர்க்குயிராய்* அடியேற்கின்று தித்திக்குமே. 25

திக்குற்ற கீர்த்தி இராமானுசனை* என்செய்வினையாம்
மெய்க்குற்றம் நீக்கி விளங்கிய மேகத்தை* மேவும் நல்லோர்
எக்குற்றவாளர் எதுபிறப்பு ஏதியல்வாக நின்றோர்,
அக்குற்றம் அப்பிறப்பு* அவ்வியல்வே நம்மையாட்கொள்ளுமே. 26

கொள்ளக் குறைவற்றிலங்கி* கொழுந்து விட்டோங்கிய உன்
வள்ளல்தனத்தினால் வல்வினையேன்மனம் நீபுகுந்தாய்*
வெள்ளைச் சுடர்விடும் உன் பெருமேன்மைக்கு இழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கும்* இராமானுச! என் தனி நெஞ்சமே. 27

Koviloor Digital Library

நெஞ்சில் கறைகொண்டகஞ்சனைக் காய்ந்த நிமலன்* நங்கள்
பஞ்சித் திருவடிப்பின்னைதன் காதலன்* பாதம் நண்ணா
வஞ்சர்க்கரிய இராமானுசன் புகழ் அன்றி என்வாய்
கொஞ்சிப் பரவகில்லாது* என்ன வாழ்வு இன்று கூடியதே. 28

கூட்டும் விதி என்று கூடுங்கொலோ? தென்குருகைப்பிரான்
பாட்டென்றும் வேதப் பசுந்தமிழ்தன்னை* தன்பத்தியென்னும்
வீட்டின்கண் வைத்த இராமானுசன் புகழ் மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள்தன்னை* என்நாட்டங்கள்கண்டு இன்ப மெய்திடவே. 29

இன்பந்தரு பெருவீடு வந்தெய்திலென்? எண்ணிறந்த
துன்பந்தரு நிரயம் பலசூழிலென்? தொல்லுலகில்
மன்பல் லுயிர்கட்கிறைவன் மாயன் என மொழிந்த
அன்பன் அனகன்* இராமானுசனென்னை ஆண்டனனே. 30

**ஆண்டுகள் நாள் திங்களாய்* நிகழ்காலமெல்லாம், மனமே
ஈண்டுபல்யோனிகள் தோறுழல்வோம்* இன்று ஒரெண்ணின்றியே
காண்டகுதோளண்ணல் தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப்
பூண்ட அன்பாளன்* இராமானுசனைப் பொருந்தினமே. 31

பொருந்தியதேசும் பொறையும் திறலும் புகழும்* நல்ல
திருந்திய ஞானமும் செல்வமும் சேரும்* செறுகலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்து எடுத்தளித்த
அருந்தவன்* எங்கள் இரமானுசனை அடைபவர்க்கே. 32

அடையார்கமலத்து அலர்மகள் கேள்வன்* கையாழியென்னும்
படையோடு நாந்தகமும் படர்தண்டும்* ஒண்சார்ங்கவில்லும்
புடையார் புரிசங்கமும் இந்தப்பூதலம் காப்பதற்கென்று*
இடையே இராமானுச முனியாயின இந்நிலத்தே. 33

நிலத்தைச் செறுத்துண்ணும் நீசக்கலியை* நினைப்பரிய
பலத்தைச்செறுத்தும் பிறங்கியதில்லை*என்பெய்வினை தென்

Koviloor Digital Library

புலத்தில் பொறித்த அப்புத்தகச்சும்மை பொறுக்கியபின்
நலத்தைப் பொறுத்தது* இராமானுசன் தன் நயப்புகழே. 34

நயவேன் ஒரு தெய்வம் நானிலத்தே* சில மானிடத்தைப்
புயலே எனக்கவி போற்றி செய்யேன்* பொன்னரங்கமென்னில்
மயலே பெருகும் இராமானுசன் மன்னுமாமலர்த்தாள்
அயரேன்* அருவினை என்னை எவ்வாறின்றடர்ப்பதுவே. 35

அடல்கொண்ட நேமியன் ஆருயிர்நாதன்* அன்று ஆரணச்சொல்
கடல்கொண்ட ஒண்பொருள் கண்டளிப்ப* பின்னும்காசினியோர்
இடரின்கண் வீழ்த்திடத் தானுமவ்வொண்பொருள் கொண்டு அவர்பின்
படரும்குணன்* எம் இராமானுசன்தன் படியிதுவே. 36

படிகொண்ட கீர்த்தி இராமாயணமென்னும் பத்திவெள்ளம்*
குடிகொண்டகோயில் இராமானுசன் குணங்கூறும்* அன்பர்
கடிகொண்ட மாமலர்த்தாள் கலந்து உள்ளங் கனியும் நல்லோர்
அடிகண்டு கொண்டுகந்து* என்னையும் ஆள் அவர்க்காக்கினரே. 37

ஆக்கிஅடிமை நிலைப்பித்தனை என்னைஇன்று* அவமே
போக்கிப்புறத்திட்டது என் பொருளா முன்பு ?* புண்ணியர்தம்
வாக்கில் பிரியா இராமானுச! நின் அருளின் வண்ணம்
நோக்கில் தெரிவரிதால்* உரையாய் இந்த நுண்பொருளே. 38

பொருளும் புதல்வரும் பூமியும்* பூங்குழலாரும் என்றே
மருள்கொண்டு இளைக்கும் நமக்கு நெஞ்சே!* மற்றுளார்தரமோ ?
இருள்கொண்ட வெந்துயர்மாற்றித் தன் ஈறில் பெரும்புகழே
தெருளும் தெருள் தந்து* இராமானுசன் செய்யும் சேமங்களே. 39

சேமநல்வீடும் பொருளும் தருமமும்* சீரியநற்
காமமும் என்றிவை நான்கென்பர்* நான்கினும் கண்ணனுக்கே
ஆமதுகாமம் அறம் பொருள் வீடு இதற்கென்றுரைத்தான்
வாமனன்சீலன்* இராமானுசன் இந்தமண்மிசையே. 40

Koviloor Digital Library

மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து* எங்கள் மாதவனே
கண்ணுற நிற்கிலும் காணகில்லா* உலகோர்களெல்லாம்
அண்ணல் இராமானுசன் வந்து தோன்றிய அப்பொழுதே
நண்ணரு ஞானம் தலைக்கொண்டு* நாரணற்காயினரே. 41

ஆயிழையார் கொங்கை தங்கும்* அக்காதல் அளற்றழுந்தி
மாயும் என் ஆவியை வந்தெடுத்தான் இன்று* மாமலராள்
நாயகன் எல்லாவுயிர்கட்கும் நாதன் அரங்கன் என்னும்
தூயவன்* தீதில் இராமானுசன் தொல்லருள்சுரந்தே. 42

சுரக்கும் திருவும் உணர்வும் சொலப்புகில் வாயமுதம்
பரக்கும் இருவினை பற்றவோடும்* படியிலுள்ளீர்
உரைக்கின்றனன் உமக்கு யான் அறஞ்சீறும் உறுகலியைத்
துரக்கும் பெருமை இராமானுசனென்று சொல்லுமினே. 43

சொல்லார் தமிழ் ஒருமூன்றும்* சுருதிகள் நான்கும் எல்லை
இல்லா அறநெறியாவும் தெரிந்தவன்* எண்ணருஞ்சீர்
நல்லார் பரவும் இராமானுசன் திருநாமம் நம்பிக்
கல்லார் அகலிடத்தோர்* எது பேறென்று காமிப்பரே. 44

பேறொன்று மற்றில்லை நின்சரண்அன்றி* அப்பேறளித்தற்கு
ஆறொன்றுமில்லை மற்று அச்சரண்அன்றி* என்று இப்பொருளைத்
தேறுமவர்க்கும் எனக்கும் உனைத்தந்த செம்மை சொல்லால்
கூறும் பரமன்று* இராமானுச! மெய்ம்மைகூறிடிலே. 45

கூறும் சமயங்களாறும் குலைய* குவலயத்தே
மாறன் பணித்த மறை உணர்ந்தோனை* மதியிலியேன்
தேறும்படி என் மனம் புகுந்தானைத் திசையனைத்தும்
ஏறும் குணனை* இராமானுசனை இறைஞ்சினமே. 46

இறைஞ்சப்படும்பரன் ஈசன் அரங்கனென்று* இவ்வுலகத்து
அறம்செப்பும் அண்ணல் இராமானுசன்* என் அருவினையின்

Koviloor Digital Library

திறம் செற்று இரவும்பகலும் விடாது என்தன் சிந்தையுள்ளே
நிறைந்து ஒப்பறவிருந்தான்* எனக்காரும் நிகரில்லையே. 47

நிகரின்றிநின்ற என் நீசதைக்கு* நின்னருளின்கணன்றிப்
புகலொன்று மில்லை அருட்கு மஃதேபுகல்* புன்மையிலோர்
பகரும் பெருமை இராமானுச இனி நாம் பழுதே
அகலும் பொருளென் ?* பயன் இருவோமுக்கும் ஆன பின்னே. 48

ஆனது செம்மை அறநெறி* பொய்ம்மை அறுசமயம்
போனது பொன்றி இறந்தது வெங்கலி* பூங்கமலத்
தேனதிபாய்வயல் தென்னரங்கன் கழல் சென்னிவைத்துத்
தானதில் மன்னும்* இராமானுசன் இத்தலத்துதித்தே. 49

உதிப்பன உத்தமர் சிந்தையுள்* ஒன்னலர் நெஞ்சமஞ்சிக்
கொதித்திட மாறி நடப்பன* கொள்ளை வன்குற்றமெல்லாம்
பதித்த என் புன்கவிப் பாவினம் பூண்டன, பாவுதொல்சீர்
எதித்தலைநாதன்* இராமானுசன்தன் இணையடியே. 50

அடியைத்தொடர்ந்தெழும் ஐவர்கட்காய்* அன்றுபாரதப்போர்
முடியப் பரிநெடுந்தேர் விடுங்கோனை* முழுதுணர்ந்த
அடியர்க்கமுதம் இராமானுசன் என்னையாள வந்து இப்
படியிற் பிறந்தது* மற்றில்லை காரணம்பார்த்திடிலே. 51

பார்த்தான் அறுசமயங்கள் பதைப்ப* இப்பார்முழுதும்
போர்த்தான்புகழ் கொண்டு புன்மையினேனிடைத் தான் புகுந்து*
தீர்த்தான் இருவினை; தீர்த்து அரங்கன் செய்ய தாளிணையோடு
ஆர்த்தான்* இவை எம் இராமானுசன் செய்யும் அற்புதமே. 52

அற்புதன் செம்மை இராமானுசன் என்னை ஆளவந்த
கற்பகம் கற்றவர் காமுறுசீலன்* கருதரிய
பற்பல்லுயிர்களும் பல்லுலகுயாவும் பரனதென்னும்
நற்பொருள்தன்னை* இந்நானிலத்தே வந்து நாட்டினனே. 53

Koviloor Digital Library

நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன* நாரணனைக்
காட்டிய வேதம் களிப்புற்றது* தென்குருகைவள்ளல்
வாட்டமிலா வண்தமிழ்மறை வாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டிய சீலத்து* இராமானுசன்தன் இயல்வுகண்டே. 54

கண்டவர்சிந்தைகவரும் கடிபொழில் தென்னரங்கன்*
தொண்டர் குலாவும் இராமானுசனை* தொகையிறந்த
பண்தருவேதங்கள் பார்மேல்நிலவிடப் பார்த்தருளும்
கொண்டலை மேவித்தொழும்* குடியாமெங்கள்கோக்குலமே. 55

கோக்குலமன்னரை மூவெழுகால்* ஒரு கூர்மழுவால்
போக்கியதேவனைப் போற்றும் புனிதன்* புவனமெங்கும்
ஆக்கிய கீர்த்தி இராமானுசனை அடைந்தபின் என்
வாக்குரையாது* என்மனம் நினையாது இனி மற்றொன்றையே . 56

மற்றொருபேறு மதியாது* அரங்கன் மலரடிக்கு ஆள்
உற்றவரே தனக்குற்றவராக்கொள்ளும் உத்தமனை*
நற்றவர்போற்றும் இராமானுசனை இந்நானிலத்தே
பெற்றனன்* பெற்றபின் மற்றறியேன் ஒருபேதைமையே. 57

பேதையர்வேதப்பொருளிதென்று உன்னி* பிரமம் நன்றென்று
ஓதி மற்றெல்லா உயிரும் அஃதென்று* உயிர்கள் மெய்விட்டு
ஆதிப்பரனோடொன்றாமென்று சொல்லும் அவ்வல்லலெல்லாம்
வாதில்வென்றான்* எம்இராமானுசன் மெய்ம்மதிக்கடலே. 58

கடலளவாய திசையெட்டினுள்ளும்* கலியிருளே
மிடை தருகாலத்து இராமானுசன்* மிக்க நான்மறையின்
சுடரொளியால் அவ்விருளைத் துரந்திலனேல் உயிரை
உடையவன்* நாரணன் என்று, அறிவாரில்லை உற்றுணர்ந்தே. 59

உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந்தொறும்* திருவாய்மொழியின்
மணந்தரும் இன்னிசை மன்னும் இடந்தொறும்* மாமலராள்

Koviloor Digital Library

புணர்ந்த பொன்மார்பன் பொருந்தும் பதிதொறும் புக்கு நிற்கும்
குணந்திகழ் கொண்டல்* இராமானுசன் எம் குலக்கொழுந்தே. 60

கொழுந்துவிட்டோடிப்படரும் வெங்கோள்வினையால்* நிரயத்
தழுந்தியிட்டேனை வந்தாட்கொண்டபின்னும்* அருமுனிவர்
தொழுந்தவத்தோன் எம் இராமானுசன் தொல்புகழ் சுடர்மிக்கு
எழுந்தது* அத்தால் நல்லதிசயங்கண்டது இருநிலமே. 61

இருந்தேன் இருவினைப்பாசம் கழற்றி* இன்று யான் இறையும்
வருந்தேன், இனிஎம் இராமானுசன்* மன்னுமாமலர்த்தாள்
பொருந்தா நிலையுடைப்புன்மையினோர்க்கொன்றும் நன்மை செய்யாப்
பெருந்தேவரைப்பரவும்* பெரியோர்தம் கழல்பிடித்தே. 62

பிடியைத்தொடரும் களிறென்ன* யான் உன் பிறங்கியசீர்
அடியைத் தொடரும் படி நல்கவேண்டும்* அறுசமயச்
செடியைத் தொடரும் மருள்செறிந்தோர் சிதைந்தோட வந்து இப்
படியைத் தொடரும்* இராமானுச!* மிக்கபண்டிதனே. 63

பண்தரும் மாறன்பசுந்தமிழ்* ஆனந்தம்பாய்மதமாய்
விண்டிட எங்கள் இராமானுசமுனிவேழம்* மெய்ம்மை
கொண்ட நல்வேதக்கொழுந்தண்டமேந்திக் குவலயத்தே
மண்டி வந்தேன்றது* வாதியர்காள் உங்கள் வாழ்வற்றதே. 64

வாழ்வற்றது தொல்லை வாதியர்க்கு* என்றும் மறையவர்தம்
தாழ்வற்றது தவம் தாரணி பெற்றது* தத்துவநூல்
கூழற்றது குற்றமெல்லாம்பதித்த குணத்தினர்க்கு அந்
நாழற்றது* நம் இராமானுசன் தந்த ஞானத்திலே. 65

ஞானம்கனிந்த நலங்கொண்டு* நாடொறும் நைபவர்க்கு
வானம்கொடுப்பது மாதவன்* வல்வினையேன் மனத்தில்
ஈனம் கடிந்த இராமானுசன் தன்னை எய்தினர்க்கு அத்
தானம்கொடுப்பது* தன்தகவென்னும் சரண்கொடுத்தே. 66

Koviloor Digital Library

சரணம் அடைந்த தருமனுக்கா* பண்டு நூற்றுவரை
மரணம் அடைவித்த மாயவன்* தன்னை வணங்க வைத்த
கரணம் இவை உமக்கன்றென்று இராமானுசன் உயிர்கட்கு
அரணங் கமைத்திலனேல்* அரணார் மற்றிவ் வாருயிர்க்கே ?. 67

ஆரெனக்கின்று நிகர்சொல்லில்* மாயன் அன்று ஐவர் தெய்வத்
தேரினிற்செப்பிய கீதையின்செம்மைப்பொருள்தெரியப்*
பாரினிற் சொன்ன இராமானுசனைப் பணியும் நல்லோர்
சீரினிற் சென்று பணிந்தது* என்னாவியும் சிந்தையுமே. 68

சிந்தையினோடுகரணங்கள் யாவும் சிதைந்து* முன்னாள்
அந்தமுற்றாழ்ந்தது கண்டு* அவை என்தனக்கு அன்றருளால்
தந்த அரங்கனும் தன்சரண்தந்திலன்; தானதுதந்து*
எந்தை இராமானுசன் வந்தெடுத்தனன் இன்றென்னையே. 69

என்னையும் பார்த்து என் இயல்வையும் பார்த்து* எண்ணில் பல்குணத்த
உன்னையும் பார்க்கில் அருள் செய்வதே நலம்* அன்றியென்பால்
பின்னையும் பாாக்கில் நலமுளதே ? உன்பெருங்கருணை
தன்னை என்பார்ப்பர் ?* இராமானுச! உன்னைச்சார்ந்தவரே. 70

சார்ந்தது என் சிந்தை யுன்தாளிணைக்கீழ்* அன்புதான்மிகவும்
கூர்ந்தது அத்தாமரைத் தாள்களுக்கு* உன்தன் குணங்களுக்கே
தீர்ந்தது என் செய்கை ; முன்செய்வினை நீசெய்வினையதனால்
பேர்ந்தது* வண்மை இராமானுச! எம்பெருந்தகையே. 71

கைத்தனன் தீயசமயக்கலகரை* காசினிக்கே
உய்த்தனன் தூயமறைநெறிதன்னை* என்று உன்னி உள்ளம்
நெய்த்தவன்போடிருந்தேத்தும் நிறைபுகழோருடனே
வைத்தனன் என்னை* இராமானுசன் மிக்கவண்மை செய்தே. 72

வண்மையினாலும் தன்மாதகவாலும்* மதிபுரையும்
தண்மையினாலும் இத்தாரணியோர்கட்கு* தான்சரணாய்

Koviloor Digital Library

உண்மை நன்ஞானம் உரைத்த இராமானுசனை உன்னும்
திண்மை யல்லால் எனக்கில்லை* மற்றோர்நிலை தேர்ந்திடிலே. 73

தேரார் மறையின் திறமென்று* மாயவன் தீயவரைக்
கூராழிகொண்டு குறைப்பது* கொண்டலனையவண்மை
ஏரார்குணத்து எம் இராமானுசன் அவ்வெழில் மறையில்
சேராதவரைச்சிதைப்பது* அப்போதொருசிந்தைசெய்தே. 74

செய்த்தலைச்சங்கம்செழுமுத்தமீனும்* திருவரங்கர்
கைத்தலத்தாழியும் சங்கமுமேந்தி* நங்கண்முகப்பே
மொய்த்தலைத்து உன்னைவிடே னென்றிருக்கிலும், நின்புகழே
மொய்த்தலைக்கும்வந்து* இராமானுச! என்னை முற்றும் நின்றே. 75

**நின்ற வண்கீர்த்தியும் நீள்புனலும்* நிறைவேங்கடப்பொற்
குன்றமும் வைகுந்தநாடும் குலவிய பாற்கடலும்*
உன்தனக்கெத்தனை இன்பந்தரும்? உன்னிணைமலர்த்தாள்
என்தனக்கும் அது* இராமானுச! இவை ஈந்தருளே. 76

ஈந்தனன் ஈயாத இன்னருள் எண்ணில் மறைக்குறும்பைப்
பாய்ந்தனன் அம்மறைப் பல்பொருளால்* இப்படியனைத்தும்
ஏய்ந்தனன் கீர்த்தியினால் என்வினைகளை வேர்பறியக்
காய்ந்தனன்* வண்மை இராமானுசற்கு என் கருத்தினியே. 77

கருத்திற்புகுந்து உள்ளில் கள்ளம்கழற்றி* கருதரிய
வருத்தத்தினால் மிகவஞ்சித்து* நீ இந்த மண்ணகத்தே
திருத்தித் திருமகள்கேள்வனுக்கு ஆக்கியபின் என்னெஞ்சில்
பொருத்தப்படாது* எம் இராமானுச! மற்றோர் பொய்ப்பொருளே. 78

பொய்யைச் சுரக்கும் பொருளைத் துரந்து* இந்தப்பூதலத்தே
மெய்யைப் புரக்கும் இராமானுசன் நிற்க* வேறுநம்மை
உய்யக் கொள்ளவல்ல தெய்வம் இங்குயாதென்று உலர்ந்து, அவமே
ஐயப்படாநிற்பர்* வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே. 79

Koviloor Digital Library

நல்லார் பரவும் இராமானுசன்* திருநாமம் நம்ப
வல்லார் திறத்தை மறவாதவர்கள்யவர்* அவர்க்கே
எல்லாவிடத்திலும் என்றும் எப்போதிலும்; எத்தொழும்பும்
சொல்லால் மனத்தால்* கருமத்தினால், செய்வன் சோர்வின்றியே. 80

சோர்வின்றி உன்தன் துணையடிக்கீழ்* தொண்டு பட்டவர்பால்
சார்வின்றி நின்றஎனக்கு* அரங்கன் செய்ய தாளிணைகள்
பேர்வின்றி இன்று பெறுத்தும் இராமானுச! இனி உன்
சீரொன்றிய கருணைக்கு* இல்லைமாறு தெரிவுறிலே. 81

தெரிவுற்ற ஞானம் செறியப்பெறாது* வெந்தீவினையால்
உருவற்ற ஞாலத்து உழல்கின்ற என்னை* ஒரு பொழுதில்
பொருவற்ற கேள்வியனாக்கி நின்றான் என்ன புண்ணியனோ?
தெரிவுற்ற கீர்த்தி* இராமானுசனென்னும் சீர்முகிலே. 82

சீர்கொண்டு பேரறம்செய்து* நல்வீடு செறிதுமென்னும்
பார்கொண்ட மேன்மையர் கூட்டனல்லேன்* உன்பதயுகமாம்
ஏர்கொண்டவீட்டை எளிதினில் எய்துவன் உன்னுடைய
கார்கொண்ட வண்மை* இராமானுச! இது கண்டுகொள்ளே. 83

கண்டுகொண்டேன் எம் இராமானுசன்தன்னை* காண்டலுமே
தொண்டுகொண்டேன் அவன் தொண்டர்பொற்றாளில்*என்தொல்லைவெந்நோய்
விண்டுகொண்டேன் அவன் சீர்வெள்ளவாரியை வாய்மடுத்தின்று
உண்டுகொண்டேன்* இன்னம் உற்றனவோதில் உலப்பில்லையே. 84

ஒதிய வேத்தின் உட்பொருளாய்* அதன் உச்சி மிக்க
சோதியை நாதன்என அறியாது உழல்கின்ற தொண்டர்*
பேதைமை தீர்த்த இராமானுசனைத்தொழும் பெரியோர்
பாதமல்லால் என்றன் ஆருயிர்க்கு* யாதொன்றும் பற்றில்லையே. 85

பற்றா மனிசரைப்பற்றி* அப்பற்று விடாது அவரே
உற்றாரென உழன்று ஒடி நையேனினி* ஒள்ளியநூல்

Koviloor Digital Library

கற்றார் பரவும் இராமானுசனைக் கருதும் உள்ளம்
பெற்றார் யவர்* அவர் எம்மை நின்றாளும் பெரியவரே. 86

பெரியவர் பேசிலும் பேதையர் பேசிலும்* தன்குணங்கட்கு
உரியசொல் என்றும் உடையவனென்றென்று* உணர்வின்மிக்கோர்
தெரியும் வண்கீர்த்தி இராமானுசன் மறைதேர்ந்து உலகில்
புரியும் நன்ஞானம்* பொருந்தாதவரைப்பொரும்கலியே. 87

கலிமிக்க செந்நெல்கழனிக் குறையல்!* கலைப்பெருமான்
ஒலிமிக்க பாடலை உண்டு தன்னுள்ளம் தடித்து* அதனால்
வலிமிக்கசீயம் இராமானுசன் மறைவாதியராம்
புலி மிக்கதென்று* இப்புவனத்தில் வந்தமைபோற்றுவனே. 88

போற்றருஞ்சீலத்து இராமானுச* நின்புகழ்தெரிந்து
சாற்றுவனேல் அதுதாழ்வு ; அதுதீரில்* உன்சீர்தனக்குஓர்
ஏற்றமென்றே கொண்டிருக்கிலும் என் மனம் ஏத்தியன்றி
ஆற்றகில்லாது* இதற்கு என் நினைவாயென்றிட்டஞ்சுவனே. 89

நினையார் பிறவியைநீக்கும் பிரானை* இந்நீணிலத்தே
எனையாளவந்த இராமானுசனை* இருங்கவிகள்
புனையார், புனையும் பெரியவர் தாள்களில் பூந்தொடையல்
வனையார்* பிறப்பில் வருந்துவர் மாந்தர் மருள்சுரந்தே. 90

மருள்சுரந்து ஆகமவாதியர்கூறும்* அவப்பொருளாம்
இருள்சுரந் தெய்த்த உலகிருள் நீங்க* தன் ஈண்டியசீர்
அருள்சுரந்து எல்லா வுயிர்கட்கும் நாதன் அரங்கன் என்னும்
பொருள் சுரந்தான்* எம் இராமானுசன் மிக்கபுண்ணியனே. 91

புண்ணிய நோன்பு புரிந்துமிலேன்* அடிபோற்றிசெய்யும்
நுண்ணருங் கேள்வி நுவன்றுமிலேன்* செம்மை நூற்புலவர்க்கு
எண்ணருங் கீர்த்தி இராமானுச! இன்று நீ புகுந்து என்
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும்* நின்ற இக்காரணம்கட்டுரையே. 92

Koviloor Digital Library

கட்டப்பொருளை மறைப்பொருளென்று* கயவர்சொல்லும்
பெட்டைக் கெடுக்கும் பிரானல்லனே* என்பெருவினையைக்
கிட்டிக் கிழங்கொடு தன்னருள் என்னும் ஒள் வாளுருவி
வெட்டிக் களைந்த* இராமானுசனென்னும் மெய்த்தவனே. 93

தவந்தரும் செல்வும் தகவும் தரும்* சலியாப்பிறவிப்
பவந்தரும் தீவினை பாற்றித்தரும்* பரந்தாமமென்னும்
திவந்தரும் தீதில் இராமானுசன் தன்னைச் சார்ந்தவர்கட்கு;
உவந்தருந்தேன்* அவன் சீரன்றி யானொன்றும் உள்மகிழ்ந்தே. 94

உண்ணின்று உயிர்களுக்கு உற்றனவேசெய்து* அவர்க்குயவே
பண்ணும் பரனும் பரிவிலனாம்படி* பல்லுயிர்க்கும்
விண்ணின்தலை நின்று வீடளிப்பான் எம் இராமானுசன், இம்
மண்ணின் தலத்துதித்து* மறைநாலும் வளர்த்தனனே. 95

வளரும் பிணிகொண்ட வல்வினையால்* மிக்க நல்வினையில்
கிளரும் துணிவு கிடைத்தறியாது* முடைத்தலையூன்
தளருமளவும் தரித்தும் விழுந்தும் தனிதிரிவேற்கு
உளர் எம் இறைவர்* இராமானுசன் தன்னை உற்றவரே. 96

தன்னை யுற்றாட்செய்யும் தன்மையினோர்* மன்னு தாமரைத்தாள்
தன்னை யுற்றாட்செய்ய என்னையுற்றான்இன்று* தன்தகவால்
தன்னை யுற்றான்றித் தன்மையுற்றாரில்லை யென்றறிந்து
தன்னை யுற்றாரை* இராமானுசன் குணம் சாற்றிடுமே. 97

**இடுமே இனிய சுவர்க்கத்தில்* இன்னும் நரகிலிட்டுச்
சுடுமே, அவற்றைத் தொடர்தரு தொல்லைச்* சுழல்பிறப்பில்
நடுமே, இனிநம் இராமானுசன் நம்மை நம்வசத்தே
விடுமே, சரணமென்றால்* மனமே நையல் மேவுதற்கே. 98

தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும்* தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும் சூனிய வாதரும்* நான்மறையும்

Koviloor Digital Library

நிற்கக் குறும்புசெய் நீசரும் மாண்டனர் நீணிலத்தே
பொற்கற்பகம்* எம்இராமானுசமுனி போந்தபின்னே. 99

போந்த தென்னெஞ்சென்னும் பொன்வண்டு* உனதடிப்போதில் ஒண்சீர்
ஆந்தெளிதேனுண்டமர்ந்திட வேண்டி* நின்பாலதுவே
ஈந்திடவேண்டும் இராமானுச! இதுவன்றி ஒன்றும்
மாந்தகில்லாது* இனிமற்றொன்று காட்டி மயக்கிடலே. 100

மயக்கும் இருவினை வல்லியிற்புண்டு* மதிமயங்கித்
துயக்கும் பிறவியில் தோன்றிய என்னை* துயரகற்றி
உயக்கொண்டு நல்கும் இராமானுச! என்றது உன்னையுன்னி
நயக்குமவர்க்கு இதிழுக்கென்பர்* நல்லவர்என்றும் நைந்தே. 101

நையும்மனம் உன் குணங்களை உன்னி* என் நாவிருந்துஎம்
ஐயன்இராமானுசனென்றழைக்கும்* அருவினையேன்
கையும் தொழும் கண்கருதிடும் காணக் கடல்புடைசூழ்
வையமிதனில்* உன் வண்மை என்பால் என்வளர்ந்ததுவே ?. 102

வளர்ந்த வெங்கோப மடங்க லொன்றாய்* அன்றுவாளவுணன்
கிளர்ந்த பொன்னாகம் கிழித்தவன்* கீர்த்திப் பயிரெழுந்து
விளைந்திடும் சிந்தை இராமானுசன் என்தன்மெய்வினைநோய்
களைந்து நன்ஞானம் அளித்தனன்* கையிற்கனியென்னவே 103

கையிற்கனியென்னக் கண்ணனைக்காட்டித்தரிலும்* உன்தன்
மெய்யில் பிறங்கியசீரன்றி வேண்டிலன் யான்* நிரயத்
தொய்யில் கிடக்கிலும் சோதிவிண் சேரிலும் இவ்வருள் நீ
செய்யில் தரிப்பன்* இராமானுச! என் செழுங்கொண்டலே. 104

**செழுந்திரைப் பாற்கடல் கண் துயில் மாயன்* திருவடிக்கீழ்
விழுந்திருப்பார்நெஞ்சில் மேவும் நன்ஞானி* நல்வேதியர்கள்
தொழுந்திருப்பாதன் இராமானுசனைத் தொழும் பெரியோர்
எழுந்திரைத்தாடும் இடம்* அடியேனுக்கு இருப்பிடமே 105

Koviloor Digital Library

சாற்றுப்பாட்டுக்கள்

** இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம்* மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கு என்பர் நல்லோர்* அவைதன்னொடும் வந்
திருப்பிடம் மாயன் இராமானுசன்மனத்து; இன்று அவன்வந்
திருப்பிடம்* என்தனிதயத்துள்ளே தனக்கின்புறவே 106

**இன்புற்றசீலத் திராமானுச!* என்றும் எவ்விடத்தும்
என்புற்றநோயுடல்தோறும் பிறந்திறந்து* எண்ணரிய
துன்புற்று வீயினும் சொல்லுவதொன்று உண்டு உன்தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி* என்னை ஆக்கி, அங்காட்படுத்தே 107

**அங்கயல்பாய்வயல் தென்னரங்கன்* அணியாகமன்னும்
பங்கய மாமலர்ப் பாவையைப்போற்றுதும்* பத்தியெல்லாம்
தங்கிய தென்னத் தழைத்து நெஞ்சே நம்தலைமிசையே
பொங்கியகீர்த்தி* இராமானுசனடிப்பூமன்னவே 108

(பூமன்னுமாது பொருந்திய மார்பன் – நெஞ்சே சொல்லுவோம் அவன் நாமங்களே)
தசக அடிவரவு: பூ சீர் நிதி ஆண்டு மண்அடி கொழுந்து சார்ந்த சோர்வு மருள் மயக்கு

இராமானுச நூற்றந்தாதி முற்றும்

திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

நாலாயிரத் தனியன்கள்

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்|
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்|| 1

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுநமத்யமாம்|
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்|| 2

யோ நித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே|
அஸ்மத்குரோர்பகவதோऽஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே|| 3

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்|
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா|| 4

பூதம் ஸரஸ்ச மஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீ பக்திஸார குலசேகரயோகிவாஹாந்|
பக்தாங்க்ரிரேணுபரகால யதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம்|| 5

குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதிபரிக்லுப்தம் சுல்கமாதாதுகாம:|
ச்வசுரமமரவந்த்யம்ரங்கநாதஸ்யஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி|| 6

மின்னார் தடமதில்சூழ் வில்லிபுத்தூரென்று ஒருகால்*
சொன்னார் கழற்கமலஞ் சூடினோம்* முன்னாள்
கிழயறுத்தானென்றுரைத்தோம்* கீழ்மையினிற்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து. 7

Koviloor Digital Library

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று*
ஈண்டிய சங்கமெடுத்தூத* வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்*
பாதங்கள் யாமுடையபற்று. 8

நீளாதுங்க ஸ்தநகிரிதடீஸுப்த முத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ|
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜிநிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய:|| 9

அன்னவயல்புதுவையாண்டாள்* அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்* இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக்கொடுத்தாளைச்சொல்லு. 10

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே* தொல்பாவை
பாடியருளவல்ல பல்வளையாய்* நாடி நீ
வேங்கடவற்கென்னை விதியென்ற இம்மாற்றம்
நாம் கடவா வண்ணமேநல்கு. 11

அல்லிநாள் தாமரைமேல் ஆரணங்கின் இன் துணைவி
மல்லிநாடாண்ட மடமயில்* மெல்லியலாள்
ஆயர்குலவேந்தனாகத்தாள்* தென்புதுவை
வேயர்பயந்த விளக்கு. 12

இன்னமுதமூட்டுகேனிங்கேவா பைங்கிளியே*
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள்* பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோன்* எங்கள்
குலசேகரனென்றேகூறு. 13

ஆரம்கெடப் பரனன்பர்கொள்ளாரென்று* அவர்களுக்கே
வாரங்கொடு குடப்பாம்பில் கையிட்டவன்* மாற்றலரை

Koviloor Digital Library

வீரங்கெடுத்த செங்கோல் கொல்லிகாவலன் வில்லவர்கோன்*
சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே. 14

தருச்சந்தப் பொழில்தழுவு தாரணியின் துயர்தீர*
திருச்சந்தவிருத்தம் செய் திருமழிசைப்பரன் வருமூர்*
கருச்சந்தும் காரகிலும் கமழ்கோங்கும் மணநாறும்*
திருச்சந்தத்துடன் மருவு திருமழிசை வளம்பதியே. 15

உலகும் மழிசையு முள்ளுணர்ந்து தம்மில்
புலவர் புகழ்க் கோலால் தூக்க* உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது. 16

மற்றொன்றும் வேண்டா மனமே! மதிளரங்கர்*
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ்* உற்ற
திருமாலை பாடும் சீர்த்தொண்டரடிப்பொடியெம்
பெருமானை* எப்பொழுதும் பேசு. 17

தமேவ மத்வா பரவாஸுதேவம்
ரங்கேசயம் ராஜவதர்ஹணீயம்|
ப்ராபோதிகீம் யோSக்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரிரேணும் பகவந்தமீடே|| 18

மண்டங்குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்
தொண்டரடிப்பொடிதொன்னகரம்* வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானைப்* பள்ளி
யுணர்த்தும் பிரானுதித்தவூர். 19

ஆபாத சூடமநுபூய ஹரிம் சயாநம்
மத்யே கவேரதுஹிதுர் முதிதாந்தராத்மா|
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோநிச்சிகாய மநவை முநிவாஹநம் தம்|| 20

Koviloor Digital Library

காட்டவே கண்ட பாதகமலம் நல்லாடை யுந்தி*
தேட்டரு முதரபந்தம் திருமார்வு கண்டம் செவ்வாய்*
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனிபுகுந்து*
பாட்டினால் கண்டுவாழும் பாணர்தாள் பரவினோமே. 21

கலயாமி கலித்வம்ஸம் கவிம் லோகதிவாகரம்|
யஸ்ய கோபி: ப்ரகாசாபி ராவித்யம் நிஹதம் தம:|| 22

வாழிபரகாலன் வாழிகலிகன்றி*
வாழிகுறையலூர்வாழ்வேந்தன்* வாழியரோ
மாயோனை வாள் வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்*
தூயோன் சுடர்மானவேல். 23

நெஞ்சுக்கிருள்கடிதீபம், அடங்காநெடும்பிறவி*
நஞ்சுக்கு நல்லவமுதம் தமிழ்நன்னூல்துறைகள்*
அஞ்சுக்கிலக்கியம், ஆரணசாரம்* பரசமயப்
பஞ்சுக்கனலின்பொறி பரகாலன் பனுவல்களே. 24

எங்கள் கதியே இராமானுசமுனியே!*
சங்கைகெடுத்தாண்டதவராசா!* பொங்குபுகழ்
மங்கையர்கோனீந்த மறையாயிரமனைத்தும்*
தங்குமனம் நீயெனக்குத்தா. 25

கைதைசேர்பூம்பொழில்சூழ்கச்சிநகர் வந்துதித்த*
பொய்கைப்பிரான் கவிஞர்போரேறு* வையத்
தடியவர்கள் வாழ அருந்தமிழ் நூற்றந்தாதி
படிவிளங்கச்செய்தான்பரிந்து. 26

என் பிறவிதீர இறைஞ்சினேன் இன்னமுதா
அன்பேதகளியளித்தானை – நன் புகழ்சேர்
சீதத்தார் முத்துக்கள் சேரும்* கடல்மல்லைப்
பூதத்தார் பொன்னங் கழல். 27

Koviloor Digital Library

சீராரும் மாடத் திருக்கோவலூரதனுள்*
காரார் கருமுகிலைக் காணப்புக்கு* ஓராத்
திருக்கண்டேனென்றுரைத்த சீரான் கழலே*
உரைக்கண்டாய் நெஞ்சே உகந்து. 28

நாராயணன் படைத்தான் நான்முகனை* நான்முகனுக்கு
ஏரார் சிவன்பிறந்தானென்னும் சொல்* சீரார்
மொழி செப்பி வாழலாம் நெஞ்சமே* மொய்பூ
மழிசைப் பரனடியே வாழ்த்து. 29

கருவிருத்தக் குழிநீத்தபின் காமக்கடுங்குழி வீழ்ந்து*
ஒருவிருத்தம் புக்குழலுறுவீர்! உயிரின் பொருள்கட்கு*
ஒருவிருத்தம் புகுதாமல் குருகையர்கோனுரைத்த*
திருவிருத்தத் தோரடி கற்றிரீர் திருநாட்டகத்தே. 30

காசினியோர்தாம் வாழக் கலியுகத்தே வந்துதித்து*
ஆசிரியப்பாவதனாலருமறை நூல் விரித்தானை*
தேசிகனைப் பராங்குசனைத் திகழ்வகுளத் தாரானை*
மாசடையா மனத்துவைத்து மறவாமல் வாழ்த்துதுமே. 31

முந்துற்ற நெஞ்சே முயற்றி தரித்துரைத்து
வந்தித்து வாயார வாழ்த்தியே – சந்த
முருகூரும் சோலைசூழ் மொய்பூம் பொருநல்
குருகூரன் மாறன்பேர் கூறு. 32

வாழிபரகாலன் வாழி கலிகன்றி*
வாழி குறையலூர் வாழ்வேந்தன்* – வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்*
தூயோன் சுடர்மானவேல். 33

முள்ளிச் செழுமலரோதாரான், முளைமதியம்*
கொள்ளிக்கென்னுள்ளம் கொதியாமே* – வள்ளல்

Koviloor Digital Library

திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியை வெட்டி*
மருவாளன் தந்தான் மடல். 34

பொன்னுலகில் வானவரும் பூமகளும் போற்றிசெய்யும்*
நன்னுதலீர்! நம்பிநறையூரர்* மன்னுலகில்
என்னிலைமை கண்டுமிரங்காரே யாமாகில்*
மன்னு மடலூர்வன் வந்து. 35

அவிதித விஷயாந்தர: சடாரே:
உபநிஷதாமுபகாநமாத்ரபோக: |
அபிச குணவசாத் ததேகசேஷீ
மதுரகவிர் ஹ்ருதயே மமாவிரஸ்து || 36

வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ்செய்த*
மாறன் சடகோபன் வண்குருகூர்– ஏறு* எங்கள்
வாழ்வா மென்றேத்தும் மதுரகவியாரெம்மை
ஆள்வார்* அவரே யரண் 37

பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோபவாங்மயம்|
ஸஹஸ்ரசாகோப நிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம்|| 38

திருவழுதி நாடென்றும் தென்குருகூரென்றும்*
மருவினிய வண்பொருநலென்றும்* அருமறைகள்
அந்தாதி செய்தானடியிணையே எப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து. 39

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்*
இனத்தாரை யல்லா திறைஞ்சேன்* தனத்தாலும்
ஏதுங்குறைவிலேன்* எந்தைசடகோபன்
பாதங்கள் யாமுடையபற்று. 40

Koviloor Digital Library

ஏய்ந்த பெருங்கீர்த்தியிராமானுசமுனிதன்*
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்* ஆய்ந்தபெருஞ்
சீரார் சடகோபன் செந்தமிழ்வேதம் தரிக்கும்*
பேராத வுள்ளம் பெற. 41

வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்*
ஆன்ற தமிழ்மறைகளாயிரமும்* ஈன்ற
முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த*
இதத்தாய் இராமானுசன். 42

மிக்கவிறைநிலையும் மெய்யா முயிர்நிலையும்*
தக்க நெறியும், தடையாகித் தொக்கியலும்*
ஊழ்வினையும் வாழ்வினையுமோதும் குருகையர்கோன்*
யாழினிசை வேதத்தியல். 43

முன்னை வினையகல மூங்கிற் குடியமுதன்*
பொன்னங் கழற் கமலப்போதிரண்டும்* என்னுடைய
சென்னிக் கணியாகச்சேர்த்தினேன்* தென்புலத்தார்க்கு
என்னுக் கடவுடையேன் யான். 44

நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதின்றி நண்ணினர்பால்*
சயந்தரு கீர்த்தியிராமானுசமுனி தாளிணைமேல்*
உயர்ந்த குணத்துத் திருவரங்கத் தமுது ஓங்கும்* அன்பால்
இயம்பும் கலித்துறை யந்தாதி யோதவிசை நெஞ்சமே. 45

சொல்லின் தொகை கொண்டு உனதடிப்போதுக்குத் தொண்டுசெய்யும்
நல்லன்பரேத்தும் உன் நாமமெல்லாம் என்தன்நாவினுள்ளே*
அல்லும் பகலும் அமரும்படிநல்கு* அறுசமயம்
வெல்லும்பரம!* இராமானுச! இது என் விண்ணப்பமே. 46

நாலாயிரத்தனியன்கள் முற்றும்

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

ஸ்ரீ மணவாளமாமுனிகள் - திருப்பதி

Koviloor Digital Library

Koviloor Digital Library

மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

உபதேசரத்தினமாலை

தனியன்

(கோயில்கந்தாடை அண்ணன் அருளிச்செய்தது)

முன்னம் திருவாய்மொழிப்பிள்ளைதாம் உபதேசித்த* நேர்
தன்னின் படியைத் தணவாத சொல் மணவாளமுனி*
தன் அன்புடன்செய் உபதேசரத்தினமாலைதன்னை*
தன்நெஞ்சுதன்னில் தரிப்பவர் தாள்கள் சரண் நமக்கே

**எந்தை திருவாய்மொழிப்பிள்ளை இன்னருளால்*
வந்த உபதேச மார்க்கத்தைச் – சிந்தை செய்து*
பின்னவரும் கற்க உபதேசமாய்ப் பேசுகின்றேன்*
மன்னியசீர்வெண்பாவில் வைத்து. 1

கற்றோர்கள் தாம் உகப்பர், கல்வி தன்னில் ஆசை உள்ளோர்*
பெற்றோம் என உகந்து பின்பு கற்பர்* மற்றோர்கள்
மாச்சரியத்தால் இகழில் வந்தது என் நெஞ்சே!* இகழ்கை
ஆச்சரியமோதான் அவர்க்கு. 2

** ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வு ஆதுமில்குரவர் தாம் வாழி* ஏழ் பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம் வாழி*
செய்ய மறை தன்னுடனே சேர்ந்து. 3

பொய்கையார் பூதத்தார் பேயார்* புகழ்மழிசை
அய்யன் அருள் மாறன் சேரலர் கோன்* துய்யபட்ட
நாதன் அன்பர்தாள்தூளி நற்பாணன் நன்கலியன்*
ஈது இவர் தோற்றத்து அடைவாம் இங்கு. 4

அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்து உரைத்த ஆழ்வார்கள்*
இந்த உலகில் இருள் நீங்க* வந்து உதித்த

Koviloor Digital Library

மாதங்கள் நாள்கள் தம்மை மண்ணுலகோர்தாம் அறிய*
ஈது என்று சொல்லுவோம் யாம். 5

** ஐப்பசியில் ஓணம் அவிட்டம் சதயம் இவை
ஒப்பிலவா நாள்கள் உலகத்தீர்* எப்புவியும்
பேசு புகழ்ப் பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார்*
தேசுடனே தோன்று சிறப்பால். 6

மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்து உதித்து*
நல் தமிழால் நூல் செய்து நாட்டை உய்த்த* பெற்றிமையோர்
என்று முதலாழ்வார்கள் என்னும் பெயரிவர்க்கு
நின்றது உலகத்தே நிகழ்ந்து. 7

பேதை நெஞ்சே இன்றைப் பெருமை அறிந்திலையோ ?*
ஏது பெருமை இன்றைக்கு என்று என்னில்* ஓதுகின்றேன்
வாய்த்த புகழ் மங்கையர்கோன் மாநிலத்தில் வந்து உதித்த*
கார்த்திகையில் கார்த்திகைநாள் காண். 8

**மாறன் பணித்த தமிழ்மறைக்கு* மங்கையர்கோன்
ஆறங்கம் கூற அவதரித்த* வீறுடைய
கார்த்திகையில் கார்த்திகைநாள் இன்று என்று காதலிப்பார்*
வாய்த்த மலர்த் தாள்கள் நெஞ்சே வாழ்த்து. 9

கார்த்திகையில் உரோகிணிநாள் காண்மின் இன்று காசினியீர்*
வாய்த்த புகழ்ப்பாணர் வந்துதிப்பால்* ஆத்தியர்கள்
அன்புடனேதான் அமலனாதிபிரான் கற்றதற்பின்*
நன்குடனே கொண்டாடும்நாள். 10

மன்னியசீர் மார்கழியில் கேட்டை இன்று மாநிலத்தீர்!*
என் இதனுக்கு ஏற்றம் எனில் உரைக்கேன்* துன்னு புகழ்
மாமறையோன் தொண்டரடிப்பொடியாழ்வார் பிறப்பால்*
நான்மறையோர் கொண்டாடும் நாள். 11

Koviloor Digital Library

தையில் மகம் இன்று தாரணியீர்* ஏற்றம் இந்தத்
தையில் மகத்துக்குச் சாற்றுகின்றேன்* துய்ய மதி
பெற்ற மழிசைப்பிரான் பிறந்த நாள் என்று*
நல்தவர்கள் கொண்டாடும் நாள். 12

மாசிப்புனர்பூசம் காண்மின் இன்று மண்ணுலகீர்*
தேசு இத்திவசத்துக்கு ஏது என்னில்* பேசுகின்றேன்
கொல்லி நகர்க் கோன் குலசேகரன் பிறப்பால்*
நல்லவர்கள் கொண்டாடும் நாள். 13

** ஏரார் வைகாசி விசாகத்தின் ஏற்றத்தை*
பாரோர் அறியப் பகர்கின்றேன்* சீராரும்
வேதம் தமிழ் செய்த மெய்யன் * எழில் குருகை
நாதன் அவதரித்த நாள். 14

**உண்டோ வைகாசி விசாகத்துக்கு ஒப்பு ஒரு நாள்*
உண்டோ சடகோபர்க்கு ஒப்பு ஒருவர்?* உண்டோ
திருவாய்மொழிக்கு ஒப்பு? தென்குருகைக்கு உண்டோ*
ஒருபார் தனில் ஒக்கும் ஊர்?. 15

இன்றைப் பெருமை அறிந்திலையோ ஏழை நெஞ்சே*
இன்றைக்கு என் ஏற்றம் எனில் உரைக்கேன்* நன்றி புனை
பல்லாண்டு பாடிய நம் பட்டர்பிரான் வந்து உதித்த*
நல் ஆனியில் சோதி நாள். 16

மாநிலத்தில் முன் நம் பெரியாழ்வார் வந்து உதித்த*
ஆனி தன்னில் சோதி என்றால் ஆதரிக்கும்* ஞானியர்க்கு
ஒப்போர் இல்லை இவ்வுலகுதனில் என்று நெஞ்சே*
எப்போதும் சிந்தித்து இரு. 17

மங்களாசாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்*
தங்கள், ஆர்வத்து அளவுதான் அன்றி – பொங்கும்

Koviloor Digital Library

பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்*
பெரியாழ்வார் என்னும் பெயர் 18

கோதிலவாம் ஆழ்வார்கள் கூறு கலைக்கெல்லாம்*
ஆதி திருப்பல்லாண்டானதுவும்* வேதத்துக்கு
ஓம் என்னுமதுபோல் உள்ளதுக்கு எல்லாம் சுருக்காய்*
தான் மங்கலம் ஆதலால் 19

**உண்டோ திருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர் கலைதான் ?*
உண்டோ பெரியாழ்வார்க்கு ஒப்பு ஒருவர் ?* தண் தமிழ் நூல்
செய்து அருளும் ஆழ்வார்கள்தம்மில் அவர் செய் கலையில்*
பைதல் நெஞ்சே நீ உணர்ந்து பார் 20

ஆழ்வார் திருமகளார் ஆண்டாள்* மதுரகவி
ஆழ்வார் எதிராசராம் இவர்கள்* வாழ்வாக
வந்துதித்த மாதங்கள் நாள்கள்தம்மின் வாசியையும்*
இந்த உலகோர்க்கு உரைப்போம் யாம் 21

**இன்றோ திருவாடிப்பூரம்* எமக்காக
அன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தாள்* குன்றாத
வாழ்வான வைகுந்த வான் போகம் தன்னை இகழ்ந்து*
ஆழ்வார் திருமகளாராய் 22

பெரியாழ்வார் பெண்பிள்ளையாய்* ஆண்டாள் பிறந்த
திருவாடிப்பூரத்தின் சீர்மை* ஒரு நாளைக்கு
உண்டோ மனமே உணர்ந்து பார்* ஆண்டாளுக்கு
உண்டாகில் ஒப்பு இதற்கும் உண்டு 23

அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததியாய்* ஆழ்வார்கள்
தம், செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய்* பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் பத்தியுடன் நாளும்*
வழுத்தாய் மனமே மகிழ்ந்து 24

Koviloor Digital Library

**ஏரார் மதுரகவி இவ்வுலகில் வந்து உதித்த*
சீராரும் சித்திரையில் சித்திரைநாள்* பாருலகில்
மற்றுள்ள ஆழ்வார்கள் வந்துதித்த நாள்களிலும்*
உற்றது எமக்கு என்று நெஞ்சே ஓர். 25

**வாய்த்த திருமந்திரத்தின் மத்திமமாம் பதம் போல்*
சீர்த்த மதுரகவி செய் கலையை* ஆர்த்த புகழ்
ஆரியர்கள் தாங்கள் அருளிச் செயல் நடுவே*
சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து. 26

**இன்று உலகீர்! சித்திரையில் ஏய்ந்த திருவாதிரை நாள்*
என்றையினும் இன்று இதனுக்கு ஏற்றம் என்தான் ?* என்றவர்க்குச்
சாற்றுகின்றேன் கேண்மின் எதிராசர்தம் பிறப்பால்*
நால் திசையும் கொண்டாடும் நாள். 27

** ஆழ்வார்கள்தாங்கள் அவதரித்த நாள்களிலும்*
வாழ்வான நாள் நமக்கு மண்ணுலகீர்! – ஏழ்பாரும்
உய்ய எதிராசர் உதித்து அருளும்* சித்திரையில்
செய்ய திருவாதிரை. 28

**எந்தை எதிராசர் இவ்வுலகில் எந்தமக்கா
வந்துதித்த நாள் என்னும் வாசியினால்* இந்தத்
திருவாதிரைதன்னின் சீர்மைதனை நெஞ்சே!*
ஒருவாமல் எப்பொழுதும் ஓர். 29

எண்ணரும்சீர்ப் பொய்கை முன்னோர் இவ்வுலகில் தோன்றிய ஊர்*
வண்மைமிகு கச்சி மல்லை மாமயிலை * மண்ணியில் நீர்
தேங்கும் குறையலூர் சீர்க்கலியன் தோன்றிய ஊர்*
ஒங்கும் உறையூர் பாணன் ஊர். 30

தொண்டரடிப்பொடியார் தோன்றிய ஊர்* தொல்புகழ்சேர்
மண்டங்குடி என்பர் மண்ணுலகில்* எண் திசையும்

Koviloor Digital Library

ஏத்தும் குலசேகரன் ஊர் என உரைப்பர்*
வாய்த்த திருவஞ்சிக்களம். 31

மன்னு திருமழிசை மாடத் திருக்குருகூர்*
மின்னு புகழ் வில்லிபுத்தூர் மேதினியில்* நன்னெறியோர்
ஏய்ந்த பத்திசாரர் எழில்மாறன் பட்டர்பிரான்*
வாய்ந்து உதித்த ஊர்கள் வகை. 32

சீராரும் வில்லிபுத்தூர் செல்வத் திருக்கோளூர்*
ஏரார் பெரும்பூதூர் என்னும் இவை* – பாரில்
மதியாரும் ஆண்டாள் மதுரகவியாழ்வார்*
எதிராசர் தோன்றிய ஊர் இங்கு. 33

ஆழ்வார்கள் ஏற்றம் அருளிச் செயல் ஏற்றம்*
தாழ்வு ஆதுமின்றி அவைதாம் வளர்த்தோர்* ஏழ்பாரும்
உய்ய அவர்கள் செய்த வியாக்கியைகள் உள்ளதெல்லாம்*
வையம் அறியப் பகர்வோம் வாய்ந்து. 34

ஆழ்வார்களையும் அருளிச்செயல்களையும்*
தாழ்வா நினைப்பவர்கள்தாம்* நரகில் – வீழ்வார்கள்
என்று நினைத்து நெஞ்சே! எப்பொழுதும் நீ அவர்பால்*
சென்று அணுகக் கூசித் திரி. 35

தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மை அறிவார் ஆர்?*
அருளிச்செயலை அறிவார் ஆர்?* அருள் பெற்ற
நாதமுனி முதலான நம் தேசிகரை அல்லால்*
பேதை மனமே! உண்டோ பேசு. 36

ஓர் ஆண் வழியாய் உபதேசித்தார் முன்னோர்*
ஏரார் எதிராசர் இன்னருளால்* பாருலகில்
ஆசை உடையோர்க்கு எல்லாம் ஆரியர்காள் கூறும் என்று*
பேசி வரம்பு அறுத்தார் பின். 37

Koviloor Digital Library

**எம்பெருமானார் தரிசனம் என்றே இதற்கு*
நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார்* அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த*
அந்தச் செயல் அறிகைக்கா. 38

பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான் பிள்ளை*
தெள்ளார் வடக்குத் திருவீதிப் பிள்ளை*
மணவாளயோகி, திருவாய்மொழியைக் காத்த*
குணவாளர் என்று நெஞ்சே கூறு. 39

முந்துறவே, பிள்ளான் முதலானோர் செய்து அருளும்*
அந்த வியாக்கியைகள் அன்றாகில்* அந்தோ!
திருவாய்மொழிப் பொருளைத் தேர்ந்துரைக்க வல்ல
குரு ஆர்* இக்காலம் நெஞ்சே! கூறு. 40

தெள்ளாரும் ஞானத் திருக்குருகைப்பிரான்
பிள்ளான்* எதிராசர் பேரருளால் * உள்ளாரும்
அன்புடனே மாறன் மறைப்பொருளை அன்று உரைத்தது*
இன்பமிகும் ஆறாயிரம். 41

தம்சீரை ஞானியர்கள்தாம் புகழும் வேதாந்தி*
நஞ்சீயர்தாம் பட்டர் நல்லருளால்* எஞ்சாத
ஆர்வமுடன் மாறன் மறைப்பொருளை ஆய்ந்து உரைத்தது*
ஏர் ஒன்பதினாயிரம். 42

நம்பிள்ளை தம்முடைய நல்அருளால் ஏவியிட*
பின் பெரியவாச்சான்பிள்ளை அதனால்* இன்பா
வருபத்தி மாறன் மறைப்பொருளைச் சொன்னது*
இருபத்து நாலாயிரம். 43

**தெள்ளியதா நம்பிள்ளைசெப்பு நெறிதன்னை*
வள்ளல் வடக்குத் திருவீதிப்பிள்ளை* இந்த

Koviloor Digital Library

நாடு அறிய மாறன் மறைப்பொருளை நன்கு உரைத்தது*
ஈடு முப்பத்து ஆறாயிரம். 44

அன்போடு அழகிய மணவாளச்சீயர்*
பின்போரும் கற்றறிந்து பேசுகைக்கா* தம் பெரிய
போதமுடன் மாறன் மறையின் பொருள் உரைத்தது*
ஏதம் இல் பன்னீராயிரம். 45

பெரியவாச்சான்பிள்ளை பின்பு உள்ளவைக்கும்
தெரிய* வியாக்கியைகள் செய்வால்* அரிய
அருளிச் செயல் பொருளை ஆரியர்கட்கு இப்போது*
அருளிச் செயல் ஆய்த்து அறிந்து. 46

நஞ்சீயர் செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு*
எஞ்சாமை யாவைக்கும் இல்லையே* தம் சீரால்
வையகுருவின் தம்பி மன்னு மணவாளமுனி*
செய்யுமவை தாமும் சில. 47

சீரார் வடக்குத் திருவீதிப்பிள்ளை* எழுது
ஏரார் தமிழ்வேதத்து ஈடுதனை* தாரும் என
வாங்கி முன் நம்பிள்ளை ஈயுண்ணிமாதவர்க்குத்
தாம் கொடுத்தார்* பின் அதனைத் தான். 48

ஆங்கு அவர் பால் பெற்ற சிறியாழ்வான் அப்பிள்ளை
தாம்கொடுத்தார் தம்மகனார் தம்கையில்* பாங்குடனே
நாலூர்பிள்ளைக்கு அவர்தாம் நல்ல மகனார்க்கு அவர்தாம்*
மேலோர்க்கு ஈந்தார் அவரே மிக்கு. 49

** நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
என்பர்* அவரவர்தம் ஏற்றத்தால் – அன்பு உடையோர்
சாத்து திருநாமங்கள் தான் என்று நன்னெஞ்சே!*
ஏத்து அதனைச் சொல்லி நீ இன்று. 50

Koviloor Digital Library

துன்னு புகழ்க் கந்தாடைத்தோழப்பர் தம் உகப்பால்*
என்ன உலகாரியனோ என்று உரைக்க – பின்னை*
உலகாரியன் என்னும் பேர் நம்பிள்ளைக்கு ஓங்கி*
விலகாமல் நின்றது என்றும் மேல். 51

பின்னை வடக்குத்திருவீதிப்பிள்ளை* அன்பால்
அன்ன திருநாமத்தை ஆதரித்து* மன்னுபுகழ்
மைந்தர்க்குச் சாத்துகையால் வந்து பரந்தது* எங்கும்
இந்தத் திருநாமம் இங்கு. 52

**அன்னபுகழ் முடும்பை அண்ணல் உலகாசிரியன்*
இன் அருளால் செய்த கலை யாவையிலும்* உன்னில்
திகழ் வசனபூடணத்தின் சீர்மை ஒன்றுக்கு இல்லை*
புகழ் அல்ல இவ்வார்த்தை மெய் இப்போது. 53

முன்னம் குரவோர் மொழிந்த வசனங்கள்
தன்னை* மிகக்கொண்டு கற்றோர் தம் உயிர்க்கு* மின் அணியாச்
சேரச் சமைத்தவரே சீர்வசனபூடணம் என்னும்
பேர்* இக்கலைக்கு இட்டார் பின். 54

ஆர் வசனபூடணத்தின் ஆழ்பொருள் எல்லாம் அறிவார்!*
ஆர் அது சொல் நேரில் அனுட்டிப்பார்? ஒரொருவர்
உண்டாகில் அத்தனை காண் உள்ளமே!*
எல்லார்க்கும் அண்டாதது அன்றோ அது. 55

உய்ய நினைவு உடையீர் உங்களுக்குச் சொல்லுகின்றேன்*
வைய குரு முன்னம் வாய் மொழிந்த* செய்ய கலை
யாம் வசனபூடணத்தின் ஆழ் பொருளைக் கற்று* அதனுக்கு
ஆம் நிலையில் நில்லும்அறிந்து. 56

தேசிகர் பால் கேட்ட செழும் பொருளை* சிந்தை தன்னில்
மாசறவே ஊன்ற மனனம் செய்து* ஆசரிக்க

Koviloor Digital Library

வல்லார்கள் தாம் வசன பூடணத்தின் வான் பொருளைக்*
கல்லாதது என்னோ கவர்ந்து. 57

சச்சம்பிரதாயம் தாம் உடையோர் கேட்டக்கால்*
மெச்சும் வியாக்கியைகள் உண்டாகில்* நச்சி
அதிகரியும் நீர் வசனபூடணத்துக்கு அற்ற
மதியுடையீர்* மத்தியத்தராய். 58

சீர் வசனபூடணத்தின் செம்பொருளை* சிந்தை தன்னால்
தேறிலுமாம் வாய் கொண்டு செப்பிலுமாம்* ஆரியர்காள்!
என் தனக்கு நாளும் இனிதாக நின்றது ஐயோ!*
உந்தமக்கு எவ்வின்பம் உளதாம்?. 59

தன்குருவின்தாளிணைகள் தன்னில் அன்பு ஒன்று இல்லாதார்*
அன்பு தன்பால் செய்தாலும் அம்புயைகோன்* இன்பமிகு
விண்ணாடு தான் அளிக்க வேண்டியிரான்* ஆதலால்
நண்ணார் அவர்கள் திருநாடு. 60

**ஞானம் அனுட்டானம் இவை நன்றாகவே உடையன்
ஆன* குருவை அடைந்தக்கால்* மாநிலத்தீர்
தேனார் கமலத் திருமாமகள் கொழுநன்*
தானே வைகுந்தம் தரும். 61

உய்ய நினைவு உண்டாகில் உம் குருக்கள் தம் பதத்தே
வையும்* அன்பு தன்னை இந்த மாநிலத்தீர்* மெய் உரைக்கேன்
பையரவில் மாயன் பரமபதம் உங்களுக்காம்*
கையிலங்கு நெல்லிக்கனி. 62

ஆசாரியன் செய்த உபகாரமானவது*
தூய்தாக நெஞ்சு தன்னில் தோன்றுமேல்* தேசாந்
தரத்தில் இருக்க மனம்தான் பொருந்த மாட்டாது*
இருத்தல் இனி ஏதறியோம் யாம். 63

Koviloor Digital Library

தன்ஆரியனுக்குத் தான் அடிமை செய்வது* அவன்
இந்நாடு தன்னில் இருக்கும் நாள்* அந்நேர்
அறிந்தும் அதில் ஆசையின்றி ஆசாரியனைப்
பிரிந்து இருப்பார் ஆர்* மனமே பேசு. 64

ஆசாரியன் சிச்சன் ஆருயிரைப் பேணுமவன்*
தேசாரும் சிச்சன் அவன் சீர்வடிவை* ஆசையுடன்
நோக்குமவன் என்னும் நுண்ணறிவைக் கேட்டு வைத்தும்*
ஆர்க்கும் அந்நேர் நிற்கை அரிதாம். 65

பின்பழகராம்பெருமாள் சீயர்* பெரும் திவத்தில்
அன்பு அதுவும் அற்று மிக்க ஆசையினால்* நம்பிள்ளைக்கு
ஆன அடிமைகள் செய் அந் நிலையை நன்னெஞ்சே*
ஊனமற எப்பொழுதும் ஓர். 66

ஆசாரியர்கள் அனைவரும் முன் ஆசரித்த*
ஆசாரம் தன்னை அறியாதார்* பேசுகின்ற
வார்த்தைகளைக் கேட்டு மருளாதே* பூருவர்கள்
சீர்த்தநிலை தன்னை நெஞ்சே சேர். 67

நாத்திகரும் நற்கலையின் நன்னெறி சேர் ஆத்திகரும்*
ஆத்திக நாத்திகருமாம் இவரை* ஓர்த்து நெஞ்சே!
முன்னவரும் பின்னவரும் மூர்க்கர் என விட்டு* நடுச்
சொன்னவரை நாளும் தொடர். 68

நல்ல மணம் உள்ளது ஒன்றை நண்ணி இருப்பதற்கு*
நல்ல மணம் உண்டாம் நயம் அதுபோல்* நல்ல
குணம் உடையோர்தங்களுடன் கூடி இருப்பார்க்கு*
குணம் அதுவேயாம் சேர்த்தி கொண்டு. 69

தீயகந்தம் உள்ளது ஒன்றைச் சேர்ந்திருப்பது ஒன்றுக்கு*
தீயகந்தம் ஏறும் திறம் அதுபோல்* தீய

Koviloor Digital Library

குணம் உடையோர்தங்களுடன் கூடி இருப்பார்க்கு*
குணம் அதுவேயாம் செறிவு கொண்டு. 70

**முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு*
பின் ஓர்ந்து தாம் அதனைப் பேசாதே* தம் நெஞ்சில்
தோற்றினதே சொல்லி இது சுத்த உபதேச வர
வாற்றது என்பர்* மூர்க்கர் ஆவார். 71

சாற்றுப் பாசுரங்கள்

**பூருவாசாரியர்கள் போதம் அனுட்டானங்கள்*
கூறுவார் வார்த்தைகளைக் கொண்டு நீர் – தேறி*
இருள்தரு மாஞாலத்தே இன்பம் உற்று வாழும்*
தெருள்தரு மாதேசிகனைச் சேர்ந்து. 72

** இந்த உபதேசரத்தினமாலைதன்னை*
சிந்தை தன்னில் நாளும் சிந்திப்பார்* எந்தை
எதிராசர் இன்னருளுக்கு என்றும் இலக்காகி*
சதிராக வாழ்ந்திடுவர் தாம். 73

(எறும்பியப்பா அருளிச்செய்தது)

மன்னுயிர்காள் இங்கே மணவாளமாமுனிவன்*
பொன்னடியாம் செங்கமலப் போதுகளை* உன்னிச்
சிரத்தாலே தீண்டில்அமானவனும் நம்மைக்*
கரத்தாலே தீண்டல் கடன். 74

அடிவரவு : எந்தை கற்றோர் ஆழ்வார் பொய்கை அந்தமிழ் ஐப்பசியில் மற்றுள்ள பேதை மாறன் கார்த்திகை மன்னிய தை மாசி ஏரார் உண்டோ இன்றை மாநில மங்கள கோதில உண்டோ ஆழ்வார் இன்றோ பெரியாழ்வார் அஞ்சுகுடி ஏரார் வாய்த்த இன்று ஆழ்வார் எந்தை எண்ணரும் தொண்டர் மன்னு சீராரும் ஆழ்வார்களேற்றம் ஆழ்வார்களையும் தெருளுற்ற ஓராண் எம்பெருமானார் பிள்ளான் முந்துறவே தெள்ளாரும் தஞ்சீரை நம்பிள்ளை தெள்ளியதா அன்போடு பெரியவாச்சான்பிள்ளை நஞ்சீயர் சீரார் ஆங்கவர் நம்பெருமாள் துன்னுபுகழ் பின்னை அன்னபுகழ் முன்னம் ஆர்வசன உய்ய நினைவு

Koviloor Digital Library

தேசிகர்பால் சச்சம் சீர்வசன தன்குருவின் ஞானம் உய்யநினைவுண்டாகில் ஆசாரியன் தன்னாரியன் ஆசாரியன்சிச்சன் பின்பழகராம் ஆசாரியர்கள் நாத்திகரும் நல்லமணம் தீயகந்தம் முன்னோர் பூருவாசரியர்கள் இந்தவுபதேச மன்னுயிர்காள்

உபதேசரத்தினமாலை முற்றும்

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

திருவாய்மொழி நூற்றந்தாதி

தனியன்கள்

அல்லும்பகலும் அனுபவிப்பார்தங்களுக்குச்*
சொல்லும்பொருளும் தொகுத்துரைத்தான்* நல்ல
மணவாளமாமுனிவன் மாறன் மறைக்குத்
தணவா நூற்றந்தாதிதான்

மன்னுபுகழ்சேர் மணவாளமாமுனிவன்*
தன்னருளால் உட்பொருள்கள்தம்முடனே சொன்ன*
திருவாய்மொழி நூற்றந்தாதியாம்தேனை*
ஒருவாதருந்து நெஞ்சேயுற்று

**உயர்வே பரன்படியை உள்ளதெல்லாம் தான்கண்டு*
உயர்வேதம் நேர்கொண்டுரைத்து* மயர்வேதும்
வாராமல் மானிடரை வாழ்விக்கும் மாறன்சொல்*
வேராகவே விளையும் வீடு 1

**வீடுசெய்து மற்றெவையும் மிக்கபுகழ்நாரணன்தாள்*
நாடுநலத்தாலடைய நன்குரைக்கும்* நீடுபுகழ்
வண்குருகூர் மாறன் இந்த மாநிலத்தோர்தாம் வாழ
பண்புடனே பாடியருள் பத்து. 2

Koviloor Digital Library

பத்துடையோர்க்கு என்றும் பரனெளியனாம், பிறப்பால்*
முத்திதரும்மாநிலத்தீர்! மூண்ட அன்பால்* பத்திசெய்யும்
என்றுரைத்த மாறன் தன் இன்சொல்லால்போம்* நெடுகச்
சென்றபிறப்பாமஞ்சிறை. 3

அஞ்சிறையபுட்கள்தமை ஆழியானுக்கு* நீர்
என்செயலைச் சொல்லுமென இரந்து – விஞ்ச
நலங்கியதும் மாறனிங்கே நாயகனைத்தேடி*
மலங்கியதும் பத்திவளம். 4

வளம் மிக்கமால் பெருமை மன்னுயிரின் தண்மை*
உளமுற்றங்கூடுருவவோர்ந்து* தளர்வுற்று
நீங்கநினை மாறனை மால் நீடிலகுசீலத்தால்*
பாங்குடனே சேர்த்தான் பரிந்து. 5

பரிவதிலீசன்படியைப் பண்புடனே பேசி*
அரியனலன் ஆராதனைக்கென்று* உரிமையுடன்
ஓதியருள்மாறன் ஒழிவித்தான் இவ்வுலகில்*
பேதையர்கள் தங்கள் பிறப்பு. 6

பிறவியற்று நீள்விசும்பில் பேரின்பமுய்க்கும்*
திறம் அளிக்கும் சீலத்திருமால்* அறவினியன்
பற்றுமவர்க்குஎன்று பகர்மாறன் பாதமே*
உற்றதுணையென்று உள்ளமே ஒடு. 7

ஒடுமனம் செய்கையுரை யொன்றிநில்லாதாருடனே*
கூடிநெடுமால் அடிமைகொள்ளும்நிலை* நாடறிய
ஓர்ந்து அவன்தன்செம்மை உரைசெய்தமாறனென*
ஏய்ந்துநிற்கும் வாழ்வாமிவை. 8

Koviloor Digital Library

இவையறிந்தோர்தம்மளவில் ஈசனுவந்தாற்ற*
அவயங்கள்தோறு மணையும் சுவையதனைப்
பெற்று* ஆர்வத்தால் மாறன் பேசினசொல்பேச* மால்
பொற்றாள் நம் சென்னி பொரும். 9

பொருமாழிசங்குடையோன் பூதலத்தேவந்து*
தருமாறோரேதுவறத்தன்னை* திரமாகப்
பார்த்து உரைசெய்மாறன் பதம்பணிக என்சென்னி*
வாழ்த்திடுக என்னுடைய வாய். 10

வாயும் திருமால் மறையநிற்க* ஆற்றாமை
போய்விஞ்சி மிக்கபுலம் புதலாய்* ஆய
அறியாதவற்றோடு அணைந்தழுதமாறன்*
செறிவாரைநோக்கும் திணிந்து. 11

திண்ணிதா மாறன் திருமால்பரத்துவத்தை*
நண்ணிஅவதாரத்தே நன்குரைத்த* வண்ணமறிந்து
அற்றார்கள்யாவர் அவரடிக்கேஆங்கவர்பால்*
உற்றாரை மேலிடாதூன். 12

ஊனமறவேவந்து உள்கலந்த மால் இனிமை
யானது* அனுபவித்தற் காம்துணையா* வானில்
அடியார்குழாம் கூட ஆசையுற்றமாறன்*
அடியாருடன் நெஞ்சே ஆடு. 13

ஆடிமகிழ்வானில் அடியார் குழாங்களுடன்*
கூடிஇன்பமெய்தாக் குறையதனால்* வாடிமிக
அன்புற்றார்தம் நிலைமை ஆய்ந்துரைக்கமோகித்துத்*
துன்புற்றான் மாறனந்தோ. 14

அந்தாமத்தன்பால் அடியார்களோடு இறைவன்*
வந்தாரத் தான்கலந்த வண்மையினால்– சந்தாபம்

Koviloor Digital Library

தீர்ந்தசடகோபன் திருவடிக்கே நெஞ்சமே*
வாய்ந்த அன்பை நாள்தோறும் வை. 15

வைகுந்தன்வந்து கலந்ததற்பின் வாழ்மாறன்*
செய்கின்ற நைச்சியத்தைச்சிந்தித்து* நைகின்ற
தன்மைதனைக் கண்டு உன்னைத்தான் விடேனென்றுரைக்க*
வன்மையடைந்தான் கேசவன். 16

கேசவனால்எந்தமர்கள் கீழ்மேலெழுபிறப்பும்*
தேசடைந்தாரென்று சிறந்துரைத்த* வீசுபுகழ்
மாறன்மலரடியே மன்னுயிர்க்கெல்லாம் உய்கைக்கு*
ஆறென்று நெஞ்சே அணை. 17

அணைந்தவர்கள் தம்முடனே ஆயனருட்காளாம்*
குணந்தனையே கொண்டு உலகைக்கூட்ட* இணங்கிமிக
மாசிலுபதேசம்செய் மாறன்மலரடியே*
வீசுபுகழ் எம்மாவீடு. 18

எம்மாவீடும் வேண்டா என்தனக்கு உன் தாளிணையே
அம்மா அமையுமென ஆய்ந்துரைத்த* நம்முடைய
வாழ்முதலாம்மாறன் மலர்த்தாளிணைசூடிக்*
கீழ்மையற்று நெஞ்சே கிளர். 19

**கிளரொளிசேர்கீழுரைத்த பேறுகிடைக்க*
வளரொளிமால் சோலைமலைக்கே* தளர்வறவே
நெஞ்சைவைத்துச் சேருமெனும் நீடுபுகழ்மாறன்தாள்*
முன், செலுத்துவோம் எம்முடி. 20

முடியார் திருமலையில் மூண்டுநின்றமாறன்*
அடிவாரந்தன்னில் அழகர் வடிவழகைப்
பற்றி* முடியும் அடியும் படிகலனும்*
முற்றும் அனுபவித்தான்முன். 21

Koviloor Digital Library

முன்னமழகரெழில்மூழ்கும் குருகையர்கோன்*
இன்னவளவென்ன எனக்கரிதாய்த்து என்ன*
கரணக்குறையின் கலக்கத்தை* கண்ணன்
ஒருமைப்படுத்தான் ஒழித்து. 22

**ஒழிவிலாக்காலம் உடனாகிமன்னி*
வழுவிலா ஆட்செய்ய மாலுக்கு* எழுசிகர
வேங்கடத்துப்பாரித்த மிக்கநலம்சேர்மாறன்*
பூங்கழலை நெஞ்சே புகழ். 23

புகழொன்றுமால் எப்பொருள்களும் தானாய்*
நிகழ்கின்ற நேர்காட்டிநிற்க* மகிழ்மாறன்
எங்கும் அடிமைசெய்ய இச்சித்து வாசிகமாய்*
அங்கடிமைசெய்தான் மொய்ம்பால். 24

மொய்ம்பாரும்மாலுக்கு முன்னடிமைசெய்து உவப்பால்*
அன்பாலாட்செய்பவரை ஆதரித்தும்* அன்பிலா
மூடரைநிந்தித்தும் மொழிந்தருளும் மாறன்பால்*
தேடரியபத்தி நெஞ்சே செய். 25

செய்யபரத்துவமாய்ச் சீரார்வியூகமாய்*
துய்யவிபவமாய்த் தோன்றிவற்றுள்* எய்துமவர்க்கு
இந்நிலத்தில் அர்ச்சாவதாரமெளிதென்றான்*
பன்னுதமிழ்மாறன் பயின்று. 26

பயிலும் திருமால்பதந்தன்னில்* நெஞ்சம்
தயலுண்டுநிற்கும் ததியர்க்கு* இயல்வுடனே
ஆளானார்க்கு ஆளாகும் மாறனடியதனில்*
ஆளாகார் சன்மம் முடியா. 27

முடியாதவாசைமிக முற்றுகரணங்கள்*
அடியார்தம்மைவிட்டு அவன்பால்படியா* ஒன்

Koviloor Digital Library

றொன்றின் செயல்விரும்ப உள்ளதெல்லாம் தாம் விரும்ப*
துன்னியதே மாறன்தன்சொல். 28

சொல் நாவில் வாழ்புலவீர் சோறுகூறைக்காக*
மன்னாதமானிடரை வாழ்த்துதலால் என்னாகும் ?*
என்னுடனே மாதவனை ஏத்துமெனும் குருகூர்*
மன்னருளால் மாறும் சன்மம். 29

சன்மம்பலசெய்து தான் இவ்வுலகளிக்கும்*
நன்மையுடைய மால்குணத்தை நாள்தோறும்* இம்மையிலே
ஏத்துமின்பம் பெற்றேனெனும் மாறனை உலகீர்!*
நாத்தழும்ப ஏத்தும்ஒருநாள். 30

**ஒருநாயகமாய் உலகுக்கு* வானோர்
இருநாட்டில் ஏறியுய்க்கும் இன்பம் திரமாகா*
மன்னுயிர்ப்போகம் தீது மாலடிமையே இனிதாம்*
பன்னியிவை மாறனுரைப்பால். 31

பாலரைப்போல் சீழ்கிப் பரனளவில் வேட்கையால்*
காலத்தால்தேசத்தால் கைகழிந்து* சால
அரிதானபோகத்தில் ஆசையுற்று நைந்தான்*
குருகூரில் வந்துதித்த கோ. 32

கோவானவீசன் குறையெல்லாம் தீரவே*
ஓவாதகாலத்து உவாதிதனை* மேவிக்
கழித்தடையக்காட்டிக் கலந்தகுணம் மாறன்*
வழுத்துதலால் வாழ்ந்தது இந்த மண். 33

மண்ணுலகில் முன்கலந்து மால் பிரிகையால்* மாறன்
பெண்ணிலைமையாய்க் காதல்பித்தேறி* எண்ணிடில் முன்
போலிமுதலான பொருளை அவனாய் நினைந்து*
மேல்விழுந்தான் மையல்தனின் வீறு. 34

Koviloor Digital Library

வீற்றிருக்கும்மால்விண்ணில் மிக்கமயல்தன்னை*
ஆற்றுதற்காத் தன்பெருமையானதெல்லாம்* தோற்றவந்து
நன்றுகலக்கப் போற்றி நன்கு உகந்து வீறு உரைத்தான்
சென்றுதுயர் மாறன் தீர்ந்து 35

தீர்ப்பாரிலாதமயல் தீரக்கலந்தமால்*
ஓர்ப்பாதுமின்றி உடன்பிரிய* நேர்க்க
அறிவழிந்து உற்றாரும் அறக்கலங்கப்* பேர் கேட்டு
அறிவுபெற்றான் மாறன் சீலம் 36

சீலமிகுகண்ணன் திருநாமத்தாலுணர்ந்து*
மேல் அவன்தன் மேனிகண்டு மேவுதற்கு* சால
வருந்தி இரவும் பகலும் மாறாமல்கூப்பிட்டு*
இருந்தனனே தென்குருகூரேறு 37

ஏறுதிருவுடைய ஈசனுகப்புக்கு*
வேறுபடில் என்னுடைமை மிக்கவுயிர்* தேறுங்கால்
என்தனக்கும் வேண்டாவெனும் மாறன் தாளை நெஞ்சே!*
நந்தமக்குப் பேறாக நண்ணு 38

நண்ணாது மாலடியை நானிலத்தே வல்வினையால்*
எண்ணாராத்துன்பமுறும் இவ்வுயிர்கள்* தண்ணிமையைக்
கண்டிருக்கமாட்டாமல் கண்கலங்கும் மாறனருள்*
உண்டுநமக்கு உற்ற துணையொன்று 39

**ஒன்றுமிலைத்தேவு இவ்வுலகம் படைத்தமால்*
அன்றியென ஆருமறியவே* நன்றாக
மூதலித்துப் பேசியருள் மொய்ம்மகிழோன்தாள் தொழவே*
காதலிக்கும் என்னுடைய கை 40

கையாரும் சக்கரத்தோன் காதலின்றிக்கேயிருக்க*
பொய்யாகப்பேசும் புறனுரைக்கு* மெய்யான

Koviloor Digital Library

பேற்றையுபகரித்த பேருளின் தன்மைதனை*
போற்றினனே மாறன்பொலிந்து. 41

**பொலிகபொலிகவென்று பூமகள்கோன்தொண்டர்*
மலிவுதனைக் கண்டுகந்துவாழ்த்தி* உலகில்
திருந்தாதார்தம்மைத் திருத்திய மாறன்சொல்*
மருந்தாகப் போகும் மனமாசு. 42

மாசறுசோதிக் கண்ணன் வந்து கலவாமையால்*
ஆசைமிகுந்து பழிக்கஞ்சாமல்* ஏசறவே
மண்ணில்மடலூர மாறனொருமித்தான்*
உள்நடுங்கத் தான் பிறந்த ஊர். 43

ஊரநினைந்தமடல் ஊரவும் ஒண்ணாதபடி*
கூரிருள்சேர்கங்குல் உடன் கூடிநின்று* பேராமல்
தீதுசெய்ய மாறன் திருவுள்ளத்துச் சென்றதுயர்*
ஓதுவது இங்கு எங்ஙனேயோ?. 44

எங்ஙனே நீர் முனிவது என்னையினி? நம்பியழகு*
இங்ஙனே தோன்றுகின்றது என்முன்னே* அங்ஙன்
உருவெளிப்பாடா வுரைத்த தமிழ்மாறன்*
கருதுமவர்க்கு இன்பக்கடல். 45

கடல்ஞாலத்து ஈசனை முன்காணாமல்நொந்தே*
உடனா அனுகரிக்கலுற்று* திடமாக
வாய்ந்து அவனாய்த்தான் பேசும் மாறனுரையதனை*
ஆய்ந்துரைப்பார் ஆட்செய்ய நோற்றார். 46

நோற்றநோன்பாதியிலேன் நுன்தனைவிட்டாற்றகில்லேன்*
பேற்றுக்கு உபாயம் உன்தன் பேரருளே சாற்றுகின்றேன்*
இங்கென்னிலையென்னும் எழில்மாறன்சொல்வல்லார்*
அங்குஅமரர்க்கு ஆராவமுது. 47

Koviloor Digital Library

**ஆராவமுதாழ்வார் ஆதரித்த பேறுகளை*
தாராமையாலே தளர்ந்துமிக* தீராத
ஆசையுடன் ஆற்றாமைபேசி யலமந்தான்*
மாசறுசீர் மாறனெம்மான். 48

மாநலத்தால்மாறன் திருவல்லவாழ் புகப்போய்*
தானிளைத்து வீழ்ந்து அவ்வூர்தன் அருகில்* மேல்நலங்கித்
துன்பமுற்றுச்சொன்ன சொலவு கற்பார்தங்களுக்கு*
பின் பிறக்க வேண்டா பிற. 49

பிறந்து உலகம் காத்தளிக்கும் பேரருட்கண்ணா! உன்
சிறந்தகுணத்தாலுருகும் சீலத்திறம்தவிர்ந்து*
சேர்ந்தனுபவிக்கும் நிலை செய்யென்ற சீர்மாறன்*
வாய்ந்த பதத்தே மனமே வைகு. 50

வைகல் திருவண்வண்டூர் வைகுமிராமனுக்கு* என்
செய்கைதனைப் புள்ளினங்காள்! செப்புமென* கைகழிந்த
காதலுடன் தூதுவிடும் காரிமாறன்கழலே*
மேதினியீர்! நீர் வணங்குமின். 51

மின்னிடையார் சேர் கண்ணன் மெத்தென வந்தானென்று*
தன்னிலைபோய்ப்பெண்ணிலையாய்த்தான்தள்ளி* உன்னுடனே
கூடேனென்றூடும் குருகையர்கோன்தாள் தொழவே*
நாள்தோறும் நெஞ்சமே! நல்கு. 52

நல்லவலத்தால் நம்மைச் சேர்த்தோன், முன்நண்ணாரை*
வெல்லும் விருத்தவிபூதியனென்று* எல்லையறத்
தானிருந்துவாழ்த்தும் தமிழ்மாறன் சொல் வல்லார்*
வானவர்க்கு வாய்த்தகுரவர். 53

குரவைமுதலாம் கண்ணன்கோலச்செயல்கள்*
இரவுபகலென்னாமல் என்றும்* பரவுமனம்

Koviloor Digital Library

பெற்றேனென்றே களித்துப் பேசும் பராங்குசன்தன்*
சொல்தேனில் நெஞ்சே துவள். 54

துவளறு சீர் மால் திறத்துத் தொன்னலத்தால்* நாளும்
துவளறு தன் சீலமெல்லாம் சொன்னான்* துவளறவே
முன்னமனுபவத்தில் மூழ்கிநின்ற மாறன்* அதில்
மன்னுமுவப்பால் வந்தமால். 55

மாலுடனேதான்கலந்து வாழப்பெறாமயால்*
சாலநைந்து தன்னுடைமை தானடையக் கோலியே*
தானிகழ வேண்டாமல் தன்னைவிடல் சொல் மாறன்*
ஊனமறுசீர் நெஞ்சே! உண். 56

உண்ணும்சோறாதி ஒருமூன்றும் எம்பெருமான்*
கண்ணனென்றே நீர்மல்கிக்கண்ணிணைகள்* மண்ணுலகில்
மன்னுதிருக்கோளூரில் மாயன்பால் போம் மாறன்*
பொன்னடியே நந்தமக்குப்பொன். 57

பொன்னுலகுபூமியெல்லாம் புள்ளினங்கட்கே வழங்கி*
என்னிடரை மாலுக்கியம்புமென* மன்னுதிரு
நாடுமுதல் தூது நல்கிவிடும் மாறனையே*
நீடுலகீர்! போய்வணங்கும் நீர். 58

நீராகிக்கேட்டவர்கள் நெஞ்சழிய* மாலுக்கும்
ஏரார்விசும்பில் இருப்பரிதா* ஆராத
காதலுடன் கூப்பிட்ட காரிமாறன்சொல்லை*
ஓதிடவே உய்யும்உலகு. 59

**உலகுய்யமால்நின்ற உயர்வேங்கடத்தே*
அலர்மகளை முன்னிட்டு அவன்தன் மலரடியே*
வன்சரணாய்ச்சேர்ந்த மகிழ்மாறன் தாளிணையே*
உன்சரணாய் நெஞ்சமே உள். 60

Koviloor Digital Library

உண்ணிலாவைவருடனிருத்தி* இவ்வுலகில்
எண்ணிலாமாயன் எனை நலிய எண்ணுகின்றான்*
என்று நினைந்தோலமிட்ட இன்புகழ்சேர்மாறனென*
குன்றிவிடுமே பவக்கங்குல். 61

**கங்குல்பகல் அரதி கைவிஞ்சிமோகமுற*
அங்கதனைக் கண்டோர் அரங்கரைப்பார்த்து* இங்கிவள்பால்
என்செய்ய நீரெண்ணுகின்றதென்னும் நிலைசேர்மாறன்*
அஞ்சொலுற நெஞ்சுவெள்ளையாம். 62

வெள்ளியநாமம் கேட்டு விட்டகன்றபின்மோகம்*
தெள்ளியமால் தென்திருப்பேர் சென்றுபுக* உள்ளம்அங்கே
பற்றிநின்ற தன்மை பகரும்சடகோபற்கு*
அற்றவர்கள் தாம் ஆழியார். 63

ஆழிவண்ணன் தன்விசயமானவை முற்றும்காட்டி*
வாழிதனாலென்று மகிழ்ந்துநிற்க* ஊழிலவை
தன்னை இன்றுபோல் கண்டு தானுரைத்த மாறன்சொல்*
பன்னுவரே நல்லது கற்பார். 64

கற்றோர் கருதும் விசயங்களுக்கெல்லாம்*
பற்றாம் விபவகுணப் பண்புகளை* உற்றுணர்ந்து
மண்ணிலுள்ளோர் தம்மிழவை வாய்ந்துரைத்த மாறன்சொல்*
பண்ணிலினிதான தமிழ்ப்பா. 65

பாமருவுவேதம்பகர் மால்குணங்களுடன்*
ஆமழகுவேண்டற்பாடாம் அவற்றை* தூமனத்தால்
நண்ணி அவனைக்காண நன்குருகிக்கூப்பிட்ட*
அண்ணலை நண்ணார் ஏழையர். 66

ஏழையர்கள் நெஞ்சை இளகுவிக்கும் மாலழகு*
சூழவந்துதோன்றித் துயர்விளைக்க* ஆழுமனந்

Koviloor Digital Library

தன்னுடனே அவ்வழகைத் தானுரைத்தமாறன்பால்*
மன்னுமவர் தீவினைபோம் மாய்ந்து. 67

மாயாமல் தன்னை வைத்த வைசித்திரியாலே*
தீயாவிசித்திரமாச்சேர்பொருளோடு – ஒயாமல்*
வாய்ந்து நிற்கும் மாயன் வளமுரைத்த மாறனை, நாம்*
ஏய்ந்துரைத்து வாழுநாள் என்று ?. 68

என்தனை நீயிங்குவைத்தது ஏதுக்கென மாலும்
என்தனக்கும் என்தமர்க்கும் இன்பமதா* நன்றுகவி
பாடவெனக் கைம்மாறிலாமை* பகர்மாறன்
பாடணைவார்க்குண்டாமின்பம். 69

இன்பக்கவிபாடுவித்தோனை இந்திரையோடு*
அன்புற்றுவாழ் திருவாறன்விளையில்* துன்பமறக்
கண்டடிமைசெய்யக் கருதியமாறன்கழலே*
திண்திறலோர் யாவர்க்கும் தேவு. 70

தேவனுறைபதியில் சேரப்பெறாமையால்*
மேவுமடியார்வசனாம் மெய்ந்நிலையும்* யாவையும்
தானாம்நிலையும் சங்கித்து அவைதெளிந்த மாறன்பால்*
மாநிலத்தீர் நங்கள்மனம். 71

நங்கருத்தை நன்றாக நாடிநிற்கும் மாலறிய*
இங்கிவற்றிலாசை எமக்குளதென் ? சங்கையினால்*
தன்னுயிரில் மற்றில் நசைதானொழிந்தமாறன்தான்*
அந்நிலையை ஆய்ந்துரைத்தான் அங்கு. 72

அங்கமரர்பேண அவர்நடுவே வாழ் திருமாற்கு*
இங்கோர்பரிவரிலையென்றஞ்ச* எங்கும்
பரிவருளரென்னப் பயந்தீர்ந்த மாறன்*
வரிகழல்தாள் சேர்ந்தவர் வாழ்வார். 73

Koviloor Digital Library

வாராமல் அச்சம் இனி மால்தன் வலியினையும்*
சீரார்பரிவருடன் சேர்த்தியையும்* பாருமெனத்
தானுகந்த மாறன்தாள் சார்நெஞ்சே, சாராயேல்*
மானிடவரைச் சார்ந்து மாய். 74

மாயன்வடிவழகைக் காணாதவல்விடா
யாய் அது* அறவிஞ்சி யழுதலற்றும்* தூயபுகழ்
உற்றசடகோபனை நாம் ஒன்றி நிற்கும்போது பகல்*
அற்றபொழுதானது எல்லியாம். 75

எல்லிபகல் நடந்த இந்தவிடாய் தீருகைக்கு*
மெல்லவந்து தான்கலக்கவேணுமென* நல்லவர்கள்
மன்னுகடித்தானத்தே மாலிருக்க மாறன்கண்டு*
இந்நிலையைச் சொன்னான் இருந்து. 76

இருந்தவன் தான்வந்து இங்கிவரெண்ணமெல்லாம்*
திருந்த இவர்தந்திறத்தேசெய்து* பொருந்தக்
கலந்து இனியனாயிருக்கக் கண்டசடகோபர்*
கலந்தநெறி கட்டுரைத்தார்கண்டு. 77

கண்ணிறையவந்து கலந்தமால், இக்கலவி*
திண்ணிலையாவேணுமெனச்சிந்தித்து* தண்ணிதெனும்
ஆருயிரினேற்றமதுகாட்ட ஆய்ந்துரைத்தான்*
காரிமாறன் தன்கருத்து. 78

கருமால் திறத்தில் ஒருகன்னிகையாம் மாறன்*
ஒரு மாகலவியுரைப்பால்* திரமாக
அந்நியருக்காகாது அவன்தனக்கேயாகும் உயிர்
இந்நிலையையோர்நெடிதா. 79

**நெடுமாலழகுதனில் நீள்குணத்தில்* ஈடு
படுமாநிலையுடைய பத்தர்* அடிமைதனில்

Koviloor Digital Library

எல்லைநிலம் தானாக எண்ணினான் மாறன்* அது
கொல்லை நிலமான நிலைகொண்டு. 80

கொண்ட பெண்டிர்தாம் முதலாக் கூறுமுற்றார், கன்மத்தால்*
அண்டினவரென்றே அவரைவிட்டு* தொண்டருடன்
சேர்க்கும் திருமாலைச் சேருமென்றான்* ஆர்க்கும் இதம்
பார்க்கும் புகழ்மாறன்பண்டு. 81

பண்டையுறவான பரனைப் புளிங்குடிக்கே
கண்டு* எனக்கெல்லாவுறவின் காரியமும்* தண்டற நீ
செய்தருளென்றேயிரந்த சீர்மாறன் தாளிணையே*
உய்துணையென்று உள்ளமே ஓர். 82

ஓராநீர் வேண்டினவை உள்ளதெல்லாம் செய்கின்றேன்*
நாராயணனன்றோ நானென்று* பேருறவைக்
காட்ட அவன் சீலத்தில் கால்தாழ்ந்த மாறனருள்*
மாட்டிவிடும் நம்மனத்துமை. 83

மையார்கண்மா மாா்பில் மன்னும்திருமாலை*
கையாழிசங்குடனே காணவெண்ணி* மெய்யான
காதலுடன் கூப்பிட்டுக் கண்டுகந்த மாறன்பேர்*
ஓதவுய்யுமே யின்னுயிர். 84

இன்னுயிர்மால்தோற்றினது இங்கென்னெஞ்சிலென்று* கண்ணால்
அன்றவனைக்காணவெண்ணி ஆண்பெண்ணாய்* பின்னை அவன்
தன்னை நினைவிப்பவற்றால் தான் தளர்ந்தமாறனருள்*
உன்னுமவர்க்கு உள்ளமுருகும். 85

உருகுமால் என்னெஞ்சம் உன்செயல்களெண்ணி*
பெருகுமால் வேட்கையெனப்பேசி* மருவுகின்ற
இன்னாப்புடன் அவன் சீர் ஏய்ந்துரைத்தமாறன்சொல்*
என்நாச்சொல்லாதிருப்பது எங்கு ?. 86

Koviloor Digital Library

எங்காதலுக்கடி மாலேய்ந்த வடிவழகென்று*
அங்காது பற்றாசா ஆங்கவன்பால்* எங்குமுள்ள
புள்ளினத்தைத் தூதாகப் போகவிடும் மாறன்தாள்*
உள்ளினர்க்குத் தீங்கை யறுக்கும். 87

அறுக்கிமிடரென்று அவன்பால் ஆங்குவிட்டதூதர்*
மறித்துவரப்பற்றா மனத்தால்* அறப்பதறிச்
செய்யதிருநாவாயில் செல்ல நினைந்தான் மாறன்*
மையுலினால் செய்வறியாமல். 88

மல்லடிமை செய்யும் நாள் மால்தன்னைக்கேட்க* அவன்
சொல்லுமளவும் பற்றாத்தொன்னலத்தால்* செல்கின்ற
ஆற்றாமைபேசி அலமந்த மாறனருள்*
மாற்றாகப் போகுமென்தன்மால். 89

**மால் உமதுவாஞ்சை முற்றும் மன்னுமுடம்பின் முடிவில்*
சாலநண்ணிச்செய்வனெனத், தானுகந்து* மேல் அவனைச்
சீரார்கணபுரத்தே சேருமெனும் சீர்மாறன்*
தாரானோ நந்தமக்குத்தாள். 90

தாளடைந்தோர் தங்கட்குத் தானேவழித்துணையாம்*
காளமேகத்தைக் கதியாக்கி* மீளுதலாம்
ஏதமிலாவிண்ணுலகில் ஏகவெண்ணும்மாறனென*
கேதமுள்ளதெல்லாம் கெடும். 91

கெடுமிடர்வைகுந்தத்தைக் கிட்டினாற்போல்*
தட்முடை அனந்தபுரந்தன்னில்* படவரவில்
கண்துயில்மாற்கு ஆட்செய்யக் காதலித்தான் மாறன்* உயர்
விண்தனிலுள்ளோர் வியப்பவே. 92

வேய்மருந்தோளிந்திரைகோன் மேவுகின்ற தேசத்தை*
தான்மருவாத்தன்மையினால்* தன்னை இன்னம் பூமியிலே

Koviloor Digital Library

வைக்குமெனச்சங்கித்து மால் தெளிவிக்கத்தெளிந்த*
தக்கபுகழ்மாறன் எங்கள் சார்வு. 93

சார்வாகவே அடியில் தானுரைத்த பத்திதான்*
சீரார்பலத்துடனேசேர்ந்ததனை* சோராமல்
கண்டுரைத்த மாறன் கழலிணையே நாடோறும்*
கண்டுகக்கும் என்னுடையகண். 94

கண்ணனடியிணையில் காதலுறுவார்செயலை*
திண்ணமுறவேசுருங்கச்செப்பியே* மண்ணவர்க்குத்
தானுபதேசிக்கை தலைக்கட்டினான் மாறன்
ஆனபுகழ்சேர் தன்னருள். 95

அருளால் அடியிலெடுத்த மால் அன்பால்*
இருளார்ந்ததம்முடம்பை இச்சித்து* இருவிசும்பில்
இத்துடன்கொண்டேக இசைவுபார்த்தே இருந்த*
சுத்திசொல்லும் மாறன் செஞ்சொல்*. 96

செஞ்சொற்பரன் தனதுசீராரும் மேனிதனில்*
வஞ்சித்துச்செய்கின்றவாஞ்சைதனின்* விஞ்சுதலைக்
கண்டு அவனைக்காற் கட்டிக் கைவிடுவித்துக்கொண்ட*
திண்திறல்மாறன் நம் திரு. 97

**திருமால் தன்பால் விருப்பம் செய்கின்ற நேர்கண்டு*
அருமாயத்து அன்றகல்விப்பானென்* பெருமால் நீ
இன்றுஎன்பால்செய்வானெனென்ன இடருற்றுநின்றான்*
துன்னு புகழ்மாறனைத் தான்சூழ்ந்து. 98

சாற்றுப் பாசுரங்கள்

**சூழ்ந்துநின்றமால்விசும்பில் தொல்லைவழிகாட்ட*
ஆழ்ந்து அதனை முற்றுமநுபவித்து* வாழ்ந்தங்கு
அடியருடனே இருந்தவாற்றை உரைசெய்தான்*
முடிமகிழ்சேர் ஞானமுனி. 99

Koviloor Digital Library

**முனிமாறன் முன்பு உரைசெய் முற்றின்பம் நீங்கி*
தனியாகி நின்றுதளர்ந்து* நனியாம்
பரமபத்தியால்நைந்து பங்கயத்தாள்கோனை*
ஒருமையுற்றுச்சேர்ந்தான் உயர்ந்து 100

உயர்வேபரன்படியை .... விளையும்வீடு.

திருவாய்மொழி நூற்றந்தாதி முற்றும்
மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

இயல்சாத்து

மணவாளமாமுனிகளால் நியமிக்கபெற்றது

பிள்ளையுறங்காவில்லிதாஸர் அருளிச்செய்தது

நன்றுந்திருவுடையோம் நானிலத்தில் எவ்வுயிர்க்கும்*
ஒன்றும் குறையில்லை ஓதினோம்* குன்றம்
எடுத்தானடிசேரிராமானுசன்தாள்*
பிடித்தார் பிடித்தாரைப் பற்றி. 1

வகுளாபரணபட்டர் அருளிச்செய்தது

வாழி திருக்குருகூர் வாழி திருமழிசை*
வாழி திருமல்லிவளநாடு* – வாழி
சுழிபொறித்தநீர்ப்பொன்னித் தென்னரங்கன்தன்னை*
வழிபறித்தவாளன்வலி. 2

ஸ்ரீ பராங்குசதாஸர் அருளிச்செய்தது

திருநாடு வாழி திருப்பொருநல்வாழி*
திருநாட்டுத்தென்குருகூர் வாழி* திருநாட்டுச்
சிட்டத்தமர் வாழி* வாழி சடகோபன்
இட்டத்தமிழ்ப்பாவிசை. 3

Koviloor Digital Library

பரகாலதாஸர் அருளிச்செய்தது

மங்கை நகர் வாழி வண்குறையலூர் வாழி*
செங்கையருண்மாரி சீர் வாழி* பொங்குபுனல்
மண்ணித்துறை வாழி* வாழி பரகாலன்
எண்ணில் தமிழ்ப்பாவிசை. 4

பிள்ளை இராமானுசதாஸர் அருளிச்செய்தது

வாழியரோ தென்குருகை வாழியரோ தென்புதுவை*
வாழியரோதென்குறையல் மாநகரம்* வாழியரோ
தக்கோர் பரவும் தடஞ்சூழ்பெரும்பூதூர்
முக்கோல் பிடித்த முனி. 5

திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்தது

மொழியைக் கடக்கும் பெரும்புகழான், வஞ்சமுக்குறும்பாம்
குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான்சரண் கூடியபின்*
பழியைக் கடத்தும் இராமானுசன் புகழ்பாடி யல்லா
வழியைக் கடத்தல்* எனக்கு இனியாதும்வருத்தமன்றே. 6

பிள்ளை அழகியமணவாளதாஸர் அருளிச்செய்தது

நெஞ்சத்திருந்து நிரந்தரமாக நிரயத் துய்க்கும்
வஞ்சக்குறும்பின்வகையறுத்தேன் மாயவாதியர்தாம்
அஞ்சப் பிறந்தவன் சீமாதவனடிக்கு அன்புசெய்யும்
தஞ்சத்தொருவன் சரணாம்புயம் என்தலைக்கணிந்தே 7

பின்பழகராம்பெருமாள் சீயர் அருளிச்செய்தது

ஊழிதொறும் ஊழிதொறும் உலகமுய்ய
உம்பர்களும் கேட்டுய்ய, அன்பினாலே
வாழியெனும் பூதம் பேய் பொய்கை மாறன்
மழிசையர்கோன் பட்டர்பிரான் மங்கைவேந்தன்
கோழியர்கோன் தொண்டர்துகள் பாணன் கோதை
குலமுனிவன் கூறியநூலோதி, வீதி
வாழியென வருந்திரளை வாழ்த்துவார்தம்
மலரடி என்சென்னிக்கு மலர்ந்தபூவே 8

இயல்சாத்து முற்றும்

Koviloor Digital Library

சாத்துமுறை

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வி திருக்காப்பு

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு*
வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு*
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு*
படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

பெரிய சீயர் அருளிச்செய்தது

ஸர்வ தேச தசா காலேஷ்ு அவ்யாஹத பராக்ரமா|
ராமாநுஜார்ய திவ்யாஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்||

கந்தாடையண்ணன் அருளிச்செய்தது

ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரம் உஜ்வலா|
திகந்த வ்யாபிநீ பூயாத் ஸாஹி லோக ஹிதைஷிணீ||

உடையவர் அருளிச்செய்தது

ஸ்ரீமந்! ஸ்ரீரங்கச்ரியம் அநுபத்ரவாம் அநுதிநம் ஸம்வர்த்தய|
ஸ்ரீமந்! ஸ்ரீரங்கச்ரியம் அநுபத்ரவாம் அநுதிநம் ஸம்வர்த்தய||

பெரியசீயர் அருளிச்செய்தது

நம: ஸ்ரீசைலநாதாய குந்தீநகரஜந்மநே|
ப்ரஸாதலப்தபரமப்ராப்ய கைங்கர்ய சாலிநே||

நம்பெருமாள் அருளிச்செய்தது

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்|
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்ய-ஜாமாதரம்–முநிம்||

Koviloor Digital Library

மடத்துப்பிள்ளை அருளிச்செய்தது

வாழி திருவாய்மொழிப்பிள்ளை மாதகவால்*
வாழும் மணவாளமாமுனிவன்* வாழி அவன்
மாறன் திருவாய்மொழிப் பொருளை மாநிலத்தோர்
தேறும்படி உரைக்கும் சீர்.

ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் அருளிச்செய்தது

செய்ய தாமரைத்தாளிணை வாழியே*
சேலை வாழி திருநாபி வாழியே*
துய்ய மார்பும் புரிநூலும் வாழியே*
சுந்தரத் திருத்தோளிணை வாழியே*
கையும் ஏந்திய முக்கோலும் வாழியே*
கருணை பொங்கிய கண்ணிணை வாழியே*
பொய்யிலாத மணவாளமாமுனி
புந்தி வாழி புகழ் வாழி வாழியே*.

அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ*
சடகோபன் தண் தமிழ் நூல் வாழ* கடல் சூழ்ந்த
மன்னுலகம் வாழ* மணவாளமாமுனியே
இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

நித்யாநுஸந்தானம் முற்றும்.

Koviloor Digital Library

அருளாளப்பெருமாள் எம்பெருமானார் அருளிச்செய்த

ஞானசாரம்

தனியன்

சுருளார் கருங்குழல்தோகையர் வேல்விழியில்துவளும்*
மருளாம்வினைகெடும் மார்க்கம் பெற்றேன்* மறைநான்கும் சொன்ன
பொருள் ஞானசாரத்தைப் புந்தியில்தந்தவன்*பொங்கொளிசேர்
அருளாளமுனி அம்பொன்கழல்கள் அடைந்தபின்னே.

ஊன– உடற்சிறை– நீத்து ஒண்கமலைகேள்வனடித்*
தேன் நுகரும் ஆசைமிகு சிந்தையராய்* தானே
பழுத்தால்விழும் கனிபோல் பற்று அற்று வீழும்*
விழுக்காடே தானருளும் வீடு. 1

நரகும் சுவர்க்கமும் நாள்மலராள் கோனைப்*
பிரிவும் பிரியாமையுமாய்த்* துரிசற்று
சாதகம்போல் நாதன்தனது அருளே பார்த்து இருத்தல்*
கோதிலடியார் குணம். 2

ஆனையிடர் கடிந்த ஆழியங்கை, அம்புயத்தாள்
கோனை விடில்* நீரில் குதித்து எழுந்த மீன் எனவே*
ஆக்கை முடியும்படி பிறத்தல்* அன்னவன்தாள்
நீக்கமிலா அன்பர் நிலை. 3

மற்றொன்றை எண்ணாதே மாதவனுக்கு ஆட்செயலே*
உற்றது இது என்று உளந்தெளிந்து* பெற்ற
பெரும்பேற்றின் மேலுளதோ* பேறென்று இருப்பார்*
அரும்பேறு வானத்து அவர்க்கு. 4

தீர்த்தம் முயன்று ஆடுவதும் செய்தவங்கள் செய்வனவும்*
பார்த்தனை முன் காத்தபிரான் பார்ப்பதன்முன்* சீர்த்துவரை
மன்னன் அடியோம் என்னும் வாழ்வு நமக்கு ஈந்ததற்பின்*
என்ன குறை வேண்டும் இனி. 5

புண்டரிகைகேள்வன் அடியார்* அப்பூமிசையோன்
அண்டம் ஒருபொருளா ஆதரியார்* மண்டி
மலங்க ஒரு மீன் புரண்டமாத்திரத்தால்* ஆர்த்துக்
கலங்கிடுமோ முந்நீர்க்கடல். 6

Koviloor Digital Library

தோளார் சுடர்திகிரி சங்குடைய சுந்தரனுக்கு
ஆளானார்* மற்றொன்றில் அன்பு செய்யார்* மீளாப்
பொருவரிய விண்ணாட்டில் போகம் நுகர்வார்க்கு*
நரகன்றோ இந்திரன்தன் நாடு ? 7

முற்றப்புவனமெல்லாம் உண்ட முகில் வண்ணன்*
கற்றைத்துழாய் சேர் கழலன்றி* – மற்றொன்றை
இச்சியா அன்பர் தனக்கு எங்ஙனே செய்திடினும்*
உச்சியால் ஏற்கும் உகந்து. 8

ஆசில் அருளால் அனைத்து உலகும் காத்தளிக்கும்*
வாசமலராள் மணவாளன்* தேசுபொலி
விண்ணாட்டில் சால விரும்புமே* வேறொன்றை
எண்ணாதார் நெஞ்சத்து இருப்பு. 9

நாளும் உலகை நலிகின்ற வாளரக்கன்*
தோளும் முடியும் துணித்தவன்தன் – தாளில்*
பொருந்தாதார் உள்ளத்துப் பூமடந்தைகேள்வன்
இருந்தாலும் * முள்மேல் இருப்பு. 10

தன்பொன்னடியன்றி மற்றொன்றில் தாழ்வுசெய்யா*
அன்பர், உகந்திட்டது அணுவெனிலும்* பொன்பிறழும்
மேருவாய்க் கொள்ளும் விரையார்துழாய் அலங்கல்
மாரி – மாக்கொண்டல் – நிகர் மால். 11

மாறாய் இணைந்த மருதம் இறத்தவழ்ந்த*
சேறார் அரவிந்தச் சேவடியை* வேறாக
உள்ளாதார், ஒள்நிதியை ஈந்திடினும்* தான் உவந்து
கொள்ளான் மண்மடந்தைகோன். 12

பண்டே உயிரனைத்தும் பங்கயத்தாள் நாயகற்கே*
தொண்டாம் எனத் தெளிந்த தூமனத்தார்க்கு* உண்டோ ?*
பலகற்றும் தம்முடம்பைப் பார்த்து அபிமானிக்கும்*
உலகத்தவரோடு உறவு. 13

Koviloor Digital Library

பூதங்கள் ஐந்தும் பொருந்து உடலினால் பிறந்த*
சாதங்கள்* நான்கினோடும் சங்கதமாம்* பேதங்கொண்டு*
என்ன பயன் பெறுவீர் ?* எவ்வுயிர்க்கும் இந்திரைகோன்
தன் அடியே காணும் சரண். 14

குடியும் குலமும் எல்லாம்* கோகனகைக் கேள்வன்
அடியார்க்கு அவனடியே ஆகும்* படியின்மேல்
நீர்கெழுவும் ஆறுகளின் பேரும் நிறமும் எல்லாம்*
ஆர்கலியை (கடலை)ச்சேர்ந்திட மாய்ந்து அற்று. 15

தேவர் மனிசர் திரியக்குத் தாவரமாம்*
யாவையும் அல்லேன் இலகுமுயிர்* பூவின்மிசை
ஆரணங்கின்கேள்வன் அமலன் அறிவே வடிவாம்*
நாரணன்தாட்கே அடிமை நான். 16

ஒன்றிடுக விண்ணவர்கோன் செல்வம் ஒழிந்திடுக*
என்றும் இறவாது இருந்திடுக* இன்றே
இறக்கக் களிப்பும் கவர்வும் இவற்றால்
பிறக்குமோ ?* தற்றெளிந்தபின். 17

ஈனமிலா அன்பர் என்றாலும் * எய்திலா
மானிடரை எல்லா வணத்தாலும்* தானறிய
விட்டார்க்கு எளியன் விடாதார்க்கு அறிவரியன்*
பட்டார் துழாயலங்கல்மால். 18

நல்லபுதல்வர் மனையாள் நவையில்கிளை*
இல்லம் நிலம் மாடு இவையனைத்தும்* அல்லலெனத்
தோற்றி எரிதீயில் சுடுமேல்* அவர்க்கு எளிதாம்
ஏற்றரும் வைகுந்தத்து இருப்பு. 19

விருப்பு உறினும் தொண்டர்க்கு வேண்டும் இதமல்லால்*
திருப்பொலிந்தமார்பன் அருள் செய்யான்* நெருப்பை
விடாதே குழவி விழ வருந்தினாலும்*
தடாதே ஒழியுமோ ? தாய். 20

---

* சாதம் (ஜாதம்) – சாதி, சங்கதம் – சேர்ந்த

Koviloor Digital Library

ஆரப்பெருந்துயரே செய்திடினும் அன்பர்பால்*
வேரிச்சரோருகைகோன் மெய்ந்நலமாம்* தேறில்
பொறுத்தற்கு அரிது எனினும் மைந்தன் உடற்புண்ணை*
அறுத்தற்கு இசை தாதையற்று. 21

உடைமை நான் என்றும் உடையானுயிரை*
வடமதுரை வந்து உதித்தானென்றும்* திடமாக
அறிந்து அவன்தன் தாளில் அடைந்தவர்க்கும் உண்டோ ?*
பிறந்துபடும் நீள்துயரம் பின். 22

ஊழிவினைக்குறும்பர் ஒட்டருவர் என்றஞ்சி*
ஏழைமனமே! இனித்தளரேல்* – ஆழிவண்ணன்
தன் – அடிக்கீழ்வீழ்ந்து சரண் என்று இரந்து ஒருகால்*
சொன்னதிற்பின் உண்டோ ? துயர் 23

வண்டுபடி துளவமார்பனிடைச் செய்த பிழை*
உண்டு பல என்று உளம் தளரேல்* – தொண்டர்செயும்
பல்லாயிரம் பிழைகள் பார்த்திருந்தும்* காணும் கண்
இல்லாதவன் காண் இறை. 24

அற்றம் உரைக்கில் அடைந்தவர்பால் அம்புயைகோன்*
குற்றம் உணர்ந்து இகழும் கொள்கையனோ ?– எற்றே! தன்
கன்றின் உடம்பின் வழுவன்றோ ? காதலிப்பது*
அன்று அதனை ஈன்றுகந்த ஆ. 25

தப்பு – இல் குரு அருளால் தாமரையாள் நாயகன் தன்*
ஒப்பில் அடிகள் நமக்கு உள்ளத்து – வைப்பென்று*
தேறியிருப்பார்கள் தேசு பொலி வைகுந்தத்து*
ஏறியிருப்பார் பணிகட்கு ஏய்ந்து. 26

நெறி அறியாதாரும் அறிந்தவர்பால் சென்று*
செறிதல்செய்யாத் தீமனத்தர்தாமும்* இறையுரையைத்
தேறாதவரும் திருமடந்தைகோன் உலகத்து*
ஏறார், இடர் அழுந்துவார். 27

சரணாகதி மற்றோர் சாதநத்தைப் பற்றில்*
அரணாகாது அஞ்சனைதன்சேயை* முரணழியக்
கட்டியது வேறோர்கயிறு கொண்டு ஆர்ப்பதன்முன்*
விட்டபடைபோல விடும். 28

Koviloor Digital Library

மந்திரமும் ஈந்தகுருவும், அம்மந்திரத்தால்*
சிந்தனைசெய்கின்ற திருமாலும்* நந்தல் இலாது
என்றும் அருள்புரிவர், யாவரவர் இடரை
வென்று கடிதடைவர் வீடு. 29

மாடும் மனையும் கிளையும், மறைமுனிவர்*
தேடும் உயர்வீடு செல்நெறியும்* பீடுடைய
எட்டெழுத்தும் தந்தவனே என்று இராதார் உறவை*
விட்டிடுகை கண்டீர் விதி. 30

வேதம் ஒருநான்கின் உட்பொதிந்த மெய்ப்பொருளும்*
கோதில் மநு முதல்நூல் கூறுவதும்* தீதில்
சரணாகதி தந்த தன் இறைவன் தானே*
அரணாகும் என்னுமது. 31

மானிடவரென்றும் குருவை* மலர்மகள்கோன்
தான், உகந்த கோலமும் உலோகமென்றும்* ஈனமதா
எண்ணுகின்ற நீசர் இருவருமே எக்காலும்*
நண்ணிடுவர் கீழாம் நரகு. 32

எட்ட இருந்த குருவை இவை அன்று என்று*
விட்டோர் பரனை விருப்பு உறுதல்* பொட்டெனா, தன்
கண் செம்பளித்திருந்து கைத்துருத்தி நீர்தூவி
அம்புதத்தைப் பார்த்திருப்பான் அற்று. 33

பற்று குருவைப் பரன் அன்று என இகழ்ந்து*
மற்றோர்பரனை வழிப்படுதல்* எற்றே! தன்
கைப்பொருள் விட்டு ஆரேனும், காசினியில் தாம் புதைத்த*
அப்பொருள் தேடித்திரிவான் அற்று. 34

என்றும் அனைத்துயிர்க்கும் ஈரம்செய் நாரணனும்*
அன்றும் தன் ஆரியன்பால் அன்பு ஒழியில்* நின்ற
புனல் பிரிந்த பங்கயத்தைப் பொங்குசுடர் வெய்யோன்*
அனல் உமிழ்ந்து தான் உலர்த்தியற்று. 35

வில்லார்மணி கொழிக்கும் வேங்கடப்பொற்குன்று முதல்*
சொல்லார் பொழில் சூழ் திருப்பதிகள் – எல்லாம்*
மருளாம் இருளோட மத்தகத்துத் தன்தாள்*
அருளாலே வைத்தவர்காண் அன்று. 36

Koviloor Digital Library

பொருளும் உடம்பும் புகலும்*
தெருளும் குணமும் செயலும்* அருள்புரிந்த
தன் ஆரியன் பொருட்டாச் சங்கற்பம் செய்பவர் நெஞ்சு*
எந்நாளும் மாலுக்கு இடம். 37

தேனார்கமலத் திருமாமகள் கொழுநன்*
தானேகுருவாகித் தன்னருளால்* மானிடர்க்கா
இந்நிலத்தே தோன்றுதலால் யார்க்கும் அவன் தாளிணையை*
உன்னுவதே சால உறும். 38

**அலகைமுலை சுவைத்தார்க்கு அன்பரடிக்கு அன்பர்*
திலதமெனத் திரிவார்தம்மை* உலகர் பழி
தூற்றில் துதியாகும்* தூற்றாதவர் இவரைப்
போற்றிலது புன்மையே ஆம். 39

** அல்லிமலர்ப்பாவைக்கன்பர் அடிக்கு அன்பர்*
சொல்லும் அவிடு சுருதியாம்* நல்ல
படியாம் மனுநூற்கு அவர் சரிதை* பார்வை
செடியார் வினைத்தொகைக்குத் தீ. 40

அடிவரவு : ஊன, நரகு, ஆனை, மற்று, தீர்த்த, புண்டரிக, தோள்முற்ற, ஆசில், இணைந்த, தன், மாறாய், பண்டே, பூதம், குடி, தேவர், ஒன்றி, ஈனம், நல்ல, விருப்பு, ஆர், உடைமை, ஊழி, வண்டு, அற்றம், தப்பு, நெறி, சரண், மந்திரம், மாடு, வேதம், மானிட, எட்ட, பற்று, என்றும், வில்லார், பொருள், தேனார், அலகை, அல்லி

ஞானசாரம் முற்றும்

அருளாளப் பெருமாள் எம்பெருமானார்
திருவடிகளே சரணம்.

Koviloor Digital Library

அருளாளப்பெருமாள் எம்பெருமானார் அருளிச்செய்த

பிரமேய சாரம்

தனியன்

நீங்காமல் என்றும் நினைத்துத் தொழுமின்கள் நீணிலத்தீர்*
பாங்கா நல்ல பிரமேயசாரம் பரிந்தளிக்கும்*
பூங்கா வளப்பொழில்சூழ் புடைவாழும் புதுப்புளிமண்*
ஆங்காரமற்ற அருளாளமாமுனி அம்பதமே.

அவ்வானவருக்கும் அவ்வானவர் எல்லாம்*
உவ்வானவர் அடிமை என்று உரைத்தார்* இவ்வாறு
கேட்டிருப்பார்க்கு ஆளென்று கண்டு இருப்பார்* மீட்சியில்லா
நாட்டு இருப்பார் என்று இருப்பவன் நான். 1

குலம் ஒன்று உயிர் பல தம் குற்றத்தாலிட்ட*
கலமொன்று காரியமும் வேறாம்* பலமொன்று
காணாமை காணும் கருத்தார் திருத்தாள்கள்*
பேணாமை காணும் பிழை. 2

பலம் கொண்டு மீளாத பாவம் உளதாகில்*
குலம் கொண்டு காரியம் என் ? கூறீர் – நலம் கொண்ட
தாளிணையான் அன்றே தனையொழிந்த யாவரையும்*
ஆளுடையானன்றே அவன். 3

கருமத்தால் ஞானத்தால் காணும்வகை உண்டே*
தருமத்தால் அன்றி இறைதாள்கள்* ஒரு மத்தால்
முந்நீர் கடைந்தான், அடைத்தான் முதல் படைத்தான்*
அந்நீர் அமர்ந்தான் அடி. 4

வழி ஆவது ஒன்று என்றால் மற்றவையும் முற்றும்*
ஒழியா அதொன்று என்றால்* ஓமென்று அழியாதே
இத்தலையால் ஏதுமில்லை என்று இருந்தது தான்*
அத்தலையால் வந்த அருள். 5

உள்ளபடி உணரில் ஒன்று நமக்கு உண்டு என்று*
விள்ள விரகிலதாய் விட்டதே* கொள்ளக்
குறையேதுமில்லாற்குக் கூறுவதுஎன் ? சொல்லீர்*
இறை ஏதமில்லாத யாம். 6

Koviloor Digital Library

இல்லை இருவர்க்கும் என்று இறையை வென்றிருப்பார்*
இல்லை அஃது ஒருவர்க்கு எட்டுமதோ ?* இல்லை
குறை உடைமைதான் என்று கூறினார் எல்லாம்*
மறையுடைய மார்க்கத்தே காண். 7

வித்து அமிழ இன்பம் துன்பம் நோய் வீகாலம்*
தத்தம் அவையே தலையளிக்கும்* அத்தை விடீர்
இச்சியான் இச்சியாது ஏத்த, எழில்வானத்து*
உச்சியால் உச்சியான் ஆம். 8

**தத்தம் இறையின் வடிவென்று தாளிணையை*
வைத்த அவரை வணங்கி இராய்* பித்தராய்
நிந்திப்பார்க்குண்டு ஒரு நீள்நிரயம்* நீதியால்
வந்திப்பார்க்கு உண்டு இழியாவான். 9

**இறையும் உயிரும் இருவர்க்கும் உள்ள
முறையும்* முறையே மொழியும் – மறையும்*
உணர்த்துவார் இல்லா நாள் ஒன்றல்ல* ஆன
உணர்த்துவார் உண்டானபோது. 10

அடிவரவு : அவ்வான், குலம், பலம், கருமம், வழி உள்ள இல்லை, வித்தம், தத்தம், இறை

பிரமேயசாரம் முற்றும்.

அருளாளப்பெருமாள் எம்பெருமானார் திருவடிகளே சரணம்

Koviloor Digital Library

விளாஞ்சோலைப்பிள்ளை அருளிச்செய்த

ஸப்தகாதை

தனியன்

வாழி நலந்திகழ் நாரண தாதன் அருள்
வாழி அவனமுதவாய்மொழிகள் – வாழியே
ஏறு திருவுடையான் எந்தை உலகாரியன் சொல்
தேறு திருவுடையான் சீர்.

அம்பொன் அரங்கர்க்கும் ஆவிக்கும்* அந்தரங்க
சம்பந்தம் காட்டித் தடைகாட்டி* உம்பர்
திவமென்னும் வாழ்வுக்குச் சேர்ந்த* நெறிகாட்டும
வனன்றோ ஆசாரியன். 1

அஞ்சுபொருளும் அளித்தவன்பால் அன்பிலார்*
நஞ்சில் மிகக்கொடியர் நாம் சொன்னோம்* நஞ்சுதான்
ஊனைமுடிக்குமது, உயிரை முடிக்கும் என்று*
ஈனமிலார் சொன்னாரிவை. 2

பார்த்த குருவினளவில் பரிவின்றி*
சீர்த்த மிகுஞானமெல்லாம் சேர்ந்தாலும்* கார்த்தகடல்
மண்ணின்மேல் துன்புற்றும் அங்குமே தேங்காமல்*
நண்ணுமே கீழா நரகு. 3

தன்னை, இறையைத் தடையை, சரண்நெறியை*
மன்னு பெருவாழ்வை ஒரு மந்திரத்தின் – இன்னருளால்*
அஞ்சிலும் கேடு ஒட அளித்தவன்பால் அன்பிலார்*
நஞ்சிலும் கேடு என்று இருப்பன் நான். 4

என்பக்கல் ஓதினார் இன்னார் எனும் இயல்வும்*
என்பக்கல் நன்மை எனும் இயல்வும்* – மன்பக்கல்
சேவிப்பார்க்கு அன்புடையோர் சன்மநிருபணமும்*
ஆவிக்கு நேரே அழுக்கு. 5

** அழுக்கென்றிவை அறிந்தேன் அம்பொன் அரங்கா!*
ஒழித்தருளாய் உள்ளில் வினையை* – பழிப்பிலா

Koviloor Digital Library

என் ஆரியருக்காக எம்பெருமானார்க்காக*
உன் ஆரருட்காக உற்று. 6

**தீங்கேதும் இல்லாத் தேசிகன்தன் சிந்தைக்குப்*
பாங்காக நேரே பரிவு உடையோர் – ஓங்காரத்
தேரின்மேல் ஏறிச் செழுங்கதிரினூடுபோய்ச்*
சேருவரே அந்தாமம்தான். 7

அடிவரவு : அம்பொன், அஞ்சு, பார்த்த, தன்னை என், அழுக்கு தீங்கு

ஸப்தகாதை முற்றும்

விளாஞ்சோலைப்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஆழ்வார்கள் வாழிதிருநாமம்

தனியன்கள்

நேரிசை வெண்பா

அம்புவியிலாழ்வார்களாண்டாள் மதுரகவி
தம், பதி, நாள் மாதந் தமிழ்த்தொகையை, நம்புவிக்கே
செப்புளா மின்தனமாய்ச் சேர்ந்த பெருவாழிசெய்த
அப்புளான் தாளேயரண். 1

நூற்பயன்

மண்ணுலகத் துள்ளோர்கள் மகிழ்ந்து வாழ
மணவாள மாமுனிகளருள்தன்னாலே
பண்ணருளிச் செயல்விளக்கம் வாழிநாமம்
பத்தியுடனிவ்வுலகிற் பயில்வார் கேட்பார்
விண்ணுலகத் தோர்களினுங் கீர்த்தி யுற்று
விளங்கியிட மெய்ஞ்ஞான வாழ்வு பெற்றே
கண்ணனடியார்களுடன் கலந்து நாளும்
காசினியிற் சதிராக வாழ்வர் தாமே. 2

திருப்பதியில் ஆழ்வார்கள்

Koviloor Digital Library

ஸ்ரீ பொய்கையாழ்வார் ஸ்ரீ பூதத்தாழ்வார் ஸ்ரீ பேயாழ்வார்

ஸ்ரீ திருமழிசையாழ்வார்

ஸ்ரீ பெரியாழ்வார்

Koviloor Digital Library

திருப்பதியில் ஆழ்வார்கள்

Koviloor Digital Library

ஸ்ரீ குலசேகராழ்வார்

ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார்

ஸ்ரீ திருப்பாணாழ்வார்

ஸ்ரீ மதுரகவியாழ்வார்

Koviloor Digital Library

Koviloor Digital Library

வேதத்தினுண்பொருளைத் தமிழால் நாளும்
விளக்கிடப் பன்னிருவர் வந்து தோன்றும்
மாதத்தை யவரவர்களுதித்தநாளை
வாழ்பதியைக் கலைத்தொகையை மனத்தில்வைத்துப்
போதத்தைத் தரும்தமிழால் வாழி நாமம்
பூதலத்திற் பேசுகின்றேனிதனைக் கற்பார்
பாதத்தை யென்முடிமே லணியாப் பூண்டு
பன்னாளுங் கைகூப்பிப் பணிவேன் யானே. 1

ஆழ்வார்கள் பன்னிருவருரின் வாழிதிருநாமம்

போதமிகும் பொய்கையார் பூதத்தார் வாழியே*
புகழ் பேயார் மழிசையர்கோன் புத்தூரான் வாழியே*
நாதமுனி தொழுங்குருகை நாவீறன் வாழியே*
நற்பாணன் கொல்லிநகர் நாதனார் வாழியே*
ஆதரிக்குந் தொண்டரடிப்பொடிதாள்கள் வாழியே*
அருட்கலியன் மதுரகவி யாண்டாளும் வாழியே*
ஏதமற்ற நாலாயிரப்பனுவல் வாழியே*
இவருதித்த நாள் மாத மெழிற்பதியும் வாழியே 1

பொய்கையாழ்வார்

செய்யதுலா வோணத்திற் செகத்துதித்தான் வாழியே*
திருக்கச்சிமாநகரஞ் செழிக்கவந்தோன் வாழியே*
வையந் தகளிநூறும் வகுத்துரைத்தான் வாழியே*
வனசமலர்க்கருவதனில் வந்தமைந்தான் வாழியே*
வெய்யகதிரோன்தன்னை விளக்கிட்டான் வாழியே*
வேங்கடவர் திருமலையை விரும்புமவன் வாழியே*
பொய்கைமுனி வடிவழகும் பொற்பதமும் வாழியே*
பொன்முடியுந் திருமுகமும் பூதலத்தில் வாழியே*. 2

Koviloor Digital Library

பூதத்தாழ்வார்

அன்பே தகளிநூறுமருளினான் வாழியே*
ஐப்பசியி லவிட்டத்தில் லவதரித்தான் வாழியே*
நன்புகழ்சேர் குருக்கத்தி நாண்மலரோன் வாழியே*
நல்ல திருக்கடன்மல்லை நாதனார் வாழியே*
இன்புருகு சிந்தை திரியிட்டபிரான் வாழியே*
எழில்ஞானச்சுடர்விளக்கையேற்றினான்வாழியே*
பொன் புரையும் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே*
பூதத்தார் தாளிணை இப்பூதலத்தில் வாழியே. 3

பேயாழ்வார்

திருக்கண்டேனென நூறுஞ் செப்பினான் வாழியே*
சிறந்தவைப்பசியிற் சதயம் செனித்த வள்ளல் வாழியே*
மருக்கமழும் மயிலைநகர் வாழவந்தோன் வாழியே*
மலர்க்கரிய நெய்தல்தனில் வந்துதித்தான் வாழியே*
நெருக்கிடவேயிடைகழியில் நின்றசெல்வன் வாழியே*
நேமிசங்கன் வடிவழகை நெஞ்சில்வைப்போன் வாழியே*
பெருக்கமுடன் திருமழிசைப்பிரான் தொழுவோன்வாழியே*
பேயாழ்வார் தாளிணையிப் பெருநிலத்தில் வாழியே*. 4

திருமழிசையாழ்வார்

அன்புடனந்தாதிதொண்ணூற்றாறுரைத்தான் வாழியே*
அழகாருந் திருமழிசையமர்ந்தசெல்வன் வாழியே*
இன்பமிகு தையில் மகத் திங்குதித்தான் வாழியே*
எழிற் சந்தவிருத்தம் நூற்றிருபதீந்தான் வாழியே*
முன்புகத்தில் வந்துதித்த முனிவனார் வாழியே*
முழுப்பொன்னிப் பெருக்கு எதிர்செல் முதிர்கவியோன் வாழியே*
நன்புவியில் நாலாயிரத் தெழுநூற்றான் வாழியே*
நங்கள் பத்திசார னிருநற்பதங்கள் வாழியே*. 5

Koviloor Digital Library

நம்மாழ்வார்

ஆன திருவிருத்தம் நூறுமருளினான் வாழியே*
ஆசிரியமேழுபாட்டளித்தபிரான் வாழியே*
ஈனமற வந்தாதி யெண்பத்தேழீந்தான் வாழியே*
இலகு திருவாய்மொழியாயிரத்தொருநூற்றிரண்டுரைத்தான் வாழியே*
வானணியும் மாமாடக் குருகைமன்னன் வாழியே*
வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே*
சேனையர்கோன் அவதாரஞ் செய்தவள்ளல் வாழியே*
திருக்குருகைச் சடகோபன் திருவடிகள் வாழியே*. 6

திருக்குருகைப் பெருமாள்தன் திருத்தாள்கள் வாழியே*
திருவான திருமுகத்துச் செவ்வியென்னும் வாழியே*
இருக்கு மொழி என்னெஞ்சில் தேக்கினான் வாழியே*
எந்தை எதிராசர்க்கு இறைவனார் வாழியே*
கருக்குழியில் புகாவண்ணம் காத்தருள்வோன் வாழியே*
காசினியில் ஆரியனைக்காட்டினான் வாழியே*
வருத்தமற வந்தென்னை வாழ்வித்தான் வாழியே*
மதுரகவிதம் பிரான் வாழி வாழி வாழியே. 7

குலசேகராழ்வார்

அஞ்சனமாமலைப்பிறவி யாதரித்தோன் வாழியே*
அணியரங்கர் மணத்தூணையடைந்துய்ந்தோன் வாழியே*
வஞ்சிநகரந்தன்னில் வாழவந்தோன் வாழியே*
மாசிதனிற் புனர்பூசம் வந்துதித்தான் வாழியே*
அஞ்சலெனக் குடப்பாம்பி லங்கையிட்டான் வாழியே*
அநவரதமிராமகதையருளுமவன் வாழியே*
செஞ்சொல்மொழி நூற்றஞ்சுஞ் செப்பினான் வாழியே*
சேரலார்கோன் செங்கமலத்திருவடிகள் வாழியே*. 8

Koviloor Digital Library

பெரியாழ்வார்

நல்லதிருப் பல்லாண்டு நான்மூன்றோன் வாழியே*
நானூற்றறுபத்தொன்றும் நமக்குரைத்தான் வாழியே*
சொல்லரிய வானிதனிற் சோதிவந்தான் வாழியே*
தொடை சூடிக்கொடுத்தாளைத் தொழுந்தமப்பன் வாழியே*
செல்வநம்பி தன்னைப் போலச் சிறப்புற்றான் வாழியே*
சென்று கிழியறுத்து மால் தெய்வமென்றான் வாழியே*
வில்லிபுத்தூர் நகரத்தை விளங்கவைத்தான் வாழியே*
வேதியர்கோன் பட்டர்பிரான் மேதினியில் வாழியே 9

தொண்டரடிப்பொடியாழ்வார்

மண்டங்குடியதனை வாழ்வித்தான் வாழியே*
மார்கழியிற் கேட்டைநாள் வந்துதித்தான் வாழியே*
தெண்டிரைசூழ் அரங்கரையே தெய்வமென்றான் வாழியே*
திருமாலை யொன்பதஞ்சும் செப்பினான் வாழியே*
பண்டு திருப்பள்ளியெழுச்சி பத்துரைத்தான் வாழியே*
பாவையர்கள் கலவிதனைப் பழித்தசெல்வன் வாழியே*
தொண்டு செய்து துளபத்தால் துலங்கினான் வாழியே*
தொண்டரடிப்பொடியாழ்வார் துணைப்பதங்கள் வாழியே. 10

திருப்பாணாழ்வார்

உம்பர்தொழும் மெய்ஞ்ஞானத் துறையூரான் வாழியே*
உரோகிணிநாள் கார்த்திகையி லுதித்தவள்ளல் வாழியே*
வம்பவிழ்தார் முனிதோளில் வந்தபிரான் வாழியே*
மலர்க்கண்ணை வேறொன்றில் வையாதான் வாழியே*
அம்புவியில் மதிளரங்கரகம் புகுந்தான் வாழியே*
அமலனாதிபிரான்பத்துமருளினான் வாழியே*
செம்பொனடி முடியளவுஞ் சேவிப்போன் வாழியே*
திருப்பாணன்பொற்பதங்கள் செகதலத்தில் வாழியே*. 11

Koviloor Digital Library

திருமங்கையாழ்வார்

கலந்ததிருக் கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே*
காசினியிற் குறையலூர்க் காவலோன் வாழியே*
நலந்திழாயிரத்தெண்பத்து நாலுரைத்தான் வாழியே*
நாலைந்து மாறைந்தும் நமக்குரைத்தான் வாழியே*
இலங்கெழுகூற்றிருக்கை யிருமடலீந்தான் வாழியே*
இம்மூன்றிலிருநூற்றிருபத்தேழீந்தான் வாழியே*
வலந்திகழுங் குமுதவல்லி மணவாளன் வாழியே*
வாட்கலியன் பரகாலன் மங்கையர்கோன் வாழியே. 12

மதுரகவியாழ்வார்

சித்திரையிற் சித்திரைநாள் சிறக்கவந்தோன் வாழியே*
திருக்கோளூரவதரித்த செல்வனார் வாழியே*
உத்தர கங்காதீரத் துயர் தவத்தோன் வாழியே*
ஒளிகதிரோன் தெற்குதிக்க வுகந்துவந்தோன் வாழியே*
பத்தியொடு பதினொன்றும் பாடினான் வாழியே*
பராங்குசனே பரனென்று பற்றினான் வாழியே*
மத்திமமாம் பதப்பொருளை வாழ்வித்தான் வாழியே*
மதுரகவி திருவடிகள் வாழிவாழி வாழியே. 13

ஆண்டாள்

திருவாடிப்பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே*
திருப்பாவைமுப்பதும் செப்பினாள் வாழியே*
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே*
பெரும்பூதூர்மாமுனிக்குப் பின்னானாள் வாழியே*
ஒருநூற்றுநாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே*
உயரரங்கர்க்கே கண்ணியுகந்தளித்தாள் வாழியே*
மருவாருந்திருமல்லி வளநாடி வாழியே*
வண்புதுவைநகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே. 14

Koviloor Digital Library

ஓராண்வழி ஆசாரியர்கள் வாழி திருநாமம்

பெரியபெருமாள்

திருமகளும் மண்மகளும் சிறக்கவந்தோன் வாழியே*
செய்யவிடைத் தாய்மகளார் சேவிப்போன் வாழியே*
இருவிசும்பில் வீற்றிருக்கும் இமையவர் கோன் வாழியே*
இடர்கடியப் பாற்கடலை யெய்தினான் வாழியே*
அரிய தயரதன் மகனா யவதரித்தான்வாழியே*
அந்தரியா மித்துவமு மாயினான் வாழியே*
பெருகிவரும் பொன்னிநடுப் பின்துயின்றான் வாழியே*
பெரியபெருமாளெங்கள்பிரானடிகள்வாழியே. 1

பெரிய பிராட்டியார்

பங்கயப் பூவிற்பிறந்த பாவை நல்லாள் வாழியே*
பங்குனியிலுத்தரநாள் பாருதித்தாள் வாழியே*
மங்கையர்கள் திலதமென வந்தசெல்வி வாழியே*
மாலரங்கர் மணிமார்வை மன்னுமவள் வாழியே*
எங்களெழிற் சேனைமன்னர்க் கிதமுரைத்தாள்வாழியே*
இருபத்தஞ்சுட்பொருள் மாலியம்புமவள் வாழியே*
செங்கமலச் செய்யரங்கம் செழிக்க வந்தாள் வாழியே*
சீரங்க நாயகியார் திருவடிகள் வாழியே. 2

சேனைமுதலியார்

ஓங்கு துலாப் பூராடத் துதித்தசெல்வன் வாழியே*
ஒண்டொடியாள் சூத்திரவதி யுறைமார்பன் வாழியே*
ஈங்குலகில் சடகோபற் கிதமுரைத்தான் வாழியே*
எழிற்பிரம்பின் செங்கோலை யேந்துமவன் வாழியே*
பாங்குடன் முப்பத்து மூவர் பணியுமவன் வாழியே*
பங்கயத்தாள் திருவடியைப் பற்றினான் வாழியே*
தேங்குபுகழரங்கரையே சிந்தைசெய்வோன் வாழியே*
சேனையர்கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே. 3

நம்மாழ்வார்

மேதினியில் வைகாசி விசாகத்தோன் வாழியே*
வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தான் வாழியே*
ஆதிகுருவாய்ப் புவியி லவதரித்தோன் வாழியே*
அனவரதஞ் சேனையர்கோ னடிதொழுவோன் வாழியே*

Koviloor Digital Library

நாதனுக்கு நாலாயிர முரைத்தான் வாழியே*
நன் மதுரகவிவணங்கும் நாவீறன் வாழியே*
மாதவன் பொற்பாதுகையாய் வளர்ந்தருள்வோன் வாழியே*
மகிழ்மாறன் சடகோபன் வையகத்தில் வாழியே* 4

ஸ்ரீமந்நாதமுனிகள்

ஆனிதனிலனுடத்திலவதரித்தான் வாழியே*
ஆளவந்தார்க் குபதேசமருளிவைத்தான் வாழியே*
பானுதெற்கிற் கண்டவன் சொற்பல வுரைத்தான் வாழியே*
பராங்குசனார் சொற்பிரபந்தம் பரிந்துகற்றான் வாழியே*
கானமுறத் தாளத்திற் கண்டிசைத்தான்வாழியே*
கருணையினாலுபதேசக் கதியளித்தான்வாழியே*
நானிலத்திற் குருவரையை நாட்டினான் வாழியே*
நலந்திகழும் நாதமுனி நற்பதங்கள் வாழியே. 5

உய்யக்கொண்டார்

வாலவெய்யோன் தனைவென்ற வடிவழகன் வாழியே*
மால்மணக்கால் நம்பிதொழும்மலர்ப்பதத்தோன் வாழியே*
சீலமிகுநாதமுனி சீருரைப்போன் வாழியே*
நாலிரண்டு மையைந்தும் நமக்குரைத்தான் வாழியே*
நாலெட்டினுட்பொருளை நடத்தினான் வாழியே*
மாலரங்க மணவாளர் வளமுரைப்போன் வாழியே*
வையமுய்யக் கொண்டவர்தாள்வையகத்தில் வாழியே. 6

மணக்கால்நம்பி

தேசமுய்யக்கொண்டவர்தாள் சென்னிவைப்போன்வாழியே*
தென்னரங்கர் சீரருளைச் சேர்ந்திருப்போன் வாழியே*
தாசரதி திருநாமம் தழைக்கவந்தோன் வாழியே*
தமிழ்நாதமுனியுகப்பைத் தாபித்தான் வாழியே*
நேசமுடனாரியனை நியமித்தான்வாழியே*
நீணிலத்தில் பதின்மர்கலை நிறுத்தினான் வாழியே*
மாசிமகந்தனில்விளங்க வந்துதித்தான் வாழியே*
மால்மணக்கால் நம்பி பதம் வையகத்தில் வாழியே. 7

ஸ்ரீ ஆளவந்தார்

மச்சணியும் மதிளரங்கம் வாழ்வித்தான் வாழியே*
மறைநான்கு மோருருவில் மகிழ்ந்துகற்றான் வாழியே*
பச்சையிட்ட இராமர்பதம் பகருமவன் வாழியே*
பாடியத்தோ னீடேறப் பார்வைசெய்தான் வாழியே*

Koviloor Digital Library

கச்சிநகர்மாயனிரு கழல் பணிந்தோன் வாழியே*
கடக வுத்தராடத்துக்காலுதித்தான் வாழியே*
அச்சமறமனமகிழ்ச்சியணைந்திட்டான் வாழியே*
ஆளவந்தார் தாளிணைகளனவரதம் வாழியே* 8

பெரிய நம்பிகள்

அம்புவியில் பதின்மர்கலை யாய்ந்துரைப்போன் வாழியே*
ஆளவந்தார்தாளிணையே யடைந்துய்ந்தோன் வாழியே*
உம்பர்தொழுமரங்கேசர்க் குகப்புடையான் வாழியே*
ஒங்குதனுக் கேட்டைதனி லுதித்தபிரான் வாழியே*
வமபவிழ்தார் வரதருரை வாழிசெய்தான் வாழியே*
மாறனேர்நம்பிக்கு வாழ்வளித்தான் வாழியே*
எம்பெருமானார் முனிவர்க் கிதமுரைத்தான் வாழியே*
எழில்பெரிய நம்பிசரணினிதூழிவாழியே* 9

திருக்கச்சிநம்பிகள்

மருவாருந் திருமல்லி வாழவந்தோன் வாழியே*
மாசிமிருகசீரிடத்தில் வந்துதித்தான் வாழியே*
அருளாளருடன் மொழிசொல்லதிசயித்தோன் வாழியே*
ஆறுமொழி பூதூரர்க் களித்தபிரான் வாழியே*
திருவாலவட்டம்செய்து சேவிப்போன் வாழியே*
தேவராசாட்டகத்தைச்செப்புமவன் வாழியே*
தெருளாரு மாளவந்தார் திருவடியோன் வாழியே*
திருக்கச்சி நம்பியிருதிருவடிகள் வாழியே* 10

எம்பெருமானார்

அத்திகிரியருளாளரடிபணிந்தோன் வாழியே*
அருட்கச்சி நம்பியுரை யாறுபெற்றோன் வாழியே*
பத்தியுடன் பாடியத்தைப் பகர்ந்திட்டான் வாழியே*
பதின்மர்கலையுட்பொருளைப் பரிந்து கற்றான் வாழியே*
சுத்தமகிழ்மாறனடி தொழுதுய்ந்தோன் வாழியே*
தொல்பெரியநம்பிசரண் தோன்றினான் வாழியே*
சித்திரையிலாதிரைநாள் சிறக்கவந்தோன் வாழியே*
சீர்பெரும்பூதூர் முனிவன் திருவடிகள் வாழியே. 11

எண்டிசையெண் ணிளையாழ்வாரெதிராசன் வாழியே*
எழுபத்துநால்வர்க்குமெண்ணான்குரைத்தான் வாழியே*
பண்டைமறையைத் தெரிந்த பாடியத்தோன் வாழியே*
பரகாலனடியிணையைப் பரவுமவன் வாழியே*

Koviloor Digital Library
தண்டமிழ்நூல் நம்மாழ்வார் சரணானான் வாழியே*
தாரணியும் விண்ணுலகும் தானுடையோன் வாழியே*
தெண்டிரைசூழ்பூதூரெம்பெருமானார் வாழியே*
சித்திரையிற் செய்யதிருவாதிரையோன் வாழியே. 12

மணவாளமாமுனிகள் அருளியவை

சீராருமெதிராசர் திருவடிகள் வாழி*
திருவரையிற்சாத்திய செந்துவராடை வாழி*
ஏராரும் செய்யவடி வெப்பொழுதும் வாழி*
இலங்கிய முந்நூல்வாழியிணைத் தோள்கள் வாழி*
சோராத துய்யசெய்ய முகத்சோதி வாழி*
தூமுறுவல்வாழி துணைமலர்க்கண்கள் வாழி*
ஈராறு திருநாமமணிந்த வெழில் வாழி*
இனிதிருப்போடு எழில் ஞானமுத்திரை வாழியே. 13

அறுசமயக் செடியதனை யடியறுத்தான் வாழியே*
அடர்ந்துவரும் குதிருட்டிகளையறத்துறந்தான் வாழியே*
செறுகலியைச் சிறிதுமறத்தீர்த்துவிட்டான் வாழியே*
தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே*
மறையதனின் பொருளனைத்தும் வாய்மொழிந்தான் வாழியே*
மாறனுரைசெய்த தமிழ்மறை வளர்த்தோன் வாழியே*
அறமிகு நற்பெரும்பூதூ ரவதரித்தான் வாழியே*
அழகாருமெதிராசர்அடியிணைகள் வாழியே. 14

நாள்பாட்டு

சங்கரபாற்கர யாதவபாட்டப் பிரபாகர் தங்கள்மதம்*
சாய்வுறவாதியர் மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடுநாள்*
வெங்கலியிங்கினி வீறுநமக்கிலையென்று மிகத்தளர்நாள்*
மேதினிநம்சுமை ஆருமெனத்துயர்விட்டு விளங்கியநாள்*
மங்கையராளி பராங்குசமுன்னவர் வாழ்வுமுளைத்திடுநாள்*
மன்னியதென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடுநாள்*
செங்கயல்வாவிகள் சூழ்வயல்நாளும் சிறந்தபெரும்பூதூர்ச்*
சீமானிளையாழ்வார்வந்தருளியநாள் திருவாதிரைநாளே. 15

கூரத்தாழ்வான்

சீராருந் திருப்பதிகள் சிறக்கவந்தோன் வாழியே
தென்னரங்கர் சீரருளைச் சேருமவன் வாழியே
பாராரு மெதிராசர் பதம்பணிந்தோன் வாழியே
பாடியத்தினுட்பொருளைப் பகருமவன் வாழியே

Koviloor Digital Library

நாராயணன்சமயம் நாட்டினான் வாழியே*
நாலூரான்தனக்கும் முத்திநல்கினான் வாழியே*
ஏராருந் தையிலத்தத்திங்குவந்தான் வாழியே*
எழில்கூரத்தாழ்வான்தன் னிணையடிகள் வாழியே. 16

முதலியாண்டான்

அத்திகிரி யருளாளரடி பணிந்தோன் வாழியே*
அருட்பச்சைவாரணத்திலவதரித்தான் வாழியே*
சித்திரையிற் புனர்பூசம் சிறக்கவந்தோன் வாழியே*
சீபாடிய மீடுமுதல் சீர்பெறுவோன் வாழியே*
உத்தமமாம் வாதூல முயரவந்தோன் வாழியே*
ஊர்திருந்தச் சீர்பாத மூன்றினான் வாழியே*
முத்திரையும் செங்கோலும் முடிபெறுவோன் வாழியே*
முதலியாண்டான் பொற்பதங்களூழிதொறும் வாழியே. 17

திருவரங்கத்தமுதனார்

எந்தாதை கூரேசரிணையடியோன் வாழியே*
எழில்மூங்கிற்குடி விளங்க விங்குவந்தோன் வாழியே*
நந்தாம லெதிராசர் நலம்புகழ்வோன் வாழியே*
நம்மதுரகவிநிலையை நண்ணினான் வாழியே*
பைந்தாம வரங்கர்பதம் பற்றினான் வாழியே*
பங்குனியி லத்தநாள் பாருதித்தோன் வாழியே*
அந்தாதி நூற்றெட்டு மருளினான் வாழியே*
அணியரங்கத் தமுதனா ரடியிணைகள் வாழியே. 18

எம்பார்

பூவளரும் திருமகளார் பொலிவுற்றோன் வாழியே*
பொய்கைமுதல் பதின்மர்கலைப் பொருளுரைப்போன் வாழியே*
மாவளரும் பூதூரான் மலர்ப்பதத்தோன் வாழியே*
மகரத்திற் புனர்பூசம் வந்துதித்தோன் வாழியே*
தேவுமெப்பொருளும் படைக்கத்திருந்தினான் வாழியே*
திருமலைநம்பிக் கடிமை செய்யுமவன் வாழியே*
பாவையர்கள் கலவியிருள் பகலென்றான் வாழியே*
பட்டர்தொழு மெம்பார் பொற்பதமிரண்டும் வாழியே. 19

Koviloor Digital Library

பட்டர்

தென்னரங்கர் மைந்தனெனச் சிறக்கவந்தோன் வாழியே*
திருநெடுந்தாண்டகப் பொருளைச் செப்புமவன் வாழியே*
அன்னவயல் பூதூரா னடிபணிந்தோன் வாழியே*
அனவரத மெம்பாருக் காட்செய்வோன் வாழியே*
மன்னுதிருக்கூரனார்வளமுரைப்போன் வாழியே*
வைகாசியனுடத்தில் வந்துதித்தோன் வாழியே*
பன்னுகலை நால்வேதப் பயன்தெரிவோன் வாழியே*
பராசரனாம் சீர்பட்டர் பாருலகில் வாழியே. 20

நஞ்சீயர்

தெண்டிரைசூழ் திருவரங்கம் செழிக்கவந்தோன் வாழியே*
சீமாதவனென்னும் செல்வனார் வாழியே*
பண்டைமறைத் தமிழ்பொருளைப் பகரவந்தோன் வாழியே*
பங்குனியி லுத்தரநாள் பாருதித்தான் வாழியே*
ஒண்டொடியாள் கலவிதன்னை யொழித்திட்டான் வாழியே*
ஒன்பதினாயிரப்பொருளை யோதுமவன் வாழியே*
எண்டிசையும் சீர்பட்ட ரிணையடியோன் வாழியே*
எழில்பெருகும் நஞ்சீய ரினிதூழி வாழியே. 21

நம்பிள்ளை

தேமருவும் செங்கமலத் திருத்தாள்கள் வாழியே*
திருவரையில் பட்டாடை சேர்மருங்கும் வாழியே*
தாமமணி வடமார்வும் புரிநூலும் வாழியே*
தாமரைக்கை யிணையழகும் தடம்புயமும் வாழியே*
பாமருவுந் தமிழ்வேதம் பயில்பவளம் வாழியே*
பாடியத்தின் பொருள்தன்னைப் பகர்நாவும் வாழியே*
நாமநுதல் மதிமுகமும் திருமுடியும் வாழியே*
நம்பிள்ளை வடிவழகும் நாடோறும் வாழியே. 22

காதலுடன் நஞ்சீயர் கழல்தொழுவோன் வாழியே*
கார்த்திகைக் கார்த்திகை யுதித்த கலிகன்றி வாழியே*
போதமுடனாழ்வார் சொற்பொருளுரைப்போன் வாழியே*
பூதூரான் பாடியத்தைப் புகழுமவன் வாழியே*
மாதகவாலெவ்வுயிர்க்கும் வாழ்வளித்தான் வாழியே*
மதிளரங்கரோலக்கம் வளர்த்திட்டான் வாழியே*
நாதமுனியாளவந்தார் நலம்புகழ்வோன் வாழியே*
நம்பிள்ளை திருவடிகள் நாடோறும் வாழியே. 23

Koviloor Digital Library

வடக்குத் திருவீதிப்பிள்ளை

ஆனிதனிற் சோதிநன்னா ளவதரித்தான் வாழியே*
ஆழ்வார்கள் கலைப்பொருளை யாய்ந்துரைப்போன் வாழியே*
தானுகந்த நம்பிள்ளை தாள்தொழுவோன் வாழியே*
சடகோபன் தமிழ்க்கீடு சாற்றினான் வாழியே*
நானிலத்தில் பாடியத்தை நடத்தினான் வாழியே*
நல்லவுலகாரியனை நமக்களித்தான் வாழியே*
ஈனமற வெமையாளு மிறைவனார் வாழியே*
எங்கள் வடவீதிப்பிள்ளையிணையடிகள் வாழியே. 24

பிள்ளைலோகாசார்யர்

அத்திகிரி யருளாள ரனுமதியோன் வாழியே*
ஐப்பசியில் திருவோணத் தவதரித்தான் வாழியே*
முத்திநெறி மறைத்தமிழால் மொழிந்தருள்வோன் வாழியே*
மூதரிய மணவாளன் முன்புதித்தான் வாழியே*
நித்தியம் நம்பிள்ளைபதம் நெஞ்சில் வைப்போன் வாழியே*
நீள்வசன பூடணத்தால் நியமித்தான் வாழியே*
உத்தமமாம் முடும்பைநகருதித்தவள்ளல் வாழியே*
உலகாரியன்பதங்களூழிதொறும் வாழியே. 25

கூரகுலோத்தமதாசர்

சந்ததமுமாழ்வார்கள் தமிழ் வளர்த்தோன் வாழியே*
தாரணியிற் சிறுநல்லூர் தானுடையோன் வாழியே*
எந்தையுலகாரியனையிறைஞ்சுமவன் வாழியே*
இலகுதுலாவாதிரையிலிங்குதித்தோன் வாழியே*
இந்தவுலகத்தோர்க்கிதமுரைத்தோன் வாழியே*
எழில் வசனபூடணத்துக்கினிமைசெய்தான் வாழியே*
குந்திநகர் சிந்தைகொண்ட செல்வனார் வாழியே*
கூரகுலோத்தமதாசர் குரைகுழல்கள் வாழியே. 26

திருவாய்மொழிப்பிள்ளை

வையகமெண் சடகோபன் மறைவளர்த்தோன் வாழியே*
வைகாசிவிசாகத்தில் வந்துதித்தான் வாழியே*
ஐயனருண்மாரிகலையாய்ந்துரைப்போன் வாழியே*
அழகாருமெதிராசரடிபணிவோன் வாழியே*

Koviloor Digital Library

துய்யவுலகாரியன்தன் துணைப் பதத்தோன் வாழியே*
தொல் குருகாபுரியதனைத் துலக்கினான் வாழியே*
தெய்வநகர் குந்திதன்னில் சிறக்கவந்தோன் வாழியே*
திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகள் வாழியே. 27

மணவாளமாமுனிகள்

இப்வுவியி லரங்கேசர்க் கீடளித்தான் வாழியே*
எழில் திருவாய்மொழிப்பிள்ளை யிணையடியோன் வாழியே
ஐப்பசியில் திருமூலத் தவதரித்தான் வாழியே*
அரவரசப்பெருஞ்சோதி யனந்தனென்றும் வாழியே*
எப்புவியும் சிரீசைல மேத்தவந்தோன் வாழியே*
ஏராரு மெதிராச ரெனவுதித்தான் வாழியே*
முப்புரிநூல் மணிவடமும் முக்கோல்தரித்தான் வாழியே*
மூதரிவன் மணவாளமாமுனிவன் வாழியே. 28

திருநாள்பாட்டு

செந்தமிழ்வேதியர் சிந்தைதெளிந்து சிறந்துமகிழ்ந்திடுநாள்*
சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசுபொலிந்திடுநாள்*
மந்தமதிப் புவிமானிடர் தங்களை வானி லுயர்த்திடுநாள்*
மாசறு ஞானியர்சேரெதிராசர் தம் வாழ்வு முளைத்திடுநாள்*
கந்த மலப்பொழில்சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடுநாள்*
காரமர் மேனி யரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்*
அந்தமில் சீர்மணவாளமுனிப்பர னவதாரம் செய்திடுநாள்*
அழகுதிகழ்ந்திடு மைப்பசியில் திருமூலமதெனுநாளே. 29

ஸ்ரீமதே ரம்யஜாமாத்ரு முநீந்த்ராய மஹாத்மநே|
ஸ்ரீரங்கவாஸிநே பூயாத் நித்யஸ்ரீர் நித்ய மங்களம்||

Koviloor Digital Library

மங்களச்லோகங்கள்

லக்ஷ்மீசரணலாக்ஷாங்க ஸாக்ஷீ ஸ்ரீவத்ஸவக்ஷஸே|
க்ஷேமங்கராய ஸர்வேஷாம் ஸ்ரீரங்கேசாய மங்களம்||

ச்ரிய: காந்தாய கல்யாணநிதயே நிதயே அர்த்திநாம்|
ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம்||

அஸ்து ஸ்ரீஸ்தநகஸ்தூரீவாஸநா வாஸித – உரஸே|
ஸ்ரீஹஸ்திகிரிநாதாய தேவராஜாய மங்களம்||

கமலாகுச கஸ்தூரீ – குங்குமாங்கித வக்ஷஸே|
யாதவாத்ரி நிவாஸாய ஸம்பத்புத்ராய மங்களம்||

ஸ்ரீமத்யை விஷ்ணுசித்தார்யமநோ – நந்தந–ஹேதவே|
நந்த – நந்தந – ஸுந்தர்யை கோதாயை நித்யமங்களம்||

ஸ்ரீநகர்யாம் மஹாபுர்யாம் தாம்ரபர்ணி – உத்தரேதடே|
ஸ்ரீதிந்த்ரிணீ மூலதாம்நே சடகோபாய மங்களம்||

ஸ்ரீமதாலி – ஸ்ரீநகரீ – நாதாய கலிவைரிணே|
சதுஷ்கவிப்ரதாநாய பரகாலாய மங்களம்||

ஸ்ரீமந்மஹாபூதபுரே ஸ்ரீமத்கேசவ யஜ்வந:|
காந்திமத்யாம் ப்ரஸூதாய யதிராஜாய மங்களம்||

ஸ்ரீமதே ரம்யஜாமாத்ருமுநீந்த்ராய மஹாத்மநே|
ஸ்ரீரங்க வாஸிநே பூயாத் நித்யஸ்ரீ: நித்யமங்களம்||

மங்களாசாஸநபரை: மதாசார்யபுரோகமை:|
ஸர்வைச்ச பூர்வை: ஆசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம்||

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 30786

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ கோவிந்தராஜர் - புண்டரீகவல்லித்தாயார், திருப்பதி